தரம்

# 13

# இந்து நாகரிகம்

(TEACHERS' GUIDE - HINDU CIVILIZATION)

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

Web| www.nie.lk Email| info@nie.lk

# இந்து நாகரிகம்

**( TEACHERS' GUIDE - HINDU CIVILIZATION GRADE -13 )**

# தரம் - 13

# ஆசிரியர் வழிகாட்டி

**(2018 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது)**


**சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,**

**மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,**

**தேசிய கல்வி நிறுவகம்,**

**மஹரகம,**

**இலங்கை**

www.nie.lk

info@nie.lk

# இந்து நாகரிகம்

## தரம் - 13

## ஆசிரியர் வழிகாட்டி

தேசிய கல்வி நிறுவகம்
முதற் பதிப்பு - 2018

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம.

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி . திருமதி . ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**வண கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்.

தேசிய கல்வி நிறுவக இந்து சமயத் துறையின் ஊடாகத் தரம் - 13 இந்து நாகரிக புதியபாடத்திட்டத்திற்கான ஆசிரியர் வழிகாட்டியைத் தயாரித்து, பாடசாலைத் தொகுதிக்கு அறிமுகம் செய்து வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியை அடைகின்றோம்.

பாடசாலைகளில் சமய பாடம் கலைத்துறைப் பாடமாகக் கொள்ளப்பட்டாலும், வாழ்க்கையில் நேரடியாகப் பங்கெடுக்கும் விடயங்கள் பல அதில் உள்ளன. அதனாற் கலைத்துறை மாணவர்கள் மட்டுமன்றி, எல்லாத் துறையினரும் இந்து நாகரிக பாடத்தைக் கற்க முன்வர வேண்டும். இதற்கு இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பண சிந்தனை, முயற்சி என்பன தேவை. அவ்வகையில் இப்பாடத்தை மாணவர் விருப்புடன் பயிலக்கூடியதாக ஆசிரியரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படு கின்றது. இப்பாடம் பரீட்சைக்குரியது மட்டுமன்றி முழுவாழ்க்கைக்குத் தேவையான அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த ஆசிரியர் வழிகாட்டியானது இரண்டு பகுதிகளைக் கொண்டது.

- விடய உள்ளடக்க வழிகாட்டித் தொடர்
- பாடசாலை மட்டக் கணிப்பீடு என்பன அவையாகும்.

மாணவரிடம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சி மட்டங்கள் தொடர்பான கற்றற் பேறுகள், உத்தேச விடய உள்ளடக்க வழிகாட்டிகள், கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள், உசாத்துணைகள் என்பவற்றை உள்ளடக்கியதாக இந்நூலின் முதற்பகுதி அமைகின்றது. இவை யாவும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டலையே வழங்குகின்றன. எனவே, ஆக்கபூர்வமான ஆற்றல்களுக்கும் ஆய்வுச் சிந்தனைக்கும் ஏற்றதான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள ஆசிரியர்களுக்குப் பூரண உரிமை உண்டு.

ஆசிரியர் வழிகாட்டியின் இரண்டாம் பகுதியில் கற்றல் - கற்பித்தற் செயற் பாடுகளை மேலும் விருத்தி செய்வதற்குரிய பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக் கருவிகள் தவணைக்கு மூன்று என்ற ரீதியில் தரம் - 13 க்கு 9 கருவிகள் தங்கள் மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப தயாரித்துக் கொள்ளவும். இந்தக் கணிப்பீட்டுக் கருவிகள், வகுப்பறைக்கு வெளியேயும் மாணவர்கள் கற்பதற்குத் துணைபுரிவதுடன், குழுச் செயற்பாடு, ஆய்வுகள் என்பவற்றுக்கும் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் என்பவற்றின் விருத்திக்கும் இட்டுச் செல்லும் என நம்புகின்றோம்.

**திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

# கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும் :** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு :**
- **கலாநிதி . திருமதி . ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

- **வண. கலாநிதி மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,

**இணைப்பாக்கம் :** **திரு பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**விடய ஆலோசனை :**
- **பேராசிரியர். இரா.வை. கனகரத்தினம்**
(ஓய்வு) தமிழ்த் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர். பி. கோபாலகிருஷ்ண ஐயர்,**
வாழ்நாள் பேராசிரியர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர். எம்.வேதநாதன்**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **திருமதி. சாந்தி கேசவன்,**
தலைவர், இந்து நாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.

- **திருமதி நாச்சியார் செல்வநாயகம்,**
சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு), இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி,**
கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

- **கலாநிதி (திருமதி) எஸ். ஸ்ரீமுரளிதரன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **கலாநிதி (திருமதி) வி. பவநேசன்.**
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு.எஸ். முகுந்தன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு. எஸ். ரமணராஜா,**
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

- **திரு. என். சுபராஜ்,**
விரிவுரையாளர், இந்துநாகரிகம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

- **திரு.என். வாமன்,**
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

## எழுத்தாளர் குழு

**உள்வாரி** : - **திரு. பொன் ஜெயரூபன்**
உதவி விரிவுரையாளர்,
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**வெளிவாரி** - **திரு. பெ. பேரின்பராசா**
ஆசிரியர், மட்/களுதாவளை மத்திய மகா வித்தியாலயம்,
களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பு.

- **திருமதி ஆர். யோகானந்தம்,**
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
கொ/ நுகேகொட தமிழ் மகா வித்தியாலயம், நுகேகொட.

- **திருமதி என். சுதமதி**
ஆசிரியர், யாழ்/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, மீசாலை.

- **திரு. எஸ். கமலநாதன்**
ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு மேற்கு.

- **திரு. ரி. சுதர்சன்**
ஆசிரியர், யாழ்/நாவற்குழி மத்திய மகா வித்தியாலயம்,
நாவற்குழி.

- **திருமதி எம். சண்முகதாஸ்,**
ஆசிரியர், தி/ இ.கி. ச. ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி,
திருகோணமலை

- **கலாநிதி வீ. குணபாலசிங்கம்,**
ஆசிரியர், மட்/ மகிழடித்தீவு ம.மகா வித்தியாலயம், மட்டக்களப்பு.

- **திருமதி . எம். சிவகுமாரன்**
ஆசிரியர், கல்/ வாகரை தமிழ் மகா வித்தியாலயம், வாகரை

- **திரு. எஸ். கோபிநாத்**
ஆசிரியர், தி/கந் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம்,
கந்தளாய், திருகோணமலை.

- **திருமதி . எம். பேரருள்செல்வி**
ஆசிரியர், மத்/ஹட்/ஏன்பீல்ட் தமிழ் மகா வித்தியாலயம்,
டிக்கோயா, ஹட்டன்.

**கணனி வடிவமைப்பு** - **திரு. பொன் ஜெயரூபன்**
சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை,

**அட்டைப்படம்** - திரு. சதுர மதுசங்க

**காரியாலய உதவி** - திருமதி எஸ்.சி.பிரியதர்சனி
- திருமதி மங்கலிகா விஜயரதன
- திரு..டயஸ் அமரசிங்க

# உள்ளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | - i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | - iii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | - iv |
| கலைத்திட்டக் குழு | - v |
| 12.1 கற்றல் கற்பித்தல் முறைகள் | - 11 - 108 |
| 12.2 பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம் | - 109- 111 |

# செயற்பாடுகள்

## கற்றல் கற்பித்தல் முறைகள் - விளக்கம்

**தேர்ச்சி 6.0 :** இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1 :** இந்து தத்துவ சிந்தனைகளை அறிந்து, அவற்றை ஆதாரங்களுடன் எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 50

**கற்றற் பேறுகள் :**

- இந்து தத்துவச் சிந்தனைகளின் மூலங்களை அறிந்து, அவற்றைத் தொகுத்துக் கூறுவார்.
- வேதம், ஆகமம் முதலானவற்றில் காணப்படும் தத்துவச் சிந்தனைகளை இனங்கண்டு, முன்வைப்பார்.
- வேதத்துக்கும் ஆகமத்துக்கும் இடையிலான தொடர்புகளை விளக்கி எழுதுவார்.
- பிரஸ்தான திரயங்களான உபநிடதம், பிரம்மசூத்திரம், பகவத்கீதை என்பவற்றுக்கு இடையிலான ஒருமைப்பாட்டினைத் தொடர்புபடுத்திக் காட்டுவார்.
- இந்து தத்துவ சிந்தனைகள், பிற்கால தத்துவ சிந்தனைகளுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றமையையும், அவற்றின் உயர்வினையும் விளங்கி, மதிப்பளிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**6.1.1 இந்து தத்துவ சிந்தனைகள்**

- இந்து தத்துவத்தின் அடிப்படைச் சிந்தனைகள் வேத இலக்கியங்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளன.
- இந்து தத்துவத்தின் அடிப்படை நூல்கள் பிரஸ்தான திரயம் என அழைக்கப்படும். அவற்றில் உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை ஆகியன அடங்குகின்றன.
- இந்து சமயத்தின் மூலநூல்களில் ஒன்றான வேத இலக்கியங்களின் ஞானகாண்டப் பகுதியாக உபநிடத சிந்தனைகள் அமைந்துள்ளன.
- இந்து தத்துவ சிந்தனை என்பது மெய்ப்பொருள் ஆராய்ச்சியாகும். மெய்ப்பொருள் காண்பதே உயர்ந்த அறிவு ஆகும்.
- தத்துவம் என்பது பிரபஞ்ச நோக்குடையதும் இறைநெறியை இணைத்துக் கொண்டதுமாகும். தத்துவம் ஞான வேட்கையை வலியுறுத்துவது. இந்து தத்துவத்தின் உயர்ந்த இலட்சியம் முத்தியாகும். முத்திக்கு சாதனைகள் அவசியமாகும்.
- வேத இலக்கியங்களில் உள்ள 'ஏகம் சத்', 'தத் ஏகம்' என்னும் இறை உண்மைக் கருத்துக்கள் இந்து தத்துவக் கோட்பாட்டின் மூலமாகத் திகழ்கின்றன.
- இறை தத்துவங்கள் மட்டுமன்றி, இந்து மதத்தின் அடிப்படைச் சிந்தனைகளும் வேத இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன.

- வேத இலக்கியங்களில் உள்ள முழுமுதல் கடவுள் பற்றிய சிந்தனைகள், உயிர், கன்மம், மறுபிறப்பு, ஒழுக்கம் முதலானவை பற்றிய சிந்தனைகள்இந்து தத்துவங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன.
- வேத இலக்கியங்கள் தர்ம சிந்தனைகள் அனைத்திற்கும் மூலகாரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆச்சிரம தர்மம், குருகுல தர்மம் என்பன வேத இலக்கியங்களின் அடிப்படைக் கருத்துக்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.
- வேதங்களின் அந்தமான உபநிடதங்கள், இந்து தத்துவ மூலங்கள் என்ற வகையில் முதன்மை பெறுகின்றன.
- உபநிடத உரையாடல்களில் பிரமம், ஆன்மா, உலகம் தொடர்பான சிந்தனைகளைக் காணலாம். இவற்றில் பிரமம் யாவற்றுக்கும் மூலமானது என்னும் கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இவை உபநிடத மகாவாக்கியங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன.
- பிரச்சின உபநிடதம் - “உயர் பிரமம் ஒன்றே. அதற்கப்பால் ஒன்றுமில்லை “ என்று குறிப்பிடுவதன் மூலம் உலகம், ஆன்மா ஆகியவற்றை விட, பிரமம் உயர்வானது எனும் கருத்து வெளிப்படுகிறது.
- இவ்வாறு உபநிடதங்கள் பல தத்துவ சிந்தனைகளைக் கொண்டுள்ளதனாலேயே பிற்கால இந்து தத்துவத் துறைக்கு அவை முக்கிய மூலாதாரங்களாக அமைகின்றன.
- ஆகம இலக்கியங்கள் ஆலய வழிபாடுகளையும் அதனால் அடையப் பெறும் பயன்களையும் வெளிப்படுத்துகின்றன.
- சிவாகமங்களில் சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் ஆகிய நான்கு நெறிகள் உண்டு. இவற்றில் ஞான பாதமானது சைவ தத்துவக் கோட்பாட்டை உள்ளடக்கியதாக விளங்குகின்றது.
- சிவாகமங்களில் உள்ள பதி, பசு, பாச உண்மைகளும் அவற்றின் இயல்புகளும் அவற்றில் உள்ளவாறே, சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் கூறப்பட்டுள்ளன.
- இன்று கிடைக்கும் ஆகமங்களில் கிரண ஆகமம், பௌட்கர ஆகமம் என்பவை பிரதானமானவை.
- உபநிடத சிந்தனைகளைச் சுருங்கிய வடிவில் சூத்திரங்களாக வெளிப்படுத்திய நூல் பிரமசூத்திரமாகும்.
- உபநிடதங்களின் மையக் கருத்தாக விளங்கும் பிரமம் பற்றிய கோட்பாடு, பிரம சூத்திரத்தின் முதலாவது அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.
- இந்து தத்துவ சிந்தனைகளில் ஒன்றான அத்வைத வேதாந்தம் என்னும் சிந்தனை உபநிடதம், பிரமசூத்திரம் ஆகிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

- உபநிடதம், பிரம சூத்திரம், பகவத்கீதை ஆகிய மூன்று தத்துவ இலக்கியங்களுக்கும் (பிரஸ்தானதிரயம்) சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகிய மூவரும் உரை எழுதியுள்ளனர். இம்மூவரும் தமது தத்துவங்களுக்குப் பிரஸ்தான திரய நூல்களையே மூலப் பிரமாண நூல்களாகக் கொண்டுள்ளனர்.
- வேத, உபநிடத சிந்தனைகளுடன் பகவத்கீதை மிக நெருங்கிய தொடர்புடையது. உபநிடத உரையாடல்களுக்கும் பகவத்கீதை உரையாடலுக்கும் இடையில் மிக நெருக்கமான தொடர்பு உள்ளது.
- பகவத்கீதையானது வைணவ சமய இறைக் கோட்பாட்டைப் போதிக்கும் அதேவேளை முழுமுதல் கோட்பாடு, கடவுட் கோட்பாட்டுச் சிந்தனைகளையும் முன்வைக்கின்றது.
- பகவத்கீதை வீடுபேற்றிற்கான மார்க்கங்களாகக் கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என்பவற்றைக் குறிப்பிடுகின்றது.
- இந்து தத்துவ மரபு, வேத உபநிடதங்களையும் ஆகமங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும். ஆயினும் தமிழிலும் வேத, உபநிடத மரபினைத் தழுவிய மூலங்கள் விருத்தி பெற்றுள்ளன.
- வேதாகம மரபு, திருமுறைப் பாடல்களில் காணப்பட்டாலும் தமிழ் நூல் மூலங்களாக அவை விளங்குகின்றன. தேவாரங்கள்“வேதசாரம்” என அழைக்கப்படுகின்றன. அவ்வாறே, திருமந்திரம் “தமிழாகமம்” என்றும் போற்றப்படுகின்றது
- சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்களும் சைவசித்தாந்த மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.
- வேதம், ஆகமம், உபநிடதம், பிரமசூத்திரம் முதலானவற்றின் உரை (பாஷிய) நூல்களும் இந்து தத்துவ அடிப்படை நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

### 6.1.2 இந்து தத்துவ சிந்தனைகள் - வேதம்

- வேதம் எனும் அறிவு நூல்கள் இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகளைக் கொண்டுள்ளன.
- இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் எனும் நான்கு பிரிவுகளை உடையன. இவை கருமகாண்டம், ஞானகாண்டம் எனும் இரு பிரிவினுள் அடங்கும். இவ்விரு காண்டங்களும் இந்து தத்துவ சிந்தனைக்கான மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன.
- ஞானகாண்டம் உபநிடத சிந்தனையின் மூலப் பகுதியாக எடுத்துக் காட்டப்படுகின்றது. உபநிடத சிந்தனையின் மையக் கருத்துக்கள், வேத மந்திரங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.
- வேதப் பாடல்களில் பிரதானமாகக் கூறப்படும் மெய்யியல் சிந்தனை இறைவன் பற்றியதாகும். “ இயற்கைக்கும் மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட மேலான சக்தி ஒன்று உண்டு “ என்பதே இதன் பொருள்.

- வேதப் பாடல்களில் இயற்கைத் தெய்வ நம்பிக்கை, பல கடவுள் நம்பிக்கை, ஆகியன ஆரம்பத்தில் காணப்பட்டாலும் வேதங்களின் பிற்காலப் பாசுரங்களில் ஒருமைவாதக் கடவுட் கோட்பாடு காணப்படுகின்றது.
- “இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, யமன் முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அவ்வாறு அழைக்கப்படும் சக்தி ஒன்றே“ என இருக்குவேத பாசுரம் முதலாம் அத்தியாயம் 164 ஆம் பாடல் கூறுகிறது. இதனை, “ஏகம்சத் விப்ரா பகுதா வதந்தி” எனும் வேதப் பாடல் சித்தரிக்கிறது.
- இந்து தத்துவ வளர்ச்சியில் தத்துவம் சார்ந்த வினாக்களும் ஐயங்களும் முக்கியம் பெறுகின்றன. இதனை வேதப் பாடல்களில் காணலாம்.

  “எல்லாத் தேவரிலும் மேலான தேவர் யார்? ”

  நாம் எத்தேவருக்கு அவி சொரிவோம் ? ”

  எந்தத் தேவரைப் புகழ்ந்து பாடுவோம்?” என்பன போன்ற வினாக்கள் இருக்குவேதம் 10 ஆம் அத்தியாயத்தில் உள்ள 121 ஆம் பாடலில் காணப்படுகிறது. இதற்கு விடையாக பிரசாபதியே மேலான கடவுள் என்ற கருத்துமுளது.
- இருக்கு வேதம் 10 ஆம் அத்தியாயம் 129 ஆம் பாடலில் ‘இவ்வுலகம் எதனால் படைக்கப்பட்டது?’ என்ற வினா இடம் பெறுகிறது.
- வேதப் பாடல்கள், இறைவன் பற்றிய சிந்தனைகள் பல்வேறு படிமுறைகளில் வளர்ச்சி பெறுவதனை எடுத்துக் காட்டுகின்றன.

  ஆரம்பத்தில் பல கடவுளர் கோட்பாடு, பின் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற ஒரு கடவுட் கோட்பாடு. அதனைத் தொடர்ந்து தத்துவநிலையில் ஒருமைவாதக் கடவுட் கோட்பாடு என வளர்ச்சி பெற்றது. இதுபற்றி மகஸ்முல்லர் விபரிக்கிறார்.
  ஏகம் சத், தத் ஏகம் என்ற சிந்தனைகள் இதனை விளக்குகின்றன.
- பிரசாபதி எனும் இறைக் கோட்பாடு பிற்காலத்தில் பிரமம் எனும் முழுமைக் கோட்பாடாக (சிந்தனையாக) வளர்ச்சியடைந்ததெனலாம்.
- “மகத் தேவனாம் அசுரத்துவம் ஏகம். “ என வேதப் பாடல்கள் வருணிக்கின்றன. இதில் “தேவர்கள் பலவாயினும் அவற்றின் இயல்புகள் ஒன்றே“ எனும் கருத்து வெளிப்படுகிறது. இத்தகைய சான்றுகள், ஒரு கடவுள் கோட்பாடு வேதப் பாடல்களிலிருந்தே முதன்மை நிலை பெற்றதைச் சுட்டுகின்றன.
- இருக்கு வேதப் பாடல்களில் புருஷ சூக்தம், நாசதீய சூக்தம் முதலானவை இறைவனுக்கும் பிரபஞ்சப் படைப்பிற்கும் இடையிலான தொடர்பை வலியுறுத்துகின்றன. இறைவனைப் பிரபஞ்ச கர்த்தாவாகக் கூறும் மரபு, வேத இலக்கியப் பரப்பில் மட்டுமன்றி, மேலைத்தேய இறை மெய்யியலிலும் தனித்துவம் பெறுகிறது.
- வருண சூக்தம் முழுமுதற் கடவுட் கோட்பாட்டினையும் பிரபஞ்சக் கோட்பாட்டினையும் அறவியல் சிந்தனைகளையும் இணைப்பதாக அமைந்துள்ளது.

- உலக சிருஷ்டி என்பது மிகப் பழைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இறைவழிபாடு காரணமாகவே நிகழ்ந்தது எனும் நம்பிக்கை
  - இருக்கு வேதத்தில் மற்றொரு இடத்தில் 'இரணிய கர்ப்பம்' எனும் பொன் முட்டையில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என்ற கருத்து
  - பொதுவாக விரதம், தவம் முதலிய சாதனைகளாலேயே உலகு படைக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்ற கருத்து
  - பிரஜாபதி, விஷ்வகர்மன் முதலிய தேவர்கள் பிரபஞ்சப் படைப்புக் கடவுளர்களாக விளங்கினர் என்ற கருத்து என்பன அந்த நம்பிக்கைகளாகும்.
- புருஷசூக்தப் பாடல்கள் யாகத்தின் மூலம் உலகு படைக்கப்பட்டதாகக் கூறுகின்றன.
  - யாகத்தில் யாகக் கடவுள் ஆயிரம் கண்கள், ஆயிரம் கால்கள், ஆயிரம் கைகள் உடையவன். இவ் யாகக் கடவுளின் வடிவம் இவ்வுலகம் எங்கும் நிறைந்து நிற்கிறது எனவும் கூறப்படுகிறது.
  - இப்பிரபஞ்சத்தில் 1/4 பங்கு எமக்குத் தெரிகிறது. 3/4 பங்கு எமக்குத் தெரிவதில்லை என்றும் கூறுகின்றன.
- புருஷனுடைய வாயில் அக்கினியும் சுவாசத்தில் காற்றும் செவியில் திசைகளும் தலையில் ஆகாயமும் மனதில் சந்திரனும் கண்ணில் சூரியனும் தோன்றியதாக புருஷ சூக்தம் கூறுகிறது.
- இருக்குவேத 10 ஆம் மண்டலத்தின் 129 ஆம் பாடல் - நாஸதீய சூக்தப் பாடலில்: இயற்கை, உலகு என்பன எவ்வாறு படைக்கப்பட்டது என்பது தத்துவார்த்த உரையாடல் போலக் கூறப்பட்டுள்ளது.
  - "ஆரம்பத்தில் உலகம் ஆத்மாவைப் போல உண்மையானதாக இல்லை. அந்தரிட்சமும் அதற்கு மேல் உலகங்களும் இல்லை. ஆரம்பத்தில் ஆழமான நீர் இருந்ததா? இரவு, பகல் பற்றிய உண்மையும் இல்லை" என்பதாகும்.
- இயற்கை அம்சம் மட்டுமன்றி, உண்மை, தன்னடக்கம், பிற உயிர்களிடத்து அன்பு, துறவு முதலிய அறக் கோட்பாடுகளும் காணப்பட்டுள்ளன.
- ரிதம் என்பது இயற்கையைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் மனித செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் விளங்கியது. ரிதத்தின் பாதுகாவலனாகவும் ரிதத்தை நிலைநிறுத்துபவனாகவும் வருணன் விளங்கியதால், வருணனை ரிதஸ்ய கோபா, ரிதஸ்வான், ரிதாயு எனப் பல பெயர்களால் அழைத்தனர்.
- ரிதத்தை மீறுபவர் பாவத்திற்கும் பொய் வாழ்விற்கும் உட்படுவர் என வருண சூக்தம் கூறும்.
- ஆறு, கடல், மலை ஆகிய இயற்கை அம்சங்களை நிலைநிறுத்தும் சக்தியாக ரிதம் விளங்குவதாகச் சொல்லப்படுகிறது.

- கன்மம், மறுபிறப்புத் தத்துவத்துடன் இணைவுற்ற மெய்யியல் சிந்தனையாக ரிதம் விளங்குகிறது. தீமை செய்தவரையும் பாவம் செய்தவர்களையும் ரிதம் தண்டிக்கும். நீதி, தருமம், சட்டம் முதலிய சிந்தனைகளுடன் தொடர்புடையதாக ரிதம் இருந்தது என்பதை இது காட்டுகிறது.
- யம சூக்தப் பாடல்கள் வேண்டுதல்கள், கன்மம், மறுபிறப்பு என்பன பற்றி விரிவான செய்திகளைத் தருகின்றன.

  தெய்வ வழிபாடு எனும் கர்மத்தில் ஈடுபட்டவன், தேவ உலகமாகிய சுவர்க்கத்தை அடைகிறான். “என்ற குறிப்பில் இறைசிந்தனையே உயர் கருமமாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.
- ஆன்மா தனித்துவமானது என்பதும் உடல் வேறு; ஆன்மா வேறு என்பதும் இருக்கு வேதப் பாடல்களில் கூறப்பட்டுள்ளது.
- ஒருவர் செய்த நல்ல செயல், தீய செயல் என்பவற்றுக்கு ஏற்ப, அவற்றின் பயனை அனுபவிக்குமுகமாக ஆன்மா உடம்பை விட்டுப் பிரிந்த பின்பு, விண்ணுலகு அல்லது யம உலகு செல்லும் எனப்படுகிறது.

  ” நன்மைகளுடன் விண்ணுலகம் நோக்கிச் செல்வாயாக” எனும் வேண்டுதல் இருக்கு வேதத்தில் ஆங்காங்கே காணப்படுகிறது.
- வேதப் பாடல்களில் இயற்கை, உலகம் பற்றிய சிந்தனைகளும் இயற்கை, உலக சிருஷ்டி பற்றிய கருத்துக்களும் காணப்படுகின்றன.

### 6.1.3 இந்து தத்துவ சிந்தனைகள் - உபநிடதம் அறிமுகம்

- இந்து தத்துவ மூலங்களில் பிரஸ்தானத்திரயம் முக்கியத்துவம் வாய்ந்தது.
- பிரஸ்தானத்திரயம் என்பது முடிவான பிரமாணமாக அமைந்த மூன்று நூல்கள் என்பது பொருள். அவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பனவாகும்.
- வேதங்களின் சாரமாக அமைந்தவை உபநிடதங்கள். மெய்ப்பொருள் ஆராய்ச்சியில் உபநிடங்களின் போக்கு எத்தகையது என்று கூறுவது பிரமசூத்திரம். உபநிடதங்களில் உள்ள கருத்துக்களையெல்லாம் தெளிவுபடுத்துவது பகவத்கீதை.
- வேதங்களின் இறுதியம்சமாகிய உபநிடதங்கள் வேத சிந்தனைகளின் முடிவை வெளிப்படுத்துவதனால் வேதாந்தம் எனப்படுகிறது.
- உபநிடதங்கள் ஞானகாண்டம் எனவும் அழைக்கப்படும். இவை பிரம தத்துவத்தையும் ஆன்ம தத்துவத்தையும் தெளிவாக விபரிக்கும் பகுதிகளாக உள்ளன.
- பிரமம் பற்றிய அறிவும் தன்னைப் பிரமமாக உணர்வதுமே உபநிடத உரையாடல்களின் அடிப்படைப் பொருளாகும்.

- உபநிடதம் என்பது, உப + நி + சத் எனப் பிரிக்கப்பட்டு குருவுக்கு மிக அண்மையிலிருந்து அவர் கூறுகின்ற உண்மைகளைச் சிரத்தையுடன் கற்றல் எனப் பொருள்படும். அதாவது, "பிரமஞானத்தை உணர்த்தும் ஒரு ஆசிரியரின் அடியில் நெருங்கியிருந்து அம்மறைபொருளைச் சிரத்தையுடன் கேட்டல்" எனப் பொருள்படும்.
- உபநிடதங்கள் பல, உபநிடதமானது மாணவன் குருவை நெருங்கியிருந்து பிரமஞானத்தைக் கேட்பதனையும், ஒருவனைப் பிரமஞானத்தில் இணைப்பதையும் உரையாடல்களாகக் கொண்டுள்ளதால் 'ஞான உபதேசங்கள்' எனப்படுகின்றன.
- பொருத்தமான சீடர்களுக்கே மறைபொருட் தத்துவங்களான உபநிடதஞானம் போதிக்கப்பட்டதனால் இவை 'இரகசியங்கள்' எனவும் அழைக்கப்பட்டன.
- இவ்வுபநிடதங்கள் பிரம அறிவை மட்டுமன்றி, ஒருவனது உள்ளம் அமைதி பெறவும், ஞான உணர்வை அடையவும் வழிகாட்டுகின்றன.
- ஆன்மாவுக்குப் பிரமஞானத் தெளிவை ஏற்படுத்தக் குருவின் வழிகாட்டல் அவசியம் என்பதையும் இந்து தத்துவ தரிசனத்தில் குருவின் பெருமையை எடுத்துக் காட்டும் உரையாடல்களாகவும் இவை விளங்குகின்றன.
- உபநிடதங்கள் ஒரே பிரமத்தைக் குறிப்பிடுவதோடு நிர்க்குண, சகுணப்'ஏகம் சத் பிரம நிலைகளையும் விளக்குகின்றன. வேதங்களில் கூறப்பட்ட 'ஏகம் சத்' என்பதே உபநிடதங்களில் தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி எனும் மகாவாக்கியங்களாக விரிவடைந்தன என்பர்.
- மேலான சக்தியாகிய பிரமத்தை அடையச் செய்யும் சிந்தனைகள், குருசீட உரையாடல்கள் என்பன உபகதைகள், வினாவிடைகள், செய்முறைகள், ஐயங்கள் ஆகிய உத்திகளினடிப்படையில் உள. இவை ஞானம் பெற்ற ரிஷிகளின் அனுபவ வெளிப்பாடாகும்.
- உபநிடதங்கள் முந்திய கால உபநிடதங்கள் என்றும் பிந்திய கால உபநிடதங்கள் என்றும் கூறப்படும். பிருகதாரணிய, சாந்தோக்கிய உபநிடதங்கள் முற்கால உபநிட தங்களில் அடங்கும். 108 உபநிடதங்கள் பிரதானமானவை.
- உபநிடதங்களில் சில உரைநடையிலுள்ளன. ஆயினும் சுவேதாஸ்வர உபநிடதம், கட உபநிடதம் என்பன செய்யுள் நடையில் காணப்படுகின்றன. பொதுவாகவே உபநிடதங்கள் வினா விடை வடிவிலேயே காணப்படுகின்றன.
- உபநிடதங்கள் எழுந்த சூழ்நிலை-
  - * கிரியைகளுக்கு எதிர்நிலையாக எழுந்தவை.
  - * கிரியைகள் மூலமாக வாழ்வில் முழுமை பெறமுடியாத நிலையில் ஏற்பட்ட ஆன்மீகத்தேடல்.
- இவை கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் எழுந்தவையாகக் கூறப்படுகின்றன. உபநிடதங்கள் எழுந்த காலம் தத்துவ சிந்தனைக் காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது.
- உபநிடத உரையாடல்களும் சிந்தனைகளும் தத்துவ எழுச்சிக்கான வினாவிடைகளாக உள்ளன.

  உ-ம்: மேலான உண்மைப் பொருளின் தன்மை யாது? (சாந்தோக்யம்)
  கல்வியாலும் செல்வத்தாலும் ஞானநிலை, இறவாநிலை அடையலாமா? (பிருகதாரணியம்)
  உடம்பை விட்டுப் பிரிந்த பின் ஆன்மாவின் நிலை யாது? (கட உபநிடதம்)

- யாகக் கிரியைகளின் தத்துவார்த்த உண்மையை வெளிப்படுத்த எழுந்த உபநிடதங்கள் 'ஞானமின்றி கிரியை செய்ய முடியாது; அதுபோல கிரியா கடமையின்றி ஞானமும் பெறமுடியாது' எனும் கருத்தை விபரிக்கின்றன.
- உபநிடத உரையாடல்களில் கிரியைகளால் மட்டுமே ஆன்மீக நன்மை அடையலாம் என்ற சிந்தனை வலுவிழந்து, கிரியைகளுக்கு ஆன்மீக உணர்வு அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டது.
- கட உபநிடத உரையாடல்களில் யாகத்தின்போது ஏற்படும் ஞானத்திற்குத் தடையான அம்சங்களைப் பற்றியே விமர்சிக்கின்றன.
- பிருகதாரணிய உபநிடதத்தில் தத்துவஞானம் நோக்கிய ஒருவனுடைய உபாசனைகளையும் வேண்டுதலையும் கொண்ட பாடல் துன்ப விடுதலையை நோக்காகக் கொண்டது.

  "என்னைத் தீமையில் இருந்து நன்மைக்கு இட்டுச் செல்வாயாக. என்னை இருளில் இருந்து ஒளிக்கு இட்டுச் செல்வாயாக.
  "என்னை இறப்பில் இருந்து இறவாமைக்கு இட்டுச் செல்வாயாக. "

  தாம் பெறும் அறிவு, அடையப் போகும் உலகு என்பன ஆன்மார்த்தமான மன அமைதியையும் சாந்தியையும் நிலைநாட்டும் இடமாக இருக்க வேண்டும் என்பதை இவ் உபாசனைப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

## பிரமம்

- ஒவ்வொரு குரு சீட உரையாடலும் வெவ்வேறு விடயங்களைக் கூறினாலும் பொதுவாகப் பிரமம் பற்றியதாகவே அவை உள்ளன. உபநிடதங்கள் பிரமதத்துவத்தை கூறுகின்றபோது பிரமத்தை அறியும் ஞானமார்க்கம் பற்றியும் அதற்கான வாழ்வியல் முறைகளையும் கூறுகின்றன.
- பிரமம் என்பதன் பொருள் தானாகவே இயங்குவது. அதாவது உலகின் மூல காரணமானது எனப் பொருள்படும்.
- முண்டக உபநிடதமானது, 'சிலந்தியானது தன்னிடம் இருந்து நூலை உண்டாக்கி அதைப் பற்றி நிற்கிறது. அதுபோலவே பிரமம் தன்னிடமிருந்து உலகைப் படைத்துள்ளது' எனும் கருத்தை வலியுறுத்துகிறது.

  "மண்ணிலிருந்து சட்டி, பானைகள் முதலியவற்றை உருவாக்குவது போல பிரமத்திலிருந்தே உலகப் பொருட்கள் அனைத்தும் மாற்றமடைந்து தோற்றம் பெற்றுள்ளன" என்ற குறிப்பும் உள்ளது.

- சுவேதாஸ்வர உபநிடதத்தில், "எள்ளில் எண்ணெய் உள்ளடங்கி இருப்பது போலவும் தயிரில் நெய் போலவும் விறகில் தீ போலவும் பிரம தத்துவம் மறைந்துள்ளது" எனக் கூறப்படுகிறது. இக் கருத்து திருநாவுக்கரசரின் "விறகில்தீயினன்..." எனும் தேவாரப் பாடலினூடாகவும் வெளிப்படுத்தப்படுகிறது.
- பிரகதாரணிய உபநிடதத்தில், இந்த உலகின் அடிப்படை யாது? எனும் வினா இடம்பெறுகிறது. தத்துவஞான ஆராய்ச்சித் தொடக்கத்திலும் ஆதி கிரேக்கத்திலும் இதே வினாவே காணப்பட்டது.
- 'இவ்வுலகின் அடிப்படை பிரமமே' என உபநிடதங்கள் விடை பகர்கின்றன. உ-ம்:"எதனால் இவ்வுலகம் தோன்றி, எதனால் இவ்வுலகம் இயங்கி எதில் இவ்வுலகம் ஒடுங்குகின்றதோ அதுவே பிரமம் " என்னும் கருத்து
- பிரமமும் ஆன்மாவும் ஒன்று என உபநிடதங்களில் குறிப்பிடுவதனால் ஆன்மாவைக் கொண்டே பிரமத்தை அறிந்து கொள்ள முடியும் என்பது பெறப்படுகிறது.
- தத்துவமஸி, அகம்பிரமாஸ்மி எனும் மகாவாக்கியங்கள் ஆன்மாவே பிரமம், பிரமமே ஆன்மா என்பதனைச் சுட்டுகின்றன. பிரமம் உலகை இயக்கும் சக்தியாகவும் ஆன்மா உடலை இயக்கும் சக்தியாகவும் விளங்குவதனால் இரண்டும் சடத்தை இயக்கும் செயற்பாட்டில் ஒன்றுபடுகின்றன.
- "பிரமம் சொல்லால் வருணிக்க முடியாதது. சொல் யாவும் பிரமத்தில் இருந்தே தோற்றம் பெற்றுள்ளன. பிரம விசாரத்தில் ஈடுபட்ட ஞானிகள், இதுவல்ல; இதுவல்ல (நேதி நேதி)" என்று பிரமத்தை அறியும் வழியை விளக்கினர்.
- இவற்றின் அடிப்படையில் பிரமம் 3 தன்மைகளால் விளக்கப்பட்டுள்ளது. அவை சத்தியம், ஞானம், ஆனந்தம் என்பன. இவற்றினால் பிரமம் உண்மையானது; பேரறிவானது; எல்லையில்லா ஆனந்தம் உடையது என்பதும் வலியுறுத்தப்பட்டுளது.
- சாந்தோக்கிய உபநிடதத்திலே சிறிய ஆலம் விதையிலிருந்து பெரிய ஆலமரம் தோன்றுவது போல நுண்ணிய பிரமத்தில் இருந்து உலகம் படைக்கப்பட்டது எனவும் நீரில் கலந்த உப்பானது கண்ணுக்குத் தெரியாது எங்கும் வியாபித்து இருப்பதுபோல பிரமம் கண்ணுக்குத் தெரியாது எங்கும் நிறைந்துள்ளது என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.
- சுவேதாஸ்வர உபநிடதம் 'அ' எனும் எழுத்திலிருந்து எல்லா எழுத்துக்களும் தோன்றுவது போல பிரமத்திடமிருந்தே உலகம் தோற்றம் பெற்றுளது எனக் கூறுகிறது. இதே கருத்து சைவசித்தாந்த சாத்திர நூலான திருவருட்பயனில் "அகரவுயிர்போல்... எனும் பாடல் மூலம் விளக்கப்பட்டுளது. இது இந்து சிந்தனை மரபுகளுக்கு உபநிடதங்கள் அடிப்படை என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.
- உபநிடதங்களில் பிரமத்தின் உண்மை விளக்கப்படுவதுடன் அதனை அடையும் வழிகளாக உபாசனைகளும் கூறப்பட்டுள்ளன. பிரமத்தை பிரம்ம உபாசனையின் வழிவந்த ஞானத்தினால் அறிந்து கொள்ள முடியும். சிரவணம், மனனம், நித்தியாசனம் எனும் ஞான வழிகளும் கூறப்பட்டுள்ளன. ஞானத்தின் மூலம் ஒருவன் பூரண விடுதலை, சுதந்திரம், பூரண மன அமைதி பெறுவான் எனவும் உபநிடதங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

**ஆன்மா**

- உபநிடதங்களில் ஆன்மா பற்றிய சிந்தனைகள் மனித வாழ்வியல் சிந்தனைகளுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.
- ஆன்மா வேறு; உடல் வேறு என்பது 'வண்டியில் கட்டிய குதிரை போன்றது ஆன்மா' என விளக்கப்பட்டுள்ளது.
- காண்பது கண் அல்ல கண்ணைக் கருவியாகக் கொண்டு ஆன்மாவே காண்கிறது. அது போலவே ஆன்மா பேசுகிறது, ஆன்மா கேட்கிறது என்றும் கூறப்பட்டுளது.
- பிரமம் பரமாத்மா என்றும் ஆன்மா ஜீவாத்மா என்றும் கூறப்பட்டுளது.
- ஆன்மா பிரமம் பற்றி அறிவது பரவித்யா எனவும் உலக நிகழ்வுகள் பற்றி அறிவது அபரவித்யா எனவும் கூறப்படுகிறது. பிரமம் பற்றி அறிவதற்கு துறவு, தியானம், புலனடக்கம், பற்றறுத்தல், ஞானம் என்பன முக்கியமாகும்.
- ஆன்மா, ஐந்து கோசங்களால் போர்த்தப்பட்டு சூக்குமமாக நுண்ணிதாக விளங்குகிறது. உடம்பு அன்னமயகோசமாகும். இத்தகைய உடம்பினுள்ளே ஆன்மா உருவமற்ற உணர்வாக விளங்குகிறது.
- ஆன்மாக்கள் தாம் செய்த வினையின் பிரகாரம் பல்வேறு பிறவிகளைப் பெறுகின்றன என்பது பல உதாரணங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
  நெற்கதிர் முற்றி உதிர்ந்து மீண்டும் முளைப்பது போல்" ஆன்மா ஒரு பிறவி விட்டு மற்றொரு பிறவியை எடுக்கிறது.
- பாவ வினைகளுக்கும் இறப்பிற்கும் உபநிடத ரிஷிகள் பயந்தார்கள் என்பது "என்னை இறப்பிலிருந்து இறவாமைக்கு இட்டுச் செல்" என்பதனூடாக வெளிப்படுகிறது.
- முண்டக உபநிடதம் - பற்றுக்களுடன் வாழும் ஒருவன் அப்பற்றுக்களை அறுக்க அப்பற்றுக்களுடனேயே பிறக்கிறான் எனக் குறிப்பிடுகிறது.

குறிப்பு: (உபநிடதம் கூறும் உலகம், கன்ம மறுபிறப்பு, அறக் கருத்துக்கள் என்பவற்றை ஆசிரியர் தேடிக் கற்பிக்க வேண்டப்படுகிறது.

## 6.1.4 இந்து தத்துவ சிந்தனைகள் - பிரமசூத்திரம் அறிமுகம்

- பிரஸ்தானத்திரயங்களுள் ஒன்றான பிரமசூத்திரம் பாதராயணர் என்பவரால் இயற்றப்பட்டது.
- பிரமசூத்திரமானது வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம், உத்தரமீமாம்ச சூத்திரம் முதலான பெயர்களால் வழங்கப்படுகிறது.
- பிரமசூத்திரம் என்பது பிரமம் ஆகிய பரம்பொருளைப் பற்றி விளக்கும் நூற்பாவாலான நூல் எனப் பொருள்படும்.

**தோற்றத்துக்கான பின்னணி**

- உபநிடதங்கள் எல்லாம் ஒருகாலத்திலோ, ஓர் இடத்திலோ, ஒருதரப்பட்ட அறிஞராலோ இயற்றப் பெறாத காரணத்தால் இவற்றில் கூறப்படும் செய்திகள் ஒரே தன்மையதாய் அமையவில்லை.
- உபநிடதங்கள் அவ்வப்போது பல்வேறு தரப்பட்ட குரு - சீடர்களிடையே நிகழ்ந்த உரையாடல்களின் தொகுப்பாகும். இதனால் இவற்றில் ஒன்றைப் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களும் சில சமயம் நேர்மாறான, முரண்பாடான விடயங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான காரணங்களால் உபநிடதங்களை எளிதில் புரிந்து கொள்ள முடியாத தன்மை காணப்பட்டது.
- இதனால் உபநிடதங்களில் காணப்படும் சில முரண்பாடுகளை நீக்கி, ஒருமைப்பாட்டைக் கண்டறிந்து, பொருளைத் தெளிவாக்கி வரையறை செய்யவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. அதற்காக எழுந்ததே பிரமசூத்திரம்.
- பாதராயணர், உபநிடதக் கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து அவற்றின் திரண்ட கருத்துக்களை பிரமசூத்திரம் என்ற பெயரில் இயற்றினார்.

**நூல் அமைப்பு**

- 545 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் நான்கு அத்தியாயங்களை உடையது. அவை சமன்வயம், அவிரோதம், சாதனம், பலம் என்பனவாகும்.
- நான்கு அத்தியாயங்களும் மேலும் பல அதிகரணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**பொருள் மரபு**

- பிரம சூத்திரத்தின் முதல் அத்தியாயம் சமன்வயம். இது 138 சூத்திரங்களை உடையது. உபநிடதங்களில் உள்ள முரண்பாடுகளை இசைவுபடுத்தி, சில அடிப்படையான பொதுக்கருத்துக்களைக் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. பிரபஞ்சத்தின் தோற்றம், முடிவு தொடர்பான கேள்விகளுக்கான விடைகள் இதில் உள்ளன.
- அவிரோதம் - இது பிரம சூத்திரத்தின் இரண்டாம் அத்தியாயம் ஆகும். இது 150 சூத்திரங்களைக் கொண்டது. பிரபஞ்சத்தின் இருப்புக்கு பிரமமே காரணம் என்ற கருத்துடன் முரண்படுகின்ற பிற தத்துவப் பிரிவுகளை மறுத்துரைப்பதாக இந்த அத்தியாயம் அமையப் பெற்றுள்ளது.
- சாதனம் - இது பிரமசூத்திரத்தின் மூன்றாவது அத்தியாயம். இதில் 182 சூத்திரங்கள் உள்ளன. வாழ்வின் தன்மை, அதன் குறைபாடுகள், உலக வாழ்வில் துன்பங்களிலிருந்து விடுபட்டு, பிரமஞானத்தை அடைவதற்கான வழிமுறைகள் பற்றி இந்த அத்தியாயம் குறிப்பிடுகின்றது.
- பலம் - பிரமசூத்திரத்தின் இறுதி அத்தியாயமான இதில் 75 சூத்திரங்கள் உள்ளன. பிரமசூத்திரத்தின் நான்கு அத்தியாயங்களுள்ளும் இது அளவில் சிறியது. இறப்பு, மறுமை, பிரமஞானத்தை அடைந்தவன் பெறுகின்ற பயன் என்பன இதில் உள்ளது.

**பிரமசூத்திரத்தின் சிறப்பு**

- ஆதிசங்கரர், இராமானுஜர், மத்துவர், பாஸ்கரர், ஸ்ரீகண்டர் (நீலகண்டர்), நிம்பாக்கர், ஸ்ரீபதி, வல்லபர், சுகர், பலதேவர் ஆகியோராலும் நவீன இந்து தத்துவ அறிஞரான டாக்டர் இராதாகிருஷ்ணன் முதலானோர்களாலும் உரைகள் செய்யப்பட்ட சிறப்புக்குரியது.
- ஆன்ம ஈடேற்றமே உண்மையான சமயத்தின் குறிக்கோள். அவ்வகையில் பிரம சூத்திரமும் அதற்கு வழிகாட்டுகின்றது.
- பிரமசூத்திரம் இந்திய தத்துவ ஆராய்ச்சியை மிக உன்னதமான ஒரு நிலைக்கு உயர்த்தியுள்ளது. குறிப்பாகத் தர்க்கமுறைகளுக்கான திறவுகோலாகவும் பிரமசூத்திரம் உள்ளது.

  மேற்கூறிய காரணங்களால் இந்திய தத்துவ சிந்தனைகளின் வற்றாத ஊற்றாகப் பிரமசூத்திரம் விளங்குகின்றது என்பதை உறுதிப்படுத்தலாம்.

### 6.1.5 இந்து தத்துவ சிந்தனைகள் - பகவத்கீதை அறிமுகம்

- மகாபாரதத்தின் பீஷ்ம பருவத்தில் 25வது அத்தியாயத்தில் இருந்து 42வது அத்தியாயம் வரையில் பகவத்கீதை உள்ளது.
- அர்ச்சுன விஷாத யோகத்துடன் ஆரம்பிக்கின்ற கீதை 18 அத்தியாயங்களையும் 700 சுலோகங்களையும் கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. பதினெட்டு அத்தியாயங்களும் 18 யோகங்களின் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.
- 18 யோகங்களும் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்னும் மூவகை யோகங்களின் ஊடாக மெய்யியற் சிந்தனைகளையும் ஆன்ம ஈடேற்றத்திற்கான வழிகளையும் விபரிக்கின்றன.
- இந்து தத்துவ சிந்தனைகளைத் தெளிவாக விளக்குவதனால் உபநிடதங்களைப் பசு எனவும், பகவத்கீதையை பால் எனவும் உருவகப்படுத்தும் மரபு உண்டு.
- உபநிடதங்களுக்கு ஒப்பாகத் தோன்றிய ஒரு இலக்கிய வடிவம் பகவத்கீதை எனக் கொள்ளும் மரபுண்டு.

**மெய்யியற் சிந்தனைகள்**

- பகவத்கீதை பரம்பொருள், கடவுள், ஆன்மா, கன்மம், மறுபிறப்பு, உலகம், அறம், விடுதலை தொடர்பான மெய்யியற் சிந்தனைகளைக் கொண்டது.
- உபநிடதங்கள் பிரமத்திற்கு அளித்துள்ள இயல்புகளைப் பகவத்கீதை விஸ்ணுவுக்கு அளித்துள்ளது. விஸ்ணுவைப் பிரமமாகக் கூறுவதுடன் நிர்க்குண சகுணநிலைகளில் விளங்குபவராகவும் விபரிக்கின்றது.
- பகவத்கீதையில் ஸ்ரீகிருஸ்ணர் அனைத்தையும் கடந்த நிர்க்குணமாகவும் அனைத்திலும் கலந்த சகுணமாகவும் விளங்கும் பரம்பொருள் என்று குறிப்பிடப்படுகின்றார். ஸ்ரீ கிருஷ்ணனானவர் உருவ நிலை என்பது எனது கீழ்நிலை இயல்பு என்றும் இதனின்றும் வேறுபட்டதும் உயர்வானதுமான மேலான இயல்பை அறிவாயாக என்று தன் இயல்புகளைக் கூறுகின்றார்.
- வைணவத்தில் முக்கியத்துவம் பெறும் அவதாரக் கோட்பாடு தொடர்பான சிந்தனைகளையும் காணலாம். கிருஸ்ணர் தன் அவதார நோக்கத்தை கீதையில், ‘‘நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும் அறத்தை நன்கு நிலைபெறச் செய்யவும் யுகங்கள் தோறும் நான் அவதரிக்கிறேன்“ என்று வெளிப்படுத்துகிறார்.
- இந்து மெய்யியலில் பேசப்படும் பிரபஞ்சம், ஆன்மா, தொடர்பான சிந்தனைகள் கீதையில் உள்ளன. இவை உபநிடத சிந்தனைகளுடன் மிகுந்த தொடர்புடையன.
- ஆன்மாக்களின் நித்தியமான தன்மை, அவற்றின் இயல்புகள், கன்மவினைகள், விடுதலை என்று பல விடயங்களைக் கீதையில் காணலாம். “ ஆத்மா ஒருபோதும் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. முன்பு இல்லா திருந்து தோன்றியதுமல்ல... என்று ஆன்மா அழியாத உண்மைப்பொருள் என்பதைக் கீதை உணர்த்தும்.
- பகவத்கீதையில் பிரபஞ்சத்தின் தோற்ற, ஒடுக்கம், பிரபஞ்ச உற்பத்தியின் மூலாதாரம் என்பன போன்ற சிந்தனைகளும் இடம்பெறுகின்றன.
- உபநிடதங்கள் கூறுவதனைப்போல பரமாத்மாவாகிய விஸ்ணுவை பிரபஞ்சப் படைப்பின் முதற் காரணமாக கீதை குறிப்பிடுகின்றது. “நான் பிரபஞ்சம் முழுவதினுடைய தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணம் ” என ஞான விக்ஞான யோகத்தில் குறிப்பிடுகிறார்.
- விஸ்ணு பிரபஞ்சப் பொருட்கள் யாவிலும் நிறைந்துள்ள,”அந்தர்யாமித்துவம் “ எனும் வியாபக நிலை பற்றியும் கீதையில் உள்ளது.
- கீதையில், “எனக்கு மேலானது எதுவும் இல்லை. நூலில் மணிகள் போல் இவை யாவும் என்னில் கோர்க்கப்பட்டுள்ளன“ என்று கூறும் சிந்தனை பிரபஞ்சத்திற்கும் விஸ்ணுவுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டும்.
- ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் விஸ்ணுவின் பாதார விந்தங்களை அடைந்து பேரின்ப வாழ்வை அனுபவித்தல் என்று கீதை கூறுகின்றது.

**மெய்யியல் வளர்ச்சியில் பகவத்கீதையின் பங்கு**

- இந்து மெய்யியல் துறைக்கு பிரஸ்தான திரயங்கள் முக்கிய பிரமாணம் என்ற வகையில் பகவத்கீதைக்கும் தனித்துவமான இடமுண்டு.
- வேதாந்திகளாகிய சங்கரர், இராமானுவசர், மத்துவர் என்போர் பகவத்கீதைக்கு கீதா பாஷ்யம் என்ற பெயரில் உரை வகுத்துள்ளனர்.
- வேதாந்திகளின் வேதாந்தக் கோட்பாடுகளுக்குப் பகவத்கீதை முக்கிய உரைப் பிரமாணமாக அமைகிறது.
- இராமானுசர், மத்துவர் ஆகியோரின் விஷிட்டாத்வைதம், துவைதம் ஆகிய வேதாந்தக் கோட்பாடுகள் வைணவ மரபு தழுவியதாக நிறுவப்பட்டதில் பகவத்கீதையின் வகிபங்கு முக்கியமானதாகும்.
- வைணவ சமயத்தின் அவதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியிலும் கீதைக்கு முக்கிய இடம் உண்டு.
- உபநிடத சிந்தனைகளை வைணவத் தளத்தில் நின்று விளக்கி உரைக்கும் பனுவலாக பகவத்கீதையைக் கருதமுடியும்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி**
- இந்து தத்துவ சிந்தனைகளின் மூலங்களை ஒழுங்கு முறையில் கூறுவ தற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வேதம், ஆகமம், உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவற் றில் உள்ள தத்துவ சிந்தனைகளைத் திரட்டுவதற்கு, மாணவர்களுக்கு நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, வேதம், ஆகமம், உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை ஆகிய தலைப்புகளை வழங்கி, அவ்வத் தலைப்புகளின் கீழ் வரக்கூடிய தத்துவ சிந்தனைகளை எடுத்துக்காட்டுக்கள், உதாரணங்களுடன் தேடித் தொகுக்குமாறு கூறுங்கள்.
- தொகுத்த விடயங்களை ஒழுங்குபட எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**உசாத்துணைகள்:**


(1) இந்துப் பண்பாட்டு மரபுகள் - பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்

(2) உபநிடதச் சிந்தனைகள் - தனபாலசிங்கம்

(3) இந்தியச்சிந்தனை மரபு - பேராசிரியர் என். சுப்பிரமணியன்

(4) இந்திய மெய்யியல் - ஹிரியண்ணா

(5) உபநிடதப் பலகணி - இராஜாஜி

(6) இந்திய தத்துவ ஞானம் - சி. இலட்சுமண ஐயர்

(7)"தத்துவமஸி" - சுகுமார் அழீஇக்கோடு

(8) இந்துசமய தத்துவம் - ரி. எம். பி. மகாதேவன்

(9) இந்து நாகரிகம் - வித்துவான் க. சொக்கலிங்கம்

(10) இந்து நாகரியம் பகுதி ii - சாந்தி கேசவன்

**தேர்ச்சி 6.0 :** இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2 :** வேதாந்த தத்துவ சிந்தனைகளை அறிந்து, அவற்றின் தொடர்புகளை எடுத்துக் கூறுவார்.

**பாடவேளைகள் :** 50

**கற்றற் பேறுகள் :**

- இந்திய மெய்யியல் சிந்தனை மரபினை வைதீக தத்துவங்கள், அவைதீக தத்துவங்கள் என்ற வகையில் பாகுபடுத்துவார்.
- வேதாந்த தத்துவ சிந்தனைகள் பற்றிய விளக்கத்தைக் கூறுவார்.
- வேதாந்த தத்துவக் கோட்பாடுகள் தோன்றியமைக்கான பின்னணியைத் தெளிவுபடுத்துவார்.
- வேதாந்த தத்துவக் கோட்பாடுகளுள் முக்கியம் பெற்ற பிரமம், ஆன்மா, உலகு என்பன பற்றிய கருத்துக்களை இனங்கண்டு விளக்குவார்.
- சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோரின் கோட்பாடுகளையும் அவற்றுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளையும் ஒப்பிட்டு விபரிப்பார்.
- வேதாந்த தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக் கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பார்.
- இந்து தத்துவ சிந்தனை வளர்ச்சியில் இக்கோட்பாடுகளின் முக்கியத்துவங்களை அறிந்து மதிப்பளிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**6.2.1 வேதாந்தம் ஓர் அறிமுகம்**

- வைதீக தத்துவங்களை இந்து தரிசனங்கள், இந்து மெய்யியற் கோட்பாடுகள் எனவும் குறிப்பிடுவர்.
- உபநிடதங்கள், வேதத்தின் அந்தமாக அமைந்து, இந்து மெய்யியற் சிந்தனைகளின் கருவூலமாக விளங்குவன. இதனால், உபநிடதங்களுக்கு வேதாந்தம் என்ற பெயரும் உண்டு.
- உபநிடத மெய்யியற் சிந்தனைகளின் வளர்ச்சியைப் பிரதிபலிப்பனவாக வேதாந்தக் கோட்பாடுகள் உள்ளன.
- உபநிடதங்களும், உபநிடதங்களின் விளக்கமாக பாதராயணர், எழுதிய பிரம சூத்திரமும் வேதாந்தக் கோட்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு அடிப்படையாக அமைந்தன.
- பிரமசூத்திரத்துக்கு சங்கரர், இராமானுசர், மத்துவர், நீலகண்ட சாஸ்திரி முதலியோர் உரைகளை எழுதியுள்ளனர்.
- சங்கரர், இராமானுசர், மத்துவர் ஆகியோர் பிரமசூத்திரத்திற்குச் செய்த விளக்கவுரைகள் முறையே மகாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், மத்வபாஷ்யம் என வழங்கப்படுகின்றன.
- உபநிடதங்களை முக்கிய பிரமாணமாகக் கொண்டு தோன்றிய இக்கோட்பாடுகள், வேதாந்தம் என்ற பெயராலேயே சுட்டப்படுகின்றன.

### 6.2.2 அத்வைதம் - விளக்கம்

- இந்து தத்துவ மரபில் அத்வைதத்துக்கு இன்மைப் பொருள் கொண்டு, பிரமம் ஒன்றே உண்மைப் பொருள் என நிறுவுவோர் கேவலாத்துவிதவாதிகள். கேவலம் - என்றால் தனிமை இக் கொள்கையை முன்னெடுத்தவர் ஆதிசங்கரர் ஆவார்.

### 6.2.3 சங்கரரும் அத்வைத வேதாந்தமும்

சங்கரர் - அறிமுகம்

- காலமும் வாழ்வும
- காலம் - கி.பி. 8 ஆம் நூற்றாண்டு (கி.பி. 788 - கி.பி. 820)
- பிறந்த இடம் - கேரளத்தில் காலடி எனும் கிராமம்
- தாய், தந்தை - ஆரியாம்பாள், ஆதிகேசவர்
- ஆசிரியர் - கோவிந்தர், கௌடபாதர் பணிகள்
- வேதாந்தக் கோட்பாடுகளுள் முதன்மையான, பழமையான கோட்பாடு என அத்வைதக் கோட்பாடு கொள்ளப்படுகின்றது.
- பிரஸ்தான திரயத்துக்கு, சங்கரர் எழுதிய உரையில் அத்வைத சிந்தனையின் தோற்றத்தினைக் காணலாம்.
- உபநிடதங்கள் உரையாடல்களாகவும், மகாவாக்கியங்களாகவும் அத்வைத சிந்தனைகளை முன்வைத்துள்ளன.
- பாதராயணரின் பிரமசூத்திரம் ஒருமைவாதக் கருத்துக்களை மிகச் சுருக்கமாக விபரிக்கும் நூலாக உள்ளது.
- கௌடபாதரின் “மாண்டுக்கிய காரிகை “ அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமையப் பெற்ற நூலாகும்.
- உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பவற்றில் உள்ள அத்வைதச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு அத்வைதத்தை ஒரு கோட்பாடாக முறைமைப்படுத்தியவர் சங்கரர். இதனால் சங்கரரை அத்வைத ஸ்தாபகர் எனக் கொள்ளும் மரபு உள்ளது.
- பணிகள்
  1. நூற்பணி:
     - பிரமசூத்திரம், பகவத்கீதை, தசோபநிடதங்கள் என்பவற்றுக்கு உரைநூல்கள் எழுதினார்.
     - சிவானந்த லகரி, சௌந்தரிய லகரி, சுப்பிரமணிய புஜங்கம், ஆரியாசதகம், பஜகோவிந்தம் முதலான தோத்திர நூல்களைப் பாடினார்.
     - விவேகசூடாமணி, உபதேச சாயஸ்ரி - அத்வைத கொள்கை விளக்க நூல்களை எழுதினார்.
  2. வேதாந்த மடங்களை அமைத்தார்.
- அற்புதங்கள்:
  1. தங்க நெல்லிக்கனி மழை பொழியச் செய்தமை.
  2. பூர்ணா நதியை திசைமாறி ஓடச் செய்தமை.
  3. தாய்க்கு விஷ்ணு தரிசனம் கிடைக்கச் செய்தமை.
  4. சீடர்களுக்காக வெந்நீரூற்றை உண்டாக்கியமை.
  5. தானே நெருப்பை உண்டாக்கித் தாயின் தகனக் கிரியை செய்தமை.
- வேதாந்த தத்துவ மரபில் சங்கரர் பற்றிய மதிப்பீடு:
  - இந்திய தத்துவ மரபில் உபநிடத தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு, கேவலாத்துவைதம் என்னும் புதிய தத்துவ மரபினைத் தோற்று வித்தமை.
  - பின் எழுந்த இந்து தத்துவங்களுக்கு முன்னோடி ; முதன்மையானவர்.

### அத்வைதக் கோட்பாடு

- அத்வைதம் என்பது அ+ துவைதம் எனப் பிரித்து, உள்பொருள் இரண்டு அல்ல; ஒன்று என பொருள் கொள்ளப்படுகிறது.
- சங்கரர் அறுவகைப் பிரமாணங்களை ஏற்றார். அவை பிரத்தியட்சம், அனுமானம், ஆப்த வாக்கியம், உபமானம், அனுபலப்தி, அருத்தா பத்தி என்பனவாகும்.
- பிரம்மம், ஆன்மா பற்றிய இருமை இன்மைக் கொள்கையே அத்வைதம் போதிக்கும் அடிப்படைக் கொள்கையாகும்.
- சங்கரர் அத்வைத தத்துவத்தை அரைச் சுலோகத்தில் அடக்கியுள்ளார். "பிரம்மம் சத்தியம் ஜகத்மித்யா, ஜீவோ பிரம்ம ஏவநா அபர ". பிரமம் உண்மையான பொருள்; இந்த உலகம் ஒரு தோற்றமே; ஒவ்வோர் ஆன்மாவும் பிரமம்தான். வேறொன்றுமில்லை என்பது இதன் பொருளாகும்.
- வேதாந்த சூத்திரம் (பிரமசூத்திரம்), உபநிடதம், பகவத்கீதை ஆகிய பிரஸ்தான திரயங்களை அடிப்படையாகக் கொண்டு, சங்கரர் தமது கோட்பாட்டை நிறுவுகிறார்.

### அ) பிரமம்

- பிரமமானது ஆன்மா, உலகம் ஆகிய இரு பொருள்களிலும் முதன்மையானது. பிரமம் மட்டுமே உண்மைப்பொருள். ஏனைய யாவும் அதன் தோற்றம். பிரமம் அநாதியானது; அந்தமற்றது; அழிவில்லாதது; எங்கும் செறிந்து நீக்கமற நிறைந்திருப்பது.
- பிரமம் எதனைப் போன்றதாக இல்லை எனக் கூறலாமேயொழிய, எதுவாக உள்ளது என விளங்க வைப்பது கடினம். (நேதி)
- பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன
  1. நிர்க்குண நிலை-மாயையோடு சேராதநிலை, குணமற்ற நிலை.
  2. சகுண நிலை- மாயையோடு சேர்ந்த நிலை, குணங்களோடு கூடிய நிலை - ஈஸ்வரன்.
- ஒரேயொரு மூலப்பொருளாயுள்ள பிரமம் பல சீவன்களாகிறது.
- ஆன்மாவே பிரமம் - தத்துவமஸி, அகம் பிரமாஸ்மி, சோகம் அஸ்மி எனும் உபநிடத மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படையாகின்றன.
- பிரமம் ஒன்றே; அஞ்ஞானத்தின் காரணமாக அது பல வகைப் பொருட்களாகக் காட்சியளிக்கிறது.
- அவித்தையாகிய அஞ்ஞானத்தினின்றும் விடுதலை பெறுமிடத்து பிரமமே எங்கும் பரந்திருக்கும் பரிபூரணப் பொருளாகும்.

### (ஆ) ஆன்மா

- சங்கரர் ஆன்மாவின் இருநிலைகள் பற்றிக் குறிப்பிடுகிறார்.
  (i) பரமாத்மா (என்றும் உள்ள பொருள்)
  (ii) ஜீவாத்மா (அவித்தைக்கு உட்பட்டது)

  ஜீவாத்மாக்கள் பலவாகத் தோன்றும். அடிப்படையில் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றென்பதைப் பின்வரும் வாதங்கள் மூலம் சங்கரர் நிறுவுவார்.
  (i) அவச்சேத வாதம்
  (ii) பிரதிபிம்ப வாதம்
- அவித்தை என்பதன் பொருள் அறியாமையாகும். அவித்தையே பிரமத்தைச் சீவன்களாக்குவது.
- அவித்தையாகிய அஞ்ஞானத்தினாலேயே சீவன் தன்னைப் பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

**(இ) உலகம்**

- உலகம் என்பது உண்மையல்ல; அது தோற்றம்.
- பிரமம் உலகாக மாறுவதாகக் காணப்படுகிறதேயொழிய, உண்மையில் பிரமத்தில் மாற்றமெதுவும் ஏற்படுவதில்லை. இதனை விவர்த்தவாதம் மூலம் நிறுவுகிறார்.
- விவர்த்தவாதம் என்பது ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாகத் தோன்றுவது. (உ-ம்) கயிறு பாம்பாகத் தோன்றுதல்.

**மாயை**

- மாயைக் கோட்பாட்டின் மூலம் பிரமம் உலகைத் தோற்றுவிக்கிறது என்கிறார். மாயையே உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணம்.
- மாயை என்பதற்கு பலவிதமாகப் பொருள் கொள்வர். மாயையைச் சொல்லால் விபரிக்க முடியாது. இதனால் அது அநிர்வசனீயம் எனப்படும்.
- மாயைக்கு இரண்டு இயல்புகள் உள்ளன. அவையாவன;
  (i) ஆவரணம் - உள்ளதை மறைக்கும் இயல்பு.
  (ii) விக்ஷேபம் - இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு.
- ஈஸ்வர தத்துவம்- பிரமத்தை மாயை மறைப்பதால் தோன்றுவது.

**இறைவனை அடையும் வழிகள்**

- சங்கரர் ஞானத்திற்கு முதன்மையளிக்கிறார்.
- ஆன்மா அவித்தையினின்று விடுபட்டு, தன்னைப் பிரம்மமென உணர்தல் விடுதலை யாகும்.
- சங்கரர் கூறும் முத்தி - அத்வைதமுத்தி. தன்னைப் பிரமம் என்று உணரும் அனுபவமே அத்வைத அனுபவம். சீவன்முத்தி, விதேகமுத்தி இரண்டையும் குறிப்பிடுகிறார்.

## 6.2.4 இராமானுஜரும் விசிட்டாத்வைதமும்

- **காலமும் வாழ்வும்**

  **காலம்** - கி.பி.11 ஆம் நூற்றாண்டு (கி.பி 1027)

  **இடம்** - தென்னிந்தியாவில் ஸ்ரீ பெரும்புதூர்.

  **தாய் தந்தை** காந்திமதியம்மை, ஆதிகேசவாச்சாரியார் (கேசவசோமயாஜி)

  **இயற்பெயர் -** இளையாழ்வார்

  **ஆசிரியர்** - யாதவப் பிரகாசர், திருக்கோட்டியூர் நம்பி

- **பணிகள்**

  1. நூற்பணி
     - பிரமசூத்திரம், பகவத்கீதை, உபநிடதம் ஆகிய நூல்களுக்கு வைணவ சித்தாந்த நோக்கில் உரைநூல்கள் எழுதினார்.
     - வேதாந்தசாரம், வேதாந்த சங்கிரகம், வேதாந்த தீபம் முதலிய நூல்களை எழுதினார்.
     - நித்தியக்கிரந்தம், கத்தியத் திரயம் - முதலிய வழிபாட்டு வகைகளைக் கூறும் நூல்களை எழுதினார்.
  2. நாலாயிரத் திவ்யபிரபந்தம் - குறிப்பாக நம்மாழ்வார் பாடல்களை மக்களிடையே பரப்பியமை.
  3. நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று, வைணவ மதத்தை நிலைபெறச் செய்தமை.
  4. சாதி, இன, மத வேறுபாடின்றி யாவரும் முத்தியடைய வழிகாட்டியமை.

- **அற்புதங்கள்**

  1. கிருஷ்ண பகவான் வேட்டுவ வடிவில் வந்து வழித்துணையானமை.
  2. ஸ்ரீரங்கத்து மடாதிபதி ஆளவந்தாரின் வேண்டுகோளை அறிந்து பாடியமை.
  3. காஸ்மீரிலிருந்த போதாயனவிருத்திநூல் பகவான் அனுக்கிரகத்தால் கிடைக்கப் பெற்றமை.

- **பிரமாணங்களும் கோட்பாடுகளும்**

  - பிரமாணங்கள் - காண்டல், கருதல், உரை
  - விசிட்டாத்வைதக் கோட்பாடு விளக்கம் - பிரபக்தி தத்துவம்

- **வேதாந்த தத்துவ வளர்ச்சியின் இராமானுஜர் பற்றிய பங்கு மதிப்பீடு:**

  1. சமுதாய வாழ்க்கையிலிருந்து பிரிந்து தொலைவிலே நின்ற வேதாந்த தத்து வங்களை மக்களோடு இணைத்து வேதாந்தப் புரட்சி செய்தவர்.
  2. சங்கரரின் அத்வைதக் கோட்பாட்டை உள்வாங்கி, மீட்டுருவாக்கம் செய்து, புதிய தத்துவத்தை உருவாக்கியவர்.
  3. தத்துவ சிந்தனைகளையும் சமயநெறி முறைகளையும் ஒன்றிணைத்து விசிட்டாத்வைதக் கோட்பாடு என்னும் புதிய கோட்பாட்டை நிறுவியவர்.

## இராமானுஜரும் விசிட்டாத்வைதமும்

- சங்கரரது அத்வைதக் கொள்கைகளைத் தழுவியும் வேறுபட்டும் அமைந்தது விசிட்டாத்வைதக் கோட்பாடு.
- பிரமம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருள்களும் உண்மை என்ற அடிப்படையில் அமைந்ததே விசிட்டாத்வைதக் கோட்பாடு.
- பிரம்ம சூத்திரத்துக்கு வைணவ தத்துவ நோக்கிலே எழுதப்பட்ட ஸ்ரீபாஷியத்தை அடிப்படையாக வைத்து தமது விசிட்டாத்தைவக் கருத்துக்களை முன்வைக்கிறார்.
- உபநிடதக் கூற்றுக்களிலுள்ள பேதாபேத சுருதிகளை முதன்மைப்படுத்திய கோட்பாடாக, விசிட்டாத்வைதக் கோட்பாடு அமைகிறது.
- பிரஸ்தான திரயங்களோடு நாலாயிர திவ்ய பிரபந்தத்தினையும் பிரமாண நூலாகக் கொள்கிறார்.

## விசிட்டாத்வைதக் கோட்பாடு

- இராமானுஜர் தத்துவத்திரயம் பேசுகிறார். ஈஸ்வரன்,சித்து, சடம் ஆகிய மூன்று பொருள்களும் உண்மையானவை என்கிறார். ஆயினும் மேலான பொருள் ஒன்று அது ஈஸ்வரன் விசேடமான அத்வைதம்)
  விசிட்டாத்வைத மரபில் "சித்து" என்பது ஆன்மாவைக் குறிக்கும்
- உயிர்கள் அனைத்தையும் உள்நின்று இயக்குபவன் இறைவன் - பரமான்மா. உலக இயக்கத்துக்கும் இறைவனே காரணமாகிறான். இதனால் இப்பொருள்கள் அனைத்தும் ஒன்று. இதுவே இராமானுஜரின் அத்வைதம்.
- விசிட்டாத்வைதம் - விசிட்டம் + அத்வைதம் விசேடனங்களுக்கும் விசேடியத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பே (விசிட்டம்) விசிட்டாத்வைதம் என இராமானுஜரால் குறிப்பிடப்படுகிறது.
- பிரம்மம், உயிர், உலகம் மூன்றுக்குமுள்ள தொடர்பு
  - சரீர சரீரி சம்பந்தம் - உலகு, உயிர் - சரீரம்; பிரமம் - சரீரி.
- இவற்றுக்கிடையிலான தொடர்பை அப்பிரதக்சித்தி மூலம் விளக்குகிறார். ஒன்று நிலைபெற, மற்றொன்று அவசியம். உலகு, உயிர் நிலைபெற இறைவன் அவசியம். இறைவனின் தனித்துவத் தன்மைக்கு உலகு, உயிர் என்பன அவசியம்.

### (அ) ஈஸ்வரன்

- பிரமம் என்ற மூலப்பொருள் விஷ்ணு. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியே கடவுள்.
  - சரீர சரீரி சம்பந்தம் - உலகத் தோற்றத்துக்குத் தலைவன்.
  - ஆன்மாக்களையெல்லாம் தனது உடலாகவும் பண்பாகவும் கொண்டு விளங்குபவன் - பரமான்மா.
  - இறைவனின் பண்புகள் - ஐஸ்வர்யம், பலம், வீரியம், தேஜஸ், ஞானம். - இறைவன் பூரண அறிவுடையவன்.
  - சிருஷ்டி, திதி, ஸம்காரம், ஞானம் எனும் நான்கு தொழில்களையும் இயற்ற வசுதேவன், பிரத்தியும்னன், அநிருத்தன் எனும் நிலைகளை எடுக்கிறான்.
  - இறைவனின் சக்தி ஸ்ரீ. ஸ்ரீயினின்றும் பிரிக்கமுடியாதவன் ஸ்ரீநிவாசன்.
  - ஆன்மாக்களைத் தனது அங்கமாக கொண்டிருந்தாலும் பரமான்மா பாதிக்கப்படுவதில்லை.
  - ஆன்மாக்கள் மீது கருணை கொண்டு காப்பவன்.

**(ஆ) ஆன்மா (சித்து)**

- எண்ணிக்கையிற் பல. அவை நித்தியமானவை, அழிவற்றவை -தாம் செய்யும் கன்ம வினைகளுக்கு ஏற்ப உடல்களை எடுக்கின்றன -மூவகை ஆன்மாக்கள்
  (i) எப்பொழுதும் முத்திநிலையிலுள்ளவை
  (ii) கட்டுண்ட நிலையிலிருந்து முத்தியடைந்தவை
  (iii) எப்பொழுதும் கட்டுண்ட நிலையிலுள்ளவை
- ஆன்மாக்கள் அறிவை இயல்பாக உடையவை
  - தர்மபூதஞானம் - இவ்வறிவு நிறைவற்றது. அந்தக் கரணங்களின் துணை யுடனேயே அறியும் இயல்புடையது. இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு என்பன அறிவின் இயல்புகள்.
  - ஆன்மாக்களின் துயருக்கும் அல்லலுக்கும் காரணம் அறிவுக்குறைவு. -பிறவிப் பிணியினின்றும் நீங்க நற்கருமங்களைச் செய்ய வேண்டும். -பிறவிப் பிணி நீங்கி, ஸ்ரீவைகுண்டத்தை அடைதல் வீடுபேறு ஆகும்.

**(இ) உலகம்**

- நித்தியமானது; அழிவற்றது.
- உலக இருப்பு பரிணாமவாதம் மூலம் நிறுவப்படுகிறது.
- இறைவனாகிய சரீரிக்கு இது பண்பு. ஆதலால் இறை தன்மை நிலைபேற்றுக்கு காரணமான பொருளாகிறது. சரீர - சரீரி சம்பந்தம்

**முத்திநிலை**

- ஆன்மாக்களின் கன்ம பலன்களின் அடிப்படையில் வீடுபேறு கிடைக்கும்.
- பகவானது பேரருளால் ஆன்மாக்களின் கன்மம் அழிந்து முத்திநிலை ஏற்படும்.
- ஞானமும் பக்தியும் வீடுபேற்றுக்கு வழியாகக் கூறப்பட்டாலும் பிரபக்தியே முத்திக்கு வழியானது. இந்நிலையை அடைய கன்மமும் ஞானமும் துணையாகிறது.
- விதேக முத்தி - உடல் அழிந்த பின் வைகுண்டமடைதல்.

## 6.2.5 மத்துவரும் துவைத வேதாந்தமும்

**மத்துவர் - காலமும் வாழ்வும்:**

**காலம்** - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு (கி.பி. 1238- 1317)

**இடம்** - தென்னிந்தியாவில் உடுப்பிக்கு அருகிலுள்ள கிராமத்தில் பிறந்தவர்.

**தாய், தந்தை-** வேதவதி அம்மையார், மத்யகேசபட்டர்

**ஆசிரியர்** - அச்சுதப்பிரேஹ்ஷர்

**வேறு பெயர்கள்** : பூரணப்பிரக்ஞர், ஆனந்ததீத்தர் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகின்றார்

**பணிகள்:**

1. நூற்பணி
   - பிரஸ்தானதிரயங்களான வேதாந்த சூத்திரம், தச உபநிடதங்கள், பகவத் கீதை என்பவற்றிற்குப் பாஷியங்கள் எழுதியமை.
   - இருக்குவேதத்தின் முதல் நாற்பது மந்திரங்களுக்கு விரிவுரைகள் எழுதியமை.
   - பாரத தாற்பரிய நிருணயம் - மகாபாரதம் பற்றிய நூலுக்கு விளக்கம் எழுதியமை.
   - பாகவத புராண விளக்க நூல் எழுதியமை.
   - 'சர்வ மூலம்' தொகைநூல் - துவைத வேதாந்தக் கோட்பாட்டு நூல்கள் என்பன எழுதியமை.
2. உடுப்பியில் கிருஷ்ணனுக்கு ஆலயம் நிறுவியமை.
3. கன்னடத்தில் ஹரிதாசர்களை உருவாக்கியமை.
4. துவைத மதத்தை நிறுவியமை.

**பிராமணங்களும் கோட்பாடுகளும்**

பிரமாணங்கள் - காண்டல், கருதல், உரை ஆகிய மூன்றையும் ஒப்புக் கொள்கிறார்

**.வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மத்துவர் பற்றிய மதிப்பீடு:**

- சங்கரர், இராமனுஜர் அத்வைதக் கோட்பாடுகளை உள்வாங்கி, துவைதக் கோட்பாட்டை நிறுவியமை.
- உள்ள பொருள் மூன்று. ஆயினும் அவை தம்மிடையே என்றும் வேறுபாடுடையவை என்ற நிலையில் தமது கோட்பாட்டை நிலைநிறுத்தியமை
- வைணவ மதச் சார்புடையதாகத் தமது வேதாந்தத்தை நிறுவியமை
- முத்திக் கோட்பாடு பற்றி புதிய கருத்து நிலையை முன்வைத்தவர்.

**துவைத வேதாந்தம்:**

- துவைதம் என்னும் சொல்லுக்கு இரண்டு என்பது பொருள். இரண்டு எனப் பேசப்படுபவை இறைவனும் ஆன்மாவும் ஆகும்.
- இவை இரண்டும், இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று என்ற நிலையை ஒருபோதும் அடைவதில்லை. எப்பொழுதும் இரண்டும் இரண்டுதான் - துவைதக் கோட்பாடு.
- மத்துவர் பிரஸ்தான திரயங்களை மட்டுமன்றி இதிகாசங்கள், வைணவ ஆகமங்கள், வைணவ புராணங்கள், சிறப்பாகப் பாகவத புராணங்களையும் பிரமாண நூல்களாகக் கொள்கிறார்.
- மத்துவர் பன்மைவாதி. ஈஸ்வரன்,சீவன்,சடம் ஆகிய முப்பொருட்களும் உண்மையானவை என்று ஏற்றுக் கொள்கின்ற இவ்வேதாந்தம் அவற்றுக்கிடையிலான ஐவகை வேறுபாடுகளும் (பேதங்களும்) நிரந்தரமானவை என ஏற்கின்றது என்னும் ஐவகைப் பேதங்களை இவர் குறிப்பிடுகிறார்.
    1. சீவஈஸ்வரபேதம் -சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையிலே உள்ள வேறுபாடு.
    2. சடஈஸ்வரபேதம் -சடத்துக்கும் ஈஸ்வரனுக்குமுள்ள வேறுபாடு.
    3. சீவசடபேதம்- சீவனுக்கும் சடத்துக்குமுள்ள வேறுபாடு.
    4. சீவபரஸ்பரபேதம்-ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையிலான வேறுபாடு.
    5. சடபரஸ்பரபேதம்-ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையிலான வேறுபாடு.
- இறைவன் ஒருவனே சுதந்திரமான உள்பொருள். மற்றைய உள்பொருள்களாகிய ஆன்மாக்களும் சடப்பொருள்களும் பர தந்திரமானவை (சுதந்திரமற்றவை).

## (அ) பிரமம்

- இராமானுஜரைப் போலவே ஈஸ்வரனை முதன்மைப்படுத்துகிறார்.
- பிரமம் முக்குணங்களையும் கடந்ததே தவிர, தெய்வீக இயல்பான பண்புகளையும் குணத்தையும் கடந்ததல்ல. (குண பூரணன்)
- பிரமம் எல்லாப் பொருட்களினதும் உள்ளீடாக அமைவதுடன் அவைகளின் செயற்பாட்டிற்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.
- இறைவன் மட்டுமே சார்பற்றவன். மிக உயர்ந்த உள்பொருள் (சர்வ உத்தமன்).
- மகாவிஷ்ணு மூர்த்தியே சர்வவல்லமை படைத்த ஈஸ்வரன். அவர் ஆன்மாக்கள் பிறவித் துன்பத்தினின்றும் நீங்கி முத்தி பெறுதற்பொருட்டு, உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் அவரே நிகழ்த்துகிறார்.
- ஆன்மாக்களின் அறியாமைக்குக் காரணமாயமைவது இறைவனின் பேராற்றல் தன்மையெனக் கருதப்படும் மாயையாகும்.
- ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைவது பிரமம்.

## (ஆ) ஆன்மா

- ஆன்மாக்கள் பல. எண்ணிறந்தவை.
- ஆன்மாக்கள்இருநிலைகளில்வைத்து விளக்கப்படுகிறது.
  (i) போன்றிருத்தல் (ii) சார்ந்திருத்தல்
- ஆன்மாவானது பிரமத்தின் தன்மைகள் பலவற்றைப் பெற்றிருக்கிறது. ஆனால் கடவுளுக்குச் சமமானதல்ல.
  (i) ஆன்மாக்கள் இறைவனைப் போன்று சத், சித், ஆனந்தம் என்ற பண்புகளைப் பெற்றவைஆயினும் அப்பண்புகள் நிறைவற்ற பண்புகளாகஇருத்தல்.
  (ii) அறிபவர், செய்பவர், அனுபவிப்பவர் என்ற வகையில் ஆன்மாவும் இறைவனைப் போன்றிருப்பதாக எண்ணப்படுகிறது.
- சகல செயற்பாட்டிற்கும் உயிர்கள் இறைவனைச் சார்ந்துதான் இயங்குகின்றன. (உ-ம்) அறிதல், செய்தல், துய்த்தல்.
- கண்ணாற் காணமுடியாத ஆன்மா, நல்வினை தீவினைக்கேற்ப சடப்பொருளாலான உடல்களை எடுத்து உலகிலே வாழ்கிறது. இதற்கு இறைவனின் கருணைதேவைப்படுகிறது. தானாகவே தனக்குரிய உடலைத் தெரிவு செய்யும் தகைமைஆன்மாவுக்கு இல்லை.
- ஆன்மாக்கள் மூன்று வகை.
  1. நித்திய முத்தர்கள்- நித்தியமாயும் சுதந்திரமாயும் இருப்பவை.(உ-ம்) இலட்சுமி
  2. முத்தர்கள் -சம்சாரத் தளையிலிருந்து விடுதலை அடைந்தவர்கள் - தேவர்கள், ரிஷிகள், ஆன்மீகத் தலைவர்கள்
  3. பந்தப்பட்ட சீவன்கள் -பெத்தநிலையினுள்ளோர். இவர்களை மேலும் இரு வகைப்படுத்துவர்.
     (i) வீடுபேறடையத் தகுதியுடையவர். முக்தியோக்யர்கள்.
     (ii) வீடுபேறடையும் தகுதி இல்லாதவர்கள்.
- வீடுபேறடையும் தகுதி இல்லாதவர்கள்:
  (1) சம்சாரபந்தத்தில் உழல்வோர்
  (2) நித்திய நரகத்தில் உழல்வோர்
- ஆன்ம விடுதலை ஆன்மாக்களின் முக்குணங்களின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுகின்றன.
  சாத்விகம் - முத்திநிலை எய்துகின்றன.
  இராசதம் - சம்சாரத்தில் உழல்கின்றன.
  தாமசம் - நித்திய நரகத்தில் வீழ்கின்றன.
- முத்தியடைந்த நிலையிலும் ஆன்மாக்களுக்கிடையில் வேறுபாடு உண்டு.
- முத்திநிலையில் கூட ஆன்மா ஈஸ்வரனாவதில்லை.

### (இ) உலகம்

- உலகம் உண்மையான பொருள். நிலையான பொருள்.
- இறைவன் உலகைப் படைப்பதற்கு நிமித்த காரணன். சட உலக தோற்றத்திற்கு அடிப்படை பிரகிருதி.
- ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறுவதற்கு, உலகம் நிலைக்களனாக அமைகிறது.

### (ஈ) முத்தி நிலை

- ஆன்மா தனது முயற்சியால் நேரே விடுதலை பெற முடியாது. இறைவனின் அருள் கைகூடும்பொழுதுதான் முத்திநிலை சாத்தியமாகிறது.
- ஆன்மா பந்தத்தாற் கட்டப்பட்டிருப்பதால் இறைவனுடைய உண்மைத்தன்மையை உணர்வதில்லை.
- ஞானம், பக்தி என்பன மோட்சம் அடைவதற்குரிய வழிகள்.
- முத்திநிலையிலும் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்குமே தவிர பிரமத்துடன் இரண் டறக் கலப்பதில்லை.

முக்கிய குறிப்பு:

அத்வைத, விசிட்டாத்வைத, துவைத, சைவசித்தாந்தக் கோட்பாடுகளுக்கு இடையிலான ஒப்பீடுகளை ஆசிரியர் கற்பித்தலின்போது முன்வைக்க வேண்டும்.

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I** : வேதாந்த தத்துவ சிந்தனைகளையும் அவை தோன்றியதற்கானபின்னணியையும் மாணவர் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி II** : வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கான மூலங்கள், வேதாந்த தத்துவ சிந்தனைகளில் பிரமம், ஆன்மா, உலகு பற்றிய கருத்துக்கள் என்ப வற்றை இனங் கண்டு தொகுப்பதற்குத் தேவையான நூல்களை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி III** : மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டு வினாவிடைப் புத்தகமொன்றைத் தயாரிக்க வழிகாட்டுங்கள்.

(i) வேதாந்த தத்துவ சிந்தனைகளுக்கு அடிப்படையாய் அமைந்த மூலங்கள்
(ii) அத்வைதமும் விசிட்டாத்வைதமும்
(iii) துவைதக் கோட்பாட்டின் தத்துவம்
(iv) விசிட்டாத்வைதமும் சைவசித்தாந்தமும் ஒப்பீடு

வினாவிடைத் தொகுப்பாக அமைத்த புத்தகத்தை வகுப்பறையில் முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அப்புத்தகத்தை வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிகாட்டுங்கள்.

### உசாத்துணைகள்:

(1) இந்திய தத்துவ ஞானம் -சி. இலட்சுமண ஐயர்

(2) இந்து சமய தத்துவம் -ரி. எம். பி. மகாதேவன்

(3) இந்திய தத்துவக் களஞ்சியம் -சோ. ந. கந்தசாமி

(4) கீழை, மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு -டாக்டர்.இராதாகிருஷ்ணன்

(5) இந்தியத் தத்துவவியல் -எஸ். வரதராஜன்

(6) மத்துவ வேதாந்தம் -டாக்டர். இராதாகிருஷ்ணன்

**தேர்ச்சி 6.0 :** இந்து தத்துவ சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுவார்.

**தேர்ச்சி மட்டம் 6.3 :** இந்துசமய வளர்ச்சியில் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பார்.

**பாடவேளைகள் :** 30

**கற்றற் பேறுகள் :**

- சைவசித்தாந்தம் என்பதற்கான விளக்கத்தைத் தெளிவாகக் கூறுவார்.
- சைவசித்தாந்தத்தின் மூலங்களைத் தொகுத்து எழுதுவார்.
- சைவசித்தாந்த சாத்திர நூல்களை ஆசிரியர், பொருள், மரபு என்னும் அடிப்படையில் விளக்கிக் கூறுவார்.
- சைவசித்தாந்தக் கோட்பாட்டில் அடங்கும் முப்பொருள்களையும், நூல் ஆதாரங்கள், எடுத்துக்காட்டுகள் என்பவற்றின் ஊடாக முன்வைப்பார்.
- சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான வழிகளை இனங்கண்டு, பின்பற்றுவார்.
- இந்து தத்துவ சிந்தனைகளில் முக்கியத்துவம் பெறும் 'சைவசித்தாந்தம்' என்பதன் பொருளை அறிந்து கூறுவார்.
- சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் பற்றிய முப்பொருட் கோட்பாடுகளை நூலாதாரங்களின் துணையுடன் முன்வைப்பார்.
- சைவசித்தாந்த சாத்திரங்களின் துணையுடன் பதி, பசு, பாசம் பற்றிய கருத்துக்களை விளக்கி எழுதுவார்.
- சைவசித்தாந்தம் கூறும் முத்திக் கோட்பாடு ஆன்மீக விடுதலைக்கு வழிகாட்டு மாற்றை இனங்கண்டு கூறுவார்.
- சைவத் திருமுறைகள், அறநூல் என்பவற்றின் துணையுடன் சைவசித்தாந்தம் கூறும் முத்திக்கான மார்க்கங்களை வகைப்படுத்தி எழுதுவார்.
- சைவசித்தாந்த மெய்ப்பொருட் கோட்பாடு இந்துக்களின் வாழ்வியலோடு தத்துவ சிந்தனைகளை தொடர்புபடுத்துமாற்றை உணர்ந்து மதிப்பளிப்பதோடு அவற்றைத் தம் வாழ்விலும் கடைப்பிடிக்க முன்வருவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

**6.3.1 சைவசித்தாந்த சாத்திரங்கள்**

- சைவசித்தாந்த தத்துவத்தை முற்றுமுழுதாக விளக்குவன சைவ சித்தாந்த சாத்திரநூல்கள் எனப்படும்.
- இவை சைவசமய வாழ்வுக்கு இலக்கணமாக, சைவசமயத்தின் முடிந்த முடிபுகளைக் கூறுவனவாக அமைந்தவை.
- தமிழ் மொழியிலே சைவசித்தாந்தக் கோட்பாட்டை சுருக்கியும் விரித்தும் கூறும் நூல்கள் பதினான்கு எனவும், அவற்றில் முதனூலாயமைந்தது சிவஞானபோதம் எனவும் கூறுவர்.
- சிவஞானபோதத்தை இயற்றியவர் மெய்கண்டார். சைவசித்தாந்தக் கோட்பாட்டை முழுமையாக முதலில் உருவாக்கித் தந்தவர் இவரே. ஆதலால் சைவசித்தாந்த சாத்திரங்களை மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் கூறுவர்.
- இந்நூல்கள் கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தவையாகும்.

- சைவ சமுதாயத்தில் சைவசமயத்தின் வழியைக் குருசீட பரம்பரையில் விளக்கிக் கூறியவர்கள் சந்தான குரவர்கள் ஆவார். சந்தான குரவர்கள் எண்மராவர்.

- சிவபெருமான் வேத, ஆகமப் பொருளை ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு திருநந்தி தேவருக்கு உபதேசித்தார். திருநந்திதேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் சத்திய ஞான தரிசினிகளுக்கும், சத்தியஞான தரிசினிகள் பரஞ்சோதி முனிவருக்கும் உபதேசித்தனர். இந்நால்வரும் அகச்சந்தான பரம்பரையினர் எனப்படுவர். இவர்களில் பரஞ்சோதி முனிவரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்றவர் மெய்கண்டார்.

- மெய்கண்டாரும், மெய்கண்டாரிடம் உபதேசம் பெற்ற அருணந்தி சிவாசாரியார், அவரது மாணவர் மறைஞான சம்பந்தர், மறைஞான சம்பந்தரது மாணவர் உமாபதிசிவாசாரியார் என்போர் மற்றுமொரு சந்தான பரம்பரையினர். இவர்கள் புறச்சந்தான பரம்பரையினர் எனப்படுவர். இவர்களே சைவசித்தாந்த சாத்திரங்கள், கோட்பாடுகளாயமைய வழிவகுத்தனர்.
- மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் அவற்றை இயற்றியோரும் வருமாறு:
  1. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்ததேவர்
  2. திருக்களிற்றுப்படியார் - திருக்கடவூர் உய்யவந்ததேவர்
  3. சிவஞானபோதம்
  4. சிவஞானசித்தியார் - மெய்கண்டதேவர்
  5. இருபாஇருப∴து - அருணந்திசிவாசாரியார்
  6. உண்மைவிளக்கம் - மனவாசகங்கடந்ததேவர்
  7. சிவப்பிரகாசம்
  8. திருவருட்பயன்
  9. வினாவெண்பா
  10. போற்றிப்ப∴றொடை
  11. கொடிக்கவி
  12. நெஞ்சுவிடுதூது
  13. உண்மைநெறி விளக்கம்
  14. சங்கற்பநிராகரணம் - உமாபதிசிவாசாரியார் (இவ்வெட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனச் சிறப்பிக்கப்படும்

- சைவசமய குரவர்கள் செய்தருளிய தேவார, திருவாசகங்களாகிய சிவாநுபூதித் திருமுறைகளுக்கு, சந்தானகுரவர்கள் அநுபூதி நிலையில் இயற்றிய சித்தாந்த சாத்திரங்கள் இலக்கணம் போன்றமைவன என்பர்.
- சந்தான குரவர்கள் சிவாகமக் கருத்துக்களையும், திருமுறைக் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு, தருக்க முறைக்கியையை சித்தாந்த சாத்திரங்களாக இயற்றியுள்ளனர்.
- சைவசித்தாந்த சாத்திரங்களில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் எனும் இரு நூல்களும் சிவஞான போதத்திற்குக் காலத்தால் முற்பட்டன. இவை கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டன என்பர்.

### (1) திருவுந்தியார்

- இதனை இயற்றியவர் திருவியலூர் உய்யவந்ததேவர். அவர் இந்நூலை சிவஞானபோதத்தைப் போல, சித்தாந்தக் கருத்துக்களைக் கோவைபடக்கூறாது, தம் உணர்ச்சியனுபவங்களுக்குத் தோன்றியவாறு பாடியுள்ளார். ஆயினும் இவை சாத்திர நூல்கள் போலவே கடவுள், உயிர், உலகம் எனும் முப்பொருள்களின் இலக்கணம், பயன், பயனை அடையும் நெறி என்பவற்றை விளக்குகிறது.
- இந்நூலில் மும்மூன்று அடிகளே கொண்ட 45 செய்யுட்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 'உந்தீபற' என்ற சொற்றொடர் கொண்டு முடிகின்றன. உந்திப்பறத்தல் என்பது சிறுமியர் விளையாட்டுக்களில் ஒன்று. இங்கு உம் +தீ+ பற எனப் பிரித்து உமது தீமை எல்லாம் பறந்து விடும் எனப் பொருள் கொள்வர்.

### (2) திருக்களிற்றுப்படியார்

- இந்நூல் திருக்கடவூர் உய்ய வந்த தேவரால் பாடப்பட்டது. திருவுந்தியாரின் கருத்தைவிளக்கி 100 வெண்பாக்களில் பாடப்பட்டது. இது பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப்படிகளில் வைக்கப்பட்டுப் பாராட்டப்பட்டது. அதனால் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெற்றது.
- இந்நூலில் 63 நாயன்மார்களின் வரலாறுகளிலிருந்தும் உதாரணங்கள் தந்து வல்வினை, மெல்வினை என்பன விளக்கப்பட்டுள்ளன. திருக்குறட்பாக்கள் சில மேற்கோள்களாக எடுத்தாளப்பட்டுள்ளன.

### (3) சிவஞானபோதம்

- பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுள் நடுநாயகமாக விளங்குவது சிவஞான போதமாகும். இதுவே சைவசித்தாந்தத்தின் முதனூலாகும்.
- சிவஞானபோதம் (சிவம் - ஞானம் - போதம்) என்ற சொற்றொடர், சிவனின் திருவருளால் வருகின்ற மெய்யறிவைத் தரும் நூல் என்று பொருள்படும்.
- இந்நூல் தொன்றுதொட்டு வேத, ஆகமங்களிலும் சைவத் திருமுறைகளிலும் பயின்று வந்துள்ள சித்தாந்த உண்மைகளை, அறிவாராய்ச்சிக்கு ஒத்தவாறு மிகநுட்பமாக எடுத்துக் கூறுகின்றது.
- சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களையுடையது. இது பிரமாணஇயல், இலக்கண இயல், சாதனஇயல், பயன்இயல் என நான்கு இயல்களாக வகுக்கப்பட்டுள்ளது.
  1. பிரமாண இயல்- பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களும் உண்டு என்பதற்கு ஏதுக்கள் கூறுவது.
  2. இலக்கண இயல்-முப்பொருளின் பொது இயல்பும், சிறப்பு இயல்பும் கூறுவது.
  3. சாதன இயல்- உயிர்கள் பாசத்தினின்றும் நீங்கி இறைவனை அடையும் வழியைக் கூறுவது
  4. பயன் இயல்
     - இறைவனை அடையும் வழியிற் செல்வோர் பெறும் பேற்றை உணர்த்துவது.
- சிவஞானபோதம் ரௌரவ ஆகமப் பொருளை விளக்கும் வகையிலமைந்ததென்பர்.

## (4) சிவஞானசித்தியார்

- இந்நூல் சிவஞானபோதத்தின் வழிநூல் எனப்படுகிறது. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் மிக விரிவானதும் சிறப்புடையதுமாகும்.
- மெய்கண்டாரின் மாணாக்கராகிய அருணந்தி சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது.
- சிவஞானபோதத்தின் 12 சூத்திரங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நூலில் பரபக்கம், சுபக்கம் எனும் இரு பிரிவுகள் உளளன.
- பரபக்கம், உலகாயதம் முதல் பாஞ்சராத்திரம் ஈறாக உள்ள பரசமயக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டி, சித்தாந்த நோக்கில் மறுப்புச் செய்யும் பகுதியாகும்.
- சுபக்கத்தில் எத்திறத்துச் சமயவாதிகளாலும் விடுக்கப்படும் ஆட்சேபங்களுக்கெல்லாம் பரபக்கப் பார்வையால் சமாதானம் செய்து, சுயமதத்தை நிறுவுதல் கூறப்பட்டுள்ளது.
- சிவஞானசித்தியாரின் 12 சூத்திரங்களும் பின்வருமாறு அமையும்.

  1. முதற்சூத்திரம் - பதியுண்மைப் பிரமாணம்
  2 ஆம் சூத்திரம் - பாசவுண்மைப் பிரமாணம்
  3 ஆம் சூத்திரம் - பசுவுண்மைப் பிரமாணம்
  4 ஆம் சூத்திரம் - பசு இலக்கணம்
  5 ஆம் சூத்திரம் - பாச இலக்கணம்
  6 ஆம் சூத்திரம் - பதி இலக்கணம்
  7 ஆம் சூத்திரம் - சாதித்துப் பெறற்கரிய பொருள்
  8 ஆம் சூத்திரம் - சாதன இயல்பு
  9 ஆம் சூத்திரம் - சாதனம் செய்யுமாறு
  10 ஆம் சூத்திரம் - பெத்த நீக்கப் பயன்
  11 ஆம் சூத்திரம் - முத்திப் பயன்
  12 ஆம் சூத்திரம் - பெத்த நீக்கமும் முத்தியும் பெற்ற சீவன்முத்தர்நிலை

- “சிவத்தின் மேல் தெய்வமில்லை சிவஞானசித்திக்கு மேல் ஒரு சாத்திரமில்லை “ என, இந்நூலின் சிறப்பினைப் போற்றுவர்.

### (5) இருபா இருப∴து

- இருபது பாக்களையுடைய இந்நூல் சிவபெருமானே உயிர்களின் பாசநீக்கத்தின் பொருட்டு மெய்கண்டாராக உலகில் தோன்றினாரென கூறுகிறது. இதனை இயற்றியவர் அருணந்தி சிவாசாரியார்.
- சித்தாந்தக் கருத்துக்களில் தமக்கேற்பட்ட ஐயங்களைத் தீர்க்கும் பொருட்டு குருவிடம் வினாக்களை வினவி, தெளிவுபெற்றமையைப் பாடல்கள் கூறுகின்றன.
- ஆணவத்தின் குணங்கள், உயிரின் அவத்தைகள், பாசநீக்கத்தின்போது இறைவன் விகாரப்படாமை, ஆன்மா வினை புரிவதற்கு இறைவன் நடுவனாக விளங்குதல், ஆன்மாவின் செயலற்ற நிலை ஆகிய சித்தாந்தக்கருத்துக்கள் இந்நூலிற் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.
- மெய்கண்டார் தம்மை ஆட்கொண்டபோது தோற்றுவித்த சித்தாந்த அனுபவங்களை அருணந்தியார் இந்நூலில் சிறப்பாகச் சித்திரித்துள்ளார்.

### (6) உண்மை விளக்கம்

- இது மெய்கண்டதேவரது மற்றொரு மாணவரான மனவாசகங்கடந்தாரால் இயற்றப்பட்டது.
- 53 வெண்பாக்களை உடையது. ஆசிரியரிடம் மாணாக்கன் விளக்கம் கேட்டு, விடையளிப்பது போன்ற அமைப்பினை உடையது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளும் உள்பொருள் என விளக்குகிறது.
- இந்நூலில் முப்பத்தாறு தத்துவங்கள், ஆணவம், இருவினை என்பவற்றின் இயல்பு, பதியின் இயல்பு, ஐந்தெழுத்துண்மை ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளன.
- சைவசித்தாந்த சாத்திரங்களில், எட்டு நூல்கள் உமாபதிசிவாசாரியாரால் இயற்றப்பட்டவை. அவை சித்தாந்த அட்டகம் எனப்படும். அவை சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப்ப∴றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகியவை.

### (7) சிவப்பிரகாசம்

- இது சிவஞானபோதத்திற்குச் சார்பு நூலாகும். இதன் பாயிரத்துள் திருக்கயிலாய பரம்பரை ஆசிரியர்கள் இன்னாரென்பதும் சைவநூல்களின் இயல்பும் தீட்சை பற்றியும் கூறப்பட்டுள்ளது.
- இந்நூல் 100 விருத்தப்பாக்களால் ஆனது. இங்கு சைவசித்தாந்த அத்துவித நிலை, ஆணவம், கன்மம், வினைப்பயன், மாயையின் பிரிவுகள், முத்திபேதங்கள், சைவ சித்தாந்த முத்தி என்பன விளக்கப்பட்டுள்ளன.

## (8) திருவருட்பயன்

- திருவருளின் பயனை விளக்கும் நூல். இந்நூல் பத்து அதிகாரங்களை உடையது. நூறு குறட்பாக்கள் உள.
- முதல் ஐந்து அதிகாரங்களும் திருவருளைப் பற்றியும், அடுத்த ஐந்து அதிகாரங்களும் திருவருளின் பயனைப் பற்றியும் கூறுகின்றது.

முதலாவது அதிகாரம் - பதிமுதுநிலை - திருவருளைக் கொடுத்தருளும் பதியின் தன்மை.

2வது அதிகாரம் - உயிரவை நிலை - திருவருளைப் பெறும்உயிரின் தன்மை.

3வது அதிகாரம் - இருண்மலநிலை - திருவருளால் நீக்கப்படும் ஆணவமலத்தின் தன்மை.

4வது அதிகாரம் - அருளது நிலை - திருவருளின் தன்மை

5வது அதிகாரம் - அருளுரு நிலை - திருவருளின் வடிவாகியகுருவின் தன்மையைக் கூறுவன.

- ஏனைய ஐந்து அதிகாரங்களும் அறியும்நெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருள்நிலை, அணைந்தோர் தன்மை என்பனவாம்.
- ஆன்மா ஆணவ மலநீக்கம் பெற்றுத் திருவருளின் துணைக் கொண்டு பதியை அடையும் வழியை இந்நூல் உரைக்கிறது.

## 9)வினாவெண்பா

- சிவப்பிரகாசத்தின் சாரமாக அமைந்த இந்நூல், 13 வெண்பாக்களால் ஆனது.
- உமாபதி சிவாசாரியார் தம் குருவாகிய மறைஞான சம்பந்தரிடம் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளை வினாக்களாகக் கேட்டு விடையறியும் வகையிலுள்ளது.

## (10) போற்றிப் ப∴றொடை

- ப∴றொடை வெண்பாவாலான இந்நூலில் பல முறை "போற்றி போற்றி" என வருதலால் இப்பெயர் பெற்றது.
- இறைவன் ஆன்மாவின் பாசத்தினைக்கெடுத்து ஆட்கொள்ளும் தன்மையும் ஞான சாரியனால் ஆட்கொள்ளப்படும் உயிர் இன்பநிலை எய்துவதும் விளக்கப்பட்டுள்ளது.

## (11) கொடிக்கவி (கொடிப்பாட்டு)

- சிதம்பரத்திலே திருவாதிரை விழாவுக்காக ஏறாது நின்ற கொடியை ஏற்றுதற்காக உமாபதி சிவாசாரியரால் பாடப்பட்டது.
- இந்நூல் நான்கு வெண்பாக்களால் ஆகிய மிகச் சிறியநூல். ஐந்தெழுத்தின் நுட்பம் இருளுக்கும் ஒளிக்கும் ஒன்றே இடம் எனும் உண்மை விளக்கப்படுகிறது.

### (12) நெஞ்சுவிடுதூது

- உமாபதி சிவாசாரியார் தம் குருவிடம் தமது உள்ளத்தைச் செலுத்தி தம்மை ஒப்படைத்து உபதேச அநுபூதி பெற்றமையை விளக்குகிறது.
- 129 கண்ணிகளைக் கொண்டது. ஞானாசிரியர் பாசநீக்கம் செய்யும் திறன், தசாங்கம், புறச்சமய மறுப்புக்கள், தத்துவங்கள், உபதேசங்கள் முதலியவை விபரிக்கப்படுகின்றன.

### (13) உண்மைநெறி விளக்கம்

- ஆறு திருவிருத்தங்களால் ஆனது. சத்திநிபாதம் அடைந்தோர் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்ற தசகாரியங்களை நாடிக் கண்டு சிவாநுபூதி கூடும் முறையை விளக்குகிறது.

### (14) சங்கற்பநிராகரணம்

- பல சமயவாதிகளுடைய சங்கற்பமும் அவற்றிற்கு உமாபதி சிவாசாரியார் கூறிய நிராகரணமும் காணப்படுவதால் இப்பெயர் பெற்றது.
- இது அகச் சமயங்கள் பலவற்றின் கொள்கைகளைக் கூறி, அவற்றைச் சித்தாந்தப் பார்வையால் மறுக்கும் நூலாகும்.
- ஆயிரம் அடிகளைக் கொண்ட இந்நூல்சைவசித்தாந்த நிலையே பலவற்றாலும் சிறந்தது என்பதை நன்கு விளக்குகிறது.

முடிவுரை

- சைவசித்தாந்த சாத்திரங்கள் இறைவன் ஒருவன் உளன்; அவனே சிவன் எனவும் அவ்வாறே உயிர்கள் பல எனவும் குறிப்பிடும்.
- இறைவனை அடைந்து, பேரின்பம் அனுபவிப்பதற்காக ஆன்மா இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களைப் பெற்று வினையியற்றி, ஆணவமலநீக்கம் பெறுவதற்குத் திருவருளின் துணையைக்கொள்ள வேண்டும்.
- சைவசித்தாந்த சாத்திரங்கள், ஆன்மா திருவருள் பேற்றினால் சைவநாற்பாதங்களின் வழிநின்று இறைவனுடன் இரண்டறக் கலந்து, தாடலை போல் அத்துவித முத்தி பெற்று உய்யும் என முடிந்த முடிபாகக் கூறுகின்றன.

### 6.3.3 சைவ சித்தாந்தக் கோட்பாடுகள்

- சைவம் சிவசம்பந்தமுடையது. சைவம் கூறும் உண்மைகளின் முடிந்த முடிவான உண்மையைக் கூறுவது சைவசித்தாந்தம்.
- 'சிவமாதல் வேதாந்த சித்தாந்தமாகும்' என திருமந்திரத்தில் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.
- சைவ சித்தாந்தத்தை அளவையியல் அடிப்படையில் உன்னத கோட்பாடாக வளர்த்தவர்கள் மெய்கண்டாரும் மெய்கண்டசந்தானமுமாகும்.
- இச் சித்தாந்தக் கோட்பாட்டைச் சுருக்கியும் விரித்தும் தமிழ்மொழியிலே முழுமையாக, முதலிலே உருவாக்கித் தந்தவர் மெய்கண்டார். இவரது சிவஞானபோதமும் ஏனைய பிற சாத்திர நூல்களும் சைவசித்தாந்தக் கருத்துக்களை மெய்யியல் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு வகுத்துள்ளன.
- சைவசித்தாந்தத்தின் உயரிய கொள்கை சிவமே உயர்ந்த உள்பொருள் என்பதும் சீவன் தன்மையில் சிவத்தைப் போன்றது. ஆனால் அதில் ஒன்றுபட்டதன்று என்பதும் இறைவன் (பதி), ஆன்மா (பசு), தளை (பாசம்) எனும் மூன்று பொருள்களும் நித்தியமானவை என்பதாகும்.
- இச்சைவசித்தாந்தக் கோட்பாடு, பிரமாணங்கள் அல்லது அளவைகள் ஊடாகவும் சற்காரியவாதத்தினூடாகவும் விளக்கப்படுகின்றன.
- சைவசித்தாந்தச் சிந்தனை விளக்கத்திற்கு உதவும் அடிப்படை அளவைகள் பிரத்தியட்சம், அநுமானம், ஆப்த வாக்கியம் (ஆகமப் பிரமாணம்) என்பன ஆகும். அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாயிருப்பவை அளவை அல்லது பிரமாணம் எனப்படும்.

  பிரத்தியட்சப் பிரமாணம் - காட்சியளவை(புலக்காட்சி)
  அநுமானப் பிரமாணம் - கருதலளவை
  ஆகமப் பிரமாணம் - நூலளவை
- ஒரு பொருளை அல்லது சம்பவத்தை அல்லது செயலைப் புலன்தொடர்பினால் நேரடியாக அறிதல் அதனையே உண்மையென உறுதியாக நம்புவது பிரத்தியட்சப் பிரமாணம்.
- ஒரு சம்பவத்தை அனுமானிப்பின் மூலம் அறிந்து கொண்டு, காரண காரியத் தொடர்பைப் பயன்படுத்தி, பின்னர் காரியத்துக்குக் காரணமான சம்பவத்தை ஊகித்தறிதலும், ஐயம் நீங்கலும் அனுமானப் பிரமாணங்களேயாகும்.

  (உ-ம்) புகை - நெருப்பு.

- இறைவன் திருவருளுக்குப் பாத்திரமான ஞானச் செல்வர்களின் நூல்கள், பாடல்களில் இடம்பெறும் பொருளாழமுள்ள கூற்றுக்கள் ஆகமப் பிரமாணம் எனப்படும். (உ - ம்) "ஏகம்சத்"
- இம் மூன்று அளவைப் பிரமாணங்களிலும் மலைவு இல்லாமல் நெறிமுறைகளுக்கு இணங்கப் பிரயோகித்தல், சைவசித்தாந்த சிந்தனைத் தெளிவிற்கு இன்றியமையாததாகும்.
- சைவசித்தாந்தக் கோட்பாட்டின் உயிர்நிலையாக விளங்குவது சற்காரியவாதம் ஆகும். "உள்ளது இல்லாததாகாது; இல்லாதது உள்ளதாகாது உள்ளதிலிருந்து உள்ளதே தோன்றும்; இல்லாததிலிருந்து உள்ளது தோன்றாது" எனும் நான்கு உண்மைக் கூற்றுக்களும் சற்காரிய வாதத்தின் அங்கங்கள் ஆகும்.
- பிரபஞ்சத்தின் உண்மைப்பொருளை விளங்கிக் கொள்ளச் சற்காரியவாதம் துணை புரிகின்றது. காணப்படும் பொருள் ஆகிய பிரபஞ்சம் இல்லாதது இல்லை. அது உள்ள பொருளில் இருந்தே தோற்றம் பெறுகிறது.
- அளவையியல் நெறிமுறைகள், சற்காரியவாதம் என்பவற்றின் அடிப்படையில், சைவ சித்தாந்தக் கோட்பாடு, உலகப் பொருட்களை மூன்று பிரிவுகளில் அடக்குகிறது.
  1. வரையறை இல்லாத அறிவுடைய பொருள் - பதி
  2. வரையறை உள்ள அறிவுடைய பொருள் - பசு
  3. அறியும் இயல்பற்ற சடப்பொருள் - பாசம்
- பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களும் சித்து, சதசித்து, அசித்து எனப்படும். இவை அநாதியானவை.
- சைவசித்தாந்தம், பதி உண்மைப்பொருள் என்பதனை முதலில் நிறுவுகின்றது. அதற்கு ஆகமப் பிரமாணத்தையும் அநுமானப் பிரமாணத்தையும் துணையாகக் கொள்கிறது.
  - பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உள்ளான்"
- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள், அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும். அவனே கடவுள்.
- இறை அனுபூதி பெற்ற தத்துவ ஞானிகளது வாக்குகளாலும் அவர்களால் உருவாக்கப்பட்ட வேத ஆகமங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள், தேவார திருவாசகங்களின் கருத்துக்களாலும் பதி உண்மை நிறுவப்படுகின்றது.
- ஆன்மாக்கள் பல. அவை காட்சிக்குத் தெரியாதவை; அநுமானத்தால் மட்டும் உணரப்பட வேண்டியவை எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது.
- ஆன்மாக்கள் நல்வினை தீவினைகளை அனுபவிப்பதற்கே உலகம் பதியினாற் படைக்கப்பட்டுள்ளது. ஆன்மாவோடு இயற்கையாகவே செம்பில் களிம்பு போல ஆணவ மலம் இணைந்திருக்கிறது.

- ஒருவனாகிய இறைவனும் அநேகரான ஆன்மாக்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களும் ஆன (பதி, பசு, பாசம்) முப்பொருள்களும் அநாதியானவை என்பது சைவசித்தாந்தம்.
- இந்த முப்பொருள்களுக்கு இடையிலான தொடர்பினை சைவசித்தாந்தம் வியாபகம், வியாப்பியம், வியாத்தி எனக் கூறும். இது பதியாகிய இறைவனின் வியாபகத்துள் பசுக்களாகிய உயிர்களும் பாசமாகிய மும்மலங்களும் அடங்கியிருக்கின்றன என்பதையும் இந்த வியாபகமும் இப்பொருட்கள் யாவற்றுள்ளும் விரவி நீக்கமற நிறைந்துள்ளது என்பதையும் விளங்குகிறது.
- இதனைச் சிவஞானசித்தியார், கடல் தன்னுள்ளே தண்ணீரையும் உப்பையும் கொண்டிருப்பது போல் இறைவன் ஆன்மாவையும் பொருட்களையும் கொண்டுள்ளான் என விளக்குகிறது.

## (அ) பதி

- சைவசித்தாந்திகள் இறைவனை இறை, கடவுள், பதி, பரமசிவன், ஈசன், பரமாத்மா எனப் பல பெயர்களால் குறிப்பிடுவர்.
- பதி ‘தலைவன்’ எனப் பொருள்படும். இறைவன் எல்லா உயிர்களுக்கும் எல்லா உலகங்களுக்கும் தலைவர் என்பதை இது குறிக்கும்.
- பதியே மேலான பொருள். பதி ஒருநாமம், ஒருருவம் ஒன்றுமிலான். தத்துவங்களைக் கடந்தும், தத்துவங்களோடு பிரிந்தும், பிரிப்பின்றியும் நிற்பவன். அளவைகளுக்கு எட்டாதவன்.
- பதிக்கு இருநிலைகள் சைவசித்தாந்தத்தில் கூறப்படுகிறது.
  1. சிறப்பியல்பு- சொரூப லட்சணம்
  2. பொது இயல்பு -தடத்த லட்சணம்
- பதி ஊரிலான், பேரிலான், குணமிலான், குறியிலான், போக்கிலான், இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் இவன் என எவராலும் சொல்ல முடியாது. இவ்வாறு கருவி கரணங்களுக்கு அப்பாற்பட்டு நிற்கும் நிலையைச் சொரூப இலட்சணம் என்பர். இதனைச் சிவப்பிரகாசம் பின்வருமாறு குறிப்பிடும்.
  - பல்கலையாகம வேதம் யாவையினுங் கருத்து பதிபசுபாசம் தெரித்தல் பதிபரமே அதுதான் நிலவும் அரு வுரு வன்றிக் குணங்குறிகள் இன்றி நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி அலகில் உயிர்க்குணர்வாகி அசலமாகி அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச் செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த் திகழ்வது தற் சிவமென்பர் தெளிந்துளோரே”
- பதி, ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணையினாலே, அநாதியாகவே மலத்தால் பிணிப்புண்டிருக்கும் அவற்றின் துன்பங்களைப் போக்கி, அருள்செய்வதற்காக தன்னிலையினின்றும் ஒருபடி இறங்கி வந்து, எழுந்தருளும் நிலை தடத்த இலட்சணமாகும்.

- இந்நிலையில் அவ்வுயிர்களின் பொருட்டு, ஐந்தொழில்களையும் செய்வதற்குரிய வகையில் திருவருளையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளுவான். இந்த நிலையில் உருவும், குணமும், குறியும், செயலும் உடைய மூர்த்திகளாக இருப்பதே இறைவனது தடத்த நிலையாகும்.
  - அவையேதானே ஆய் இருவினையில் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே" என்பது சிவஞானபோதம்.
- சிவம் அதாவது பதியின் இயல்பு ஞானமும் ஆனந்தமுமாகும். இதனைச் சத், சித், ஆனந்தம் என்பர். இம்மூன்றினுள் இறைவனின் எண்குணங்களும் அடங்கும். இவை
  - என்றுமுள்ள, எக்காலத்தும் ஒரே தன்மையாயிருக்கும் பொருள்சத்து. தன்வயத்தனாதல் இதனுள் அடங்கும்.
  - சித்தில் தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை எனும் ஆறு குணங்களும் அடங்கும்.
  - ஆனந்தத்தில் வரம்பிலின்பமுடைமை அடங்கும்.
- பதியாகிய பரசிவத்தினது மேலான கருணை பராசக்தி. அப்பராசக்தியினின்றும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி என்பன தோன்றும்.
- பரமசிவன் அச்சக்திகளைப் பொருந்தி நின்று, அருட்டிருமேனிகளைக் கொண்டு சுத்தமாயையோடு பொருந்தி, வேதம் ஆகமம் முதலிய கலைகளைத் தோற்றுவிப்பான்.
- பரமசிவன் அசுத்த மாயையினின்று உலகங்களைத் தோற்றுவிப்பான். உரிய காலம் வரை உலகை நிலைநிறுத்தி, காத்து, பின் தோன்றிய முறையே ஒடுங்கச் செய்து, முடிவில் தன்னிலே ஒடுங்கச் செய்வான்.
- இவ்வாறு இறைவன் கொள்ளும் திருமேனிகள் மூன்று. அவை அருவம், உருவம், அருவுருவம் என்பனவாகும்.
- சிவன், முப்பத்தாறு தத்துவங்களிலும், ஒவ்வோர் தத்துவங்களினின்று கொண்டு, தத்தம் தொழிலைச் செய்யும் முறையில் சிவம், சக்தி, நாதம், விந்து என அருவத் திருமேனி நான்காயும், சதாசிவம் எனும் அருவுருவத் திருமேனி ஒன்றாயும், மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் எனும் உருவத் திருமேனி நான்காயும் ஒன்றிலொன்றாகத் தோன்றி, ஒன்பது பேதத்திலும் வேற்றுமையின்றி நின்று அவ்வத் தொழிலைச் செய்வர்.

| | பதி | |
|---|---|---|
| அருவம் | அருவுருவம் | உருவம் |
| நிஷ்களம் | சகளநிஷ்களம் | சகளம் |
| (சத்தர் ) | (உத்தியுத்தர் ) | (பிரவிருத்தர் ) |
| சிவம் | சதாசிவம் | மகேஸ்வரன் |
| சக்தி | | உருத்திரன் |
| நாதம் | | திருமால் |
| விந்து | | பிரமன் |

- இவ்வொன்பது பேதங்களுள் சக்தி, விந்து இரண்டும் சக்தி பேதமாகும். ஏனைய ஏழும் சிவபேதமாகும். இச் சிவபேதம் ஏழினும் பராசக்தியும் அவரோடு பிரிவின்றி அவ்வப் பெயர் பொருந்தி, துணையாய் நின்று நடாத்தும். (உ-ம்) மகேஸ்வரி, உமை, நாராயணி.
- சைவசித்தாந்தத்தில் இறைவன் உயிர்களுடன் ஒன்றாய், உடனாய், வேறாய் நிற்பான் என்பர். இவற்றைப் பேதம், அபேதம், பேதாபேதம் ஆகிய மூன்று நிலைகளிலும் காண்பர்.
  - (i) இறைவன் உலகங்களும் உயிர்களுமாக நிற்கும் ‘அபேத’ நிலை
  - (ii) இறைவன் தானாக அல்லது வேறாக நிற்கும் ‘பேத’ நிலை
  - (iii) இறைவன் அவையே தானாக நிற்கிறான். இது ‘பேதாபேத’ நிலை எனப்படும்.
- தடத்த நிலையில் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம்.

படைத்தல்

- இறைவன் உயிர்களைப் படைப்பதில்லை. உயிர்களுக்கு வேண்டிய உடம்பு,உணர்த்துவதற்கு வேண்டிய கருவி கரணங்கள், வாழ்க்கைக்கு வேண்டியஇடங்கள், நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் ( தனு, கரண, புவன, போகம்) என்பவற்றைப் படைக்கிறான்.
- ‘இல்லது உளதாகாது’ எனும் சற்காரிய வாதத்தை ஒப்புக் கொள்ளும்சைவசித்தாந்தம், சூக்கும (நுட்பமான) நிலையிலுள்ளவற்றை தூல (பருப்பொருள்) நிலைக்குக் கொண்டு வருவதையே படைத்தல் (சிருஷ்டி) என்றுகூறும். உலகப் படைப்பிற்கு முதற்காரணம் மாயை. துணைக்காரணம் சத்தி.நிமித்த காரணம் இறைவன் ஆகும்.

காத்தல்

- தோற்றுவிக்கப்பட்ட உலகு உயிர்களை உரிய கால எல்லை வரையிற் காப்பாற்றி, கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்தலே காத்தல் (திதி) எனப்படும்.

அழித்தல்

- அழித்தல் பல பிறவிகளிற் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் அழித்தல் (சங்காரம்) எனப்படும்.

மறைத்தல்

- இரு வினைகளை ஒன்றாக எண்ணும் நிலையினை வருவித்து, மலங்களைமுதிர்விக்கும் அருட்செயல் மறைத்தல் (திரோபவம்) எனப்படும்.

அருளல்

- உயிர்களின் பக்குவ நிலையில் அவற்றின் மலபாசத்தை ஒழிக்க வீடுபேறு எனப்படும் முத்தியை அருளுவது அநுக்கிரகம் எனப்படும். இதனை உமாபதி சிவாசாரியார், பின்வருமாறு திருவருட்பயனில் கூறுவார்.
  - ஆக்கி எவையும் அளித்தா சுடன் அடங்கப் போக்கும் அவன் போகாப்புகல்
  "

**(ஆ) பசு**

- சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் சதசித்து எனப்படுவது பசு.
- கடவுளைப் போலவே உயிர்களும் அநாதி நித்தியப் பொருள்கள்.
- சைவ சித்தாந்திகள் உயிர்களைப் பசு, ஜீவன், ஆன்மா, தேகி, உள்ளம், சதசத்து எனப் பலவாறு அழைப்பர்.
- உயிர்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. உயிர்கள் அளவில்லாதவை.
- பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டது. பாசங்களுடன் பொருந்தியுள்ளதால் உயிருக்குப் பசு எனும் பெயர் வழங்குகிறது.
- ஆன்மாவுக்குப் பல குணங்கள் உள்ளன. அவை அறிவித்தால்அறியும் தன்மை; சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மை என்பனவாம்.
- பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கும் நிலை பெத்தநிலை. பாசங்கள் யாவும் நீக்கப்பட்டு உயிர் இறைவனைச் சாரும் போதுள்ள நிலை முத்தி எனப்படும்.
- பசு நித்தியமாய், வியாபகமாய் சரீரந்தோறும் வெவ்வேறாய் இருக்கும். பதி அவற்றுடன் அத்துவிதமாய் நின்று வினைப்பயனை ஊட்டுவார். அவை பாசத் தொடர்பில் பிறப்பு இறப்புக்குட்படும். இவற்றுக்கு அகக்கருவிகளும் புறக்கருவிகளும் துணையாய் அமையும்.
- ஆன்மாக்களுக்கு மூன்று அவத்தைகள் (நிலைகள்) உள்ளன எனச் சைவசித்தாந்தம் கூறும். அவை கேவலாவத்தை, சகலாவத்தை, சுத்தாவத்தை எனப்படும்.

  கேவலாவத்தை அறியாமையில் மூழ்கி கிடக்கும் நிலை.

  சகலாவத்தை - உயிரின்மீது கொண்ட கருணையால் பதி, மாயையை முதற்காரணமாகக்கொண்டு உயிருக்குத் தனு, கரண, புவன, போகங்களைத் தந்துதருளுகிறான். உடம்மை ஏற்கும் உயிர், மலபந்தங்களுக்கு உட்பட்டு நிற்கும்நிலை.

  சுத்தாவத்தை - சகலாவத்தை நிலையில் பல்வேறு பிறவிகள் எடுத்துப் படிப்படியே முதிர்ந்து இறைவன் திருவருளுக்கு உரியதாகும் போது உயிர் அடையும் நிலை இதுவாகும்.

- பசுக்கள் தம் பெத்த நிலையில் மூவகைப்படும். அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்பனவாம்.

  விஞ்ஞானகலர் - ஆணவமலம் மட்டும் உள்ளவர்.

  பிரளயாகலர் - (உலகத் தொடர்புள்ளவராய்) ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலமும் உள்ளவர்.

  சகலர் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும்உடையவர்.

- ஆன்மா சார்ந்ததன் வண்ணமானது என்பது அதன் பிரதான குணமாகிறது. சத்தாகிய பதியைச் சாரும்போது சத்தாயும் அசத்தாகிய மலத்தைச் சாரும் போது அசத்தாயும் விளங்குவதால் பசு சதசத்து எனப்படுகிறது.

- ஆன்மாக்கள் காரணாவத்தைகளை மட்டுமன்றி, காரியாவத்தைகளாகிய சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் எனும் ஐந்து அவத்தை களுக்கும் உட்படும். இவற்றை முறையே நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் எனவும் கூறுவர். இவை ஆன்மாவில் கேவலாவத்தை நிலை யிலும் சகலாவத்தை நிலையிலும் காணப்படும்.
- ஆன்மாக்கள் ஆணவ முனைப்பால் நல்வினை, தீவினைகளாகிய இருவினை களைப் புரிந்து அவற்றின் பயனை அனுபவிப்பதற்கேற்ப உடம்பை பெறுகின்றன. பிறந்து பழவினையை நுகரும்போதே புதுவினைகளையும் பெருக்கி பிறப்பிறப்புச் சுழலில் உழல்கின்றன. இவ்வேளை அவை நல்வினைப் பயனால் இறுதி இலட்சியத்தை அடைய முயற்சிக்கின்றன. அவை சரியை, கிரியை, யோக, ஞானமெனும் நாற்பாதங்களின் வழிநின்று படிப்படியாக முத்திநிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றன.
- இந்நிலையில் இருவினை ஒப்பு, மலபரிபாகம் பெற்று சத்திநிபாதம் (குரு வடிவாகத் திருவருள் பதியப்) பெற்று இறைவனடி சேருகின்றன.

## (இ) பாசம்

- ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் பெறுவதற்குத் தடையாய் அதனைப் பந்தித்திருப்பது பாசம் எனப்படும்.
- இது தளை, கட்டு, பந்தம், அசித்து எனவும் வழங்கும்.
- பாசம் உயிரை மாசுபடுத்தும் காரணத்தினால் மலம் எனப்படும்.
- மலங்கள் மூன்று வகைப்படும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இவை ஆன்மாவைப் பற்றும் சடத்தன்மையுள்ள அறிவற்ற நித்தியப் பொருள்கள்.
- மும்மலங்களுள் ஆணவமே, ஆன்மாவை அநாதியாகப் பற்றியுள்ளதால் ‘மூலமலம்’ எனவும், ‘சகசமலம்’ எனவும் கூறுவர்.
- கன்மமும் மாயையும் இடையிடையே வந்து செயற்கையாகக் கூடுவன. ஆகையால் அவை ‘ஆகந்துக மலம்’ எனப்படுகின்றன.

### (i) ஆணவம்

- ஆணவ மலம் உயிரை மயக்கி, அவற்றின் வியாபகத்தன்மை விளங்கவொட்டாது மறைத்து, ஒடுக்கி அணுத்தன்மை படுத்துவதனால் ஆணவம் எனப்பட்டது.
- பசுத்துவம், மலம், அஞ்ஞானம், அவித்தை, பாசம், அசுத்தி, களங்கம், மோகம், தமசு, சடம் எனும் பெயர்களும் ஆணவ மலத்தையே குறிக்கும்.
- ஆன்மாவை சிற்றறிவும் சிறுசெயலும் உடையதாக்குதல் ஆணவத்தின் இயல்பு.
- ஆணவம் ஆன்மாக்களுக்குப் பொய்ப்பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் என்று அறிவித்து நிற்றலால், அவை வினைகளை இயற்றி பிறவியுள் அகப்பட்டுத்துன்புறுகின்றன.

- நான், எனது என்று எண்ணும் அகந்தையும் இ.்.து எனது என எண்ணுகிற மமதையும் ஆணவத்தினாலேயே உண்டாகின்றன.
- ஆணவம் அளவில்லாத சக்திகளை உடையது. ஆணவம் செம்பிற்களிம்பு போல உயிருடன் கலந்து நிற்கும் தன்மையுடையது. உயிர்களுக்கு ஆணவம் ஒரு குற்றமாகக் இருத்தலால் 'மலம்' எனப்பட்டது.
- கண்ணை மறைத்து நிற்கும் இருள்போல ஆணவமலம் உயிரின் அறிவை மறைத்து நிற்றலால் 'இருண்மலம்' எனப்பட்டது.
- ஆணவம் ஆன்மாவைப் பந்தித்திருக்கும்போது, தன்னையும் காட்டாது பிறபொருளையும் காட்டாது. ஆனால், இருளோ பிறபொருளைக் காட்டாவிடினும் தன்னைக் காட்டும். ஆதலால் ஆணவம் இருளிலும் கொடியது.
- உயிரின் அறிவு, இச்சை, செயல் ஆகியவற்றை மறைத்து நிற்கும் ஆணவத்திற்கு குணங்கள் எட்டு என்பர் சைவசித்தாந்திகள். அவை,

  (i) விகற்பம் - தன்னைவிடப் பிறர் ஒவ்வாரெனல்.

  (ii) கற்பம் - பிடித்ததைப் பிடித்திருத்தல்.

  (iii) குரோதம் - கோபம் கொண்டு நினைத்தல்.

  (iv) மோகம் - ஒன்றிற்கு ஆசைப்படல்.

  (v) கொலை - உயிர்களைக் கொல்லுதல்.

  (vi) அஞர் - எப்பொழுதும் துக்கப்படுதல்.

  (vii) மதம் - அகங்காரம் மேலிடுதல்.

  (viii) நகை - சிரித்தல்.
- ஆணவம் உயிரின் குணமன்று; அதன் குற்றமே.
- நெல்லுக்கு உமி போன்றதாய் உயிரைப் பற்றி நிற்கும் ஆணவத்தை நீக்குதலே முத்திநெறியாகும்.
- ஆன்மாக்களின் மூன்றுநிலைகளுள் கேவலநிலை, சகலநிலை என்னும் இரண்டிலும் ஆணவம் ஆன்மாவை பந்தித்து நிற்கும். சுத்தநிலை எனும் முத்திப்பேற்றின் போது ஆணவம் வறுத்த வித்துப் போன்று வலி கெட்டு நிற்கும்.
- ஆன்மா மாயையின் காரியமான உடம்பை ஒரு சாதனமாகப் பெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்தித் திருவருளை உணர்ந்து இறைவனைப் பற்றி நிற்பதே ஆணவம் வலி கெடுவதற்கு வழியாகும். இதனை,

  ஒன்று மிகினும் ஒளிகவராதேலுள்ளம்

  என்றும் அகலாது இருள் " எனத் திருவருட்பயன் விளக்குகிறது.
- சிவஞானசித்தியாரில் ஆணவமலத்தின் தன்மைகளை அருணந்தி சிவாசாரியார் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

  ஒன்றதாய் அநேகசக்தியுடையதாய் உடனாய் ஆதி

  அன்றதாய் ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று போத்

  திருத்த வத்தை நிகழ்த்திச் செம்பினிற் களிம்பேய்ந்து

  என்றும் அஞ்ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே."

**(ii) கன்மம்**

- கன்மம் என்பது வினை, செயல் எனவும் பொருள்படும்.
- ஆணவத்தின் பிடியிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்காகவே இறைவன் கருவி, கரணங்களோடு கூடிய உடம்பைத் தந்துள்ளான். ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய்ப் பலவித போகங்களைத் தருவதும் ஆன்மாவைக் கைவிட்டு, நீங்காததாய் மனம், வாக்கு, காயம் என்பவற்றால் செய்யப்படுவதாய் அமைவதும் கன்மம் ஆகும்.
- கன்மம் இன்ப துன்பம் தரும் புண்ணிய பாவ வடிவினது. சர்வசங்காரகாலத்தில் ஆன்மாக்கள் மாயையில் ஒடுங்கும்போது அவற்றை விட்டு நீங்காது மாயையில் ஒடுங்கும்.
- கன்மத்தின் செயல்கள் பின்வருவன:
  - (i) இருத்தல் - இந்திரிய வழிச் செல்லுதல்
  - (ii) கிடத்தல் - அவ்வழியில் ஓங்கிநிற்றல்
  - (iii) விடுதல் - முயலுதல்
  - (iv) இயற்றல் - இதவகிதஞ் செய்தல்
  - (v) பரநிந்தை - பிறர்பழிகூறல்
  - (vi) மேவல் - பல பிறப்புகளில் மேவல்
- கன்மம் மூன்று வகைப்படும். அவை சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்பன. ஒருவன் முன் செய்த வினையின்பயனை இப்பிறவியில் அனுபவிக்கும்போது அது பிராரத்தம் எனப்படும். இதனை விதி, ஊழ், தெய்வம், நியதி எனவும் கூறுவர்.
- பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும்போது செய்யும் புதிய வினைகள், 'ஆகாமியம்' எனப்படும். இந்த ஆகாமியத்திலும் ஒருபகுதி உடனுக்குடனே அனுபவத்துக்குவரும். அதுவும் பிராரத்தமாய்க் கழியும்.
- முன்னைப் பிறவியிற் செய்த வினைகளிலும், இப்பிறவியிற் செய்த வினைகளிலும் அனுபவத்துக்கு வராமல் ஏனைய பிறவிகளுக்கு என எஞ்சிக் கிடக்கும் வினை சஞ்சிதமாகும்.
- வினை அனுபவத்துக்கு வரும்போது அதாவது கன்மத்தின் பயன் செய்தமுறையில் அன்றி மாறியும் வரும். இதனைத் தெய்வீகம், பௌதிகம், ஆத்மீகம் என வகுப்பர். தெய்வம் காரணமாகவரும் கன்மத்தை ஆதிதெய்விகம் எனவும், பஞ்சபூதங் காரணமாக வரும் கன்மத்தை ஆதிபௌதிகம் எனவும், உயிர்களால் வரும் கன்மத்தை ஆதி ஆத்மிகம் எனவும் கூறுவர்.
- பிறவி எடுத்த ஆன்மா ஆணவத்தின் முனைப்பினாலே வினைகளைப் புரிகிறது. இவ்வினைகள் பொதுவாக நல்வினை, தீவினை என இருவகைப்படும். ஆணவத்தை அடக்கி, ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினை எனப்படும்.

- ஆணவத்துக்கு அடங்கி ஆன்மாவுக்குக் கேடு விளைக்கும் வினைகள் தீவினையாகும்.
- நல்வினையானது, சிவநல்வினை, பசுநல்வினை எனவும், தீவினை சிவத்தீவினை, பசுத்தீவினை எனவும் பகுக்கப்படும்.
- இவற்றைத் தவிர, வெறுவினை என்பதுவும் உண்டு. இது உணவுசமைத்தல், ஓவியம் வரைதல், ஆடை தைத்தல் முதலியன. இவ்வினைக்குப் பயன் இல்லை.
- பற்றற்ற வினையும் உளது. இது இருவினையொப்பு. மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய பக்குவநிலை அடைந்தோர் எல்லாம் அவன் செயல் என திருவருள் துணைக்கொண்டு செய்யும் வினை. இதன் பயன் இறைவனையே சாரும்.
- ஆன்மாக்கள் முன்செய்த வினைப்பயன்படி, பல பிறவிகளை எடுத்து இருவினை புரிவதும் வினைப்பயனை அனுபவிப்பதுமாய் இருக்கும்போது ஆணவம் மெலிந்து வலிகெட இருவினைகளும் ஒழிய, சிவபுண்ணியத் தொடர்பில் திருவருள் குருவாகி வந்து, தீட்சை செய்து ஆட்கொண்டு முத்திநெறியில் சேர்க்கும்.

**(iii) மாயை**

- எல்லாக் காரியங்களும் தன்னிடத்தல் ஒடுங்குதற்கும், அவை தன்னிடத்தே தோன்றுவதற்கும் காரணமாய் நிற்பது மாயை. இது சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என மூவகைப்படும்.
- சுத்தமாயை சிவதத்துவம் எனவும், சுத்தாசுத்தமாயை வித்தியா தத்துவம் எனவும், அசுத்த மாயை ஆன்ம தத்துவம் எனவும் கூறப்படும்.
- இந்த மூவகை மாயாகாரியமாக அமைந்ததே உயிர் நிலையாகிய உடம்பு. இவ்வுடம்பைப் போல மாயாகாரியமாய் உள்ளதே உலகம்; சிவ தத்துவம் ஐந்தும், வித்தியா தத்துவம் ஏழும், ஆன்ம தத்துவம் இருபத்து நாலும் ஆக முப்பத்தாறு தத்துவங்களைக் கொண்டது உடம்பு.
- ஆணவ இருளில் அடங்கிக் கிடக்கும் ஆன்மாவுக்கு (கேவலநிலையில்), உடலும் கருவிகளும் உபகரித்து உதவுவது மாயை ஆகும். மாயையின் காரியங்களே தனு, கரண, புவன, போகம் என்பனவாம். இதனைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகிறது.

  மாயையே உடலுமாகும் மாயையே கரணமாகும் மாயையே புவனமாகும்
  மாயையே யோகமாகும் மாயையே பொறிகளாகும் மாயையே புலன்களாகும்
  மாயையே அண்டபிண்டம் யாவையும் மாயையாமே
- மாயை மறைத்தலையும் செய்கிறது. இது ஆணவமலச் சார்பில் அமைந்த குணமே அன்றி, அதன் சொந்த இயல்பு அன்று. சுத்தமாயை ஆகிய சிவ தத்துவங்கள் ஆன்மாவுக்கு மெய்யுணர்வு விளக்கத்துக்கு உபகாரமாய் நிற்கின்றன.
- சூரிய ஒளி வரும்வரை, இருளில் நிற்பவனுக்கு விளக்குச் சிறிதளவு ஒளி தந்து உதவுவதுபோலே ஆணவ இருளில் நிற்கும் உயிர்களுக்குத் திருவருளாகிய பேரொளி வந்து சேரும்வரை மாயாகாரியங்களாகிய தனு, கரண, புவன, போகங்கள் சிறிதளவு அறிவு விளக்கம் செய்கின்றன. இதனைத் திருவருட்பயன் பின்வருமாறு கூறும். விடிவாமளவும் விளக்கனைய மாயை வடிவாதி கன்மத்து வந்து "

- **மலங்களை அறுக்கும் வழிகளும் முத்தி நிலையும்**
  - ஆன்மாவானது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களோடு சேர்ந்திருக்கும் வரை பிறப்பு இறப்புக்கு உட்பட்டு உழலும்.
  - மூலமலமாகிய ஆணவம் உயிரோடு இயைந்திருக்கும் வரை ஆன்மாவுக்கு பிறப் புண்டு. பிறப்புண்டானால் கன்மமும், மாயாமலமும் வந்து கூடும். எனவே ஆன்மா பிறப்பை ஒழிப்பதற்கு மலங்களிலிருந்து விடுபட வேண்டும்.
  - ஆன்மா மலபந்தங்களிலிருந்து விடுபடுவதற்குச் சைவசித்தாந்தம் பல வழிகளைக் கூறுகிறது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களாகும். இந் நான்கு மார்க்கங்களிலும் நிற்கும் ஆன்மா படிமுறையாக முத்தி நிலையை நோக்கிச் செல்லும். இதன் முதற்படியாக அமைவது தீட்சையாகும்.
  - மனிதப் பிறவி எடுத்த ஆன்மா மேற்கொள்ள வேண்டிய ஒழுக்கத்தை ‘இறைபணி நிற்றல்’ என்பர். அகப்பூசை, புறப்பூசை, மந்திரசெபம், திருக்கோயில் வழிபாடு, அடியார் வழிபாடு, சமூகத் தொண்டு ஆகியன இதனுளடங்கும்.
  - இவ்வாறு செய்யும்போது ஆன்மாவானது மலங்களிவிருந்து விடுபட்டு பக்குவநிலையை அடையும். இதனை இருவினைஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனும் படிநிலைகளாகச் சைவசித்தாந்தம் கூறும்.
  - இருவினைஒப்பானது ஆன்மா நல்வினை, தீவினை ஆகியவற்றிலும் அவற்றின் பயன்களிலும் விருப்பு வெறுப்பின்றி, இரண்டையும் ஒரே தன்மையாக கருதல். ஓடும் செம்பொன்னும் ஒப்பவே நோக்கும் நிலையாகும். இந்நிலை ஆன்மாவை இறுகப் பற்றியுள்ள ஆணவமலத்தின் பிடி நெகிழ்ந்து தேய்வதற்குத் துணை புரிகிறது. இதனை மலபரிபாகம் என்பர். மலபரிபாகத்தின்போது மலத்தின் பின்னாகச் சுருங்கிக் கிடந்த திரோதனம் என்ற நிலையிலிருந்து திருவருட்சக்தி ஆன்மாவில் படிந்து அதனைத் தன்வயப்படுத்தி நிற்கும். இது சத்திநிபாதம் எனப்படும்.
  - இந்நிலையில் இறைவன் குருவடிவாகி வந்து, ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்ப அவற்றை ஆட்கொண்டருளுவார். இவ்வாறு மலங்கள் ஒழிந்து ஞானம் பெற்ற நிலையில் ஆன்மாவானது மீண்டும் பிறவியில் உழலாது முத்திநிலையை அடைகிறது.
  - ஆன்மாவானது பிறப்பு, இறப்பு எனும் தொடர்ச்சியிலிருந்து விடுபட்டு, இறைவன் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து, பேரின்பம் பெறுதலே முத்திநிலையாகும் எனச் சைவசித்தாந்திகள் கூறுவர்.
  - முத்திநிலை அனுபவிக்கத்தக்கதே தவிர, வாக்கினாற் கூறமுடியாததும் மனதினால் எண்ணமுடியாததுமாகும்.
  - முத்தியடைந்த ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து ஒன்றாம் தன்மைப்படும்.
  - இம்முத்திநிலையைத் தாடலைபோற் கூடல் எனத் திருவருட்பயன் கூறுகிறது (தாள் + தலை = தாடலை)

- **கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I: சைவசித்தாந்தத்தின் மூலங்களை அறிந்து ஆதாரங்களுடன் கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி** II: இந்து தத்துவ வளர்ச்சியில் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் முக்கியத் துவத்தை ஆதாரங்களுடன் முன்வைப்பதற்குத் தேவையான நூல்களை வழங்கி,மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**படி** III: மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளில் சைவசித்தாந்தம் பற்றிய கருத்துக்களை உள்ளடக்கிய கையேடு ஒன்றை உருவாக்க வழிகாட்டுங்கள்.

(i) சைவசித்தாந்தத்தின் மூலங்கள் (சான்றுகளுடன்)

(ii) சைவசித்தாந்த சாத்திரங்கள்

(iii) சைவசித்தாந்தக் கோட்பாடுகளும் ஆன்மீக இலட்சியமும் உருவாக்கிய கையேட்டை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் செய்யுங்கள்.

**உசாத்துணைகள்**

(1) சைவசித்தாந்த அடிப்படைகள் - பேராசிரியர் தேவசேனாதிபதி

(2) சைவசித்தாந்தம் - முத்துராமன்

(3) சைவசித்தாந்தத் தெளிவு - பேராசிரியர் நா. ஞானகுமாரன்

(4) சைவசித்தாந்த மெய்ப்பொருளியல் - பேராசிரியர் கலைவாணி இராமநாதன்

(5) முப்பொருளுண்மை - இளையதம்பி

(6) சைவசித்தாந்தஅறிவாராய்ச்சியியல் - பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா

(7) சித்தாந்த தெளிபியல் - அருணை வடிவேல் முதலியார்

**தேர்ச்சி 7.0 :** மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வார்..

**தேர்ச்சி மட்டம் 7.1 :** இந்து அற நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை வாழக்கையில் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள் :** 20

**கற்றற் பேறுகள் :**

- இந்து அறவியல் நூல்களையும் அவற்றிலுள்ள அறவியல் சார்ந்த விடயங்களையும் பட்டியற்படுத்துவார்.
- இந்து அறவியல் நூல்களுள் தர்மசாத்திரம் பெறும் இடத்தையும் அதன் காலம், உள்ளடக்கம், அரசர்கள், மக்கள் என்போர் மத்தியில் பெற்ற செல்வாக்கு என்பவற்றையும் விளக்கி எழுதுவார்.
- தமிழ்நீதி நூல்களைப் பட்டியற்படுத்தி, அவற்றுள் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்னும் நூல்கள் மக்கள் மத்தியில் பெறும் முக்கியத்தையும் விபரிப்பார்.
- திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்களின் ஆசிரியர், காலம், அவற்றில் கூறப்படும் பொருள்மரபு முதலான தகவல்களைத் தேடித் தொகுப்பார்.
- மேற்கூறிய தமிழ்நீதி நூல்களிற் கூறப்படும் அறக் கருத்துக்களை இனங்கண்டு அவற்றை உதாரணங்களுடன் முன்வைப்பார்.
- மேற்கூறப்பட்ட இந்து அறவியல் நூல்களில் கூறப்படும் காலத்துக்குப் பொருத்தமான கருத்துக்களை இனங்கண்டு வாழ்வில் பின்பற்றுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

### 7.1.1 இந்து அறம் - ஓர் அறிமுகம்

- இந்து சமயம் சார்ந்த ஒழுக்கவியல் சிந்தனைகளையும் அறச் சிந்தனைகளையும் உள்ளடக்கி நிற்பதே இந்து அறவியல் எனக் கூறப்படுகிறது.
- தர்மம் என்னும் சொல் அறம், ஒழுக்கம், நீதி என்னும் ஒத்த பொருளைத் தரும். தர்மம் என்பது 'த்ரு' என்னும் அடிச்சொல்லில் இருந்து பிறந்தது. இச்சொல்லின் பொருள் தாங்குவது என்பதாம். அறு + அம் = அறம். அதாவது தகுந்த வழியில் நடத்தல்.
- மனிதனின் இன்ப துன்பங்களுக்கு அடிப்படையாக அமைவது அறமே என்பது இந்துக்களின் நம்பிக்கை. மனிதன் சுகமாக வாழவும் இன்பம் பெறவும் துன்பங்களைத் தாங்கவும் அறம் துணையாக உள்ளது.

- வேதம், உபநிடதம், பகவத்கீதை, புராண இதிகாசம், தர்மசாத்திரங்கள், அர்த்த சாத்திரம் முதலிய வடமொழி நூல்களிலும் திருமந்திரம், திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, பன்னிரு திருமுறைகள் முதலிய தமிழ் நூல்களிலும் அறவியல் சிந்தனைகள் அடங்கியுள்ளன.
- வேத உபநிடதங்களில் கூறப்பட்ட தர்ம சிந்தனைகள் சனாதன தர்மம் என்றும், வைதீக தர்மம் என்றும் கூறப்படும்.
- இந்து ஒருவனது அறச் செயல்களுக்கு இறை நம்பிக்கையே ஆதாரமாக உள்ளது. இறைவன் மீதும் அறம், நீதி என்பனவற்றின் மீதும் வைக்கும் நம்பிக்கை, மக்களிடையே திரிகரண சுத்தி, திடசித்தம், மன வைராக்கியம், மன உறுதி என்பனவற்றை ஏற்படுத்தும்.
- இந்துக்களிடையே அறமானது சமயம், தத்துவம், கலை, சடங்கு முறை என்பவற்றின் ஊடாக எடுத்துச் செல்லப்படுகிறது.
- இந்துசமயம் மனிதன் நேர்மையான வாழ்வியலை அமைத்துக் கொள்ள வழிகாட்டுகிறது.

### (அ) வேத இலக்கியங்களில் அறம்

- வேத இலக்கியங்களில் ‘ரிதம்’ என்பது ஒழுங்கு பற்றியதாகும்.
  உ-ம்: “உலகினைத் தாங்குவதும் அதை நிலைநிறுத்துவதும் ரிதமாகிய அறமே என வேத இலக்கியமொன்று பகர்கின்றது.
- வேதப் பாடல்களில் அறக் கடவுளாக வருணன் போற்றப்பட்டான்.
- வர்ண சூக்தத்தில், நல்ல சிந்தனைகள் தோன்றவும் தீய சிந்தனைகளில் இருந்து விடுபடவும் இறை வழிபாடு செய்யும் நிலை வற்புறுத்தப்படுகின்றது.
- இயற்கை அகவயமாகவும் புறவயமாகவும் அற ஒழுங்கோடு தொடர்புபட்டுள்ளது.
- தர்மம் தன்னை மீறியவனைக் கொல்லும்; தர்மம் தன்னைப் பாதுகாத்தவனைக் காப்பாற்றும். “ தர்மோ ரக்ஷதி ரஷிதஹ ; தர்ம ஏவ ஹதோ ஹந்தி

### (ஆ) உபநிடதங்களில் அறம்

- ‘அகம்பிரமாஸ்மி’, ‘தத்துவமஸி’, ‘அயமாத்மா பிரமம்’, ஸோ அகம் அஸ்மி’, பிரக் ஞானம் பிரமம்’ என்பன உபநிடத மகாவாக்கியங்கள். நான் பிரமமாக இருக்கிறேன், அது நீயாக இருக்கிறாய். இந்த ஆத்மாவே பிரம்மம். அது நானாக இருக்கிறேன்.ஞானமே பிரம்மம் என்ற உபநிடதக் கருத்துக்கள் “நானும் அது ; நீயும் அது ; எல்லாம் ஒன்று “ எனும் அனைவரையும் சமநோக்குடன் நோக்கும் உயர்நிலை அறத்தைப் போதிக்கின்றன.
- “அனைவரிலும் தெய்வீகம் உண்டு. அனைவரையும் நேசி, அனைவரிடமும் அன்பாயிரு” எனும் உயர் மனித நேயமே இவ்வுபநிடதங்களின் போதனையாகும்.

- மிகவுயர்ந்த ஒழுக்க விழுமியங்களையே உபநிடதங்கள் சிறந்த அறப் பண்புகளாகச் சித்திரித்துள்ளன.(உ-ம்)

| | | |
|---|---|---|
| ஸத்யம்வத | - | உண்மை பேசு |
| தர்மம்சர | - | தர்மவழியில் நட |
| சத்யாத்நப் பிரமதிதவ்யம் | - | சத்தியத்தினின்றும் நழுவுதல் கூடாது |
| தர்மாத் நப்பிரமதிதவ்யம் | - | தர்மத்தினின்றும் நழுவுதல் கூடாது |
| பூத்யை நப்பிரமதிதவ்யம் | - | பெருமையுள்ளவற்றைப் போற்றவும் தவறக்கூடாது |
| மாத்ரு தேவோபவ | - | தாயைத் தெய்வமாகப் போற்றுக |
| பித்ரு தேவோபவ | - | தந்தையைத் தெய்வமாகப் போற்றுக |
| ஆச்சார்ய தேவோபவ | - | குருவைத் தெய்வமாகப் போற்றுக |
| அதிதிதேவோபவ | - | விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக |

- சமூக வாழ்வில் மனித நடத்தைகளை ஒழுங்குபடுத்தும் நடைமுறை விதிகளாக, அறக்கட்டளைகளாக இந்துமதம் இவற்றை வலியுறுத்துகின்றது.
- ஒரு தொழிலைச் செய்தல் கருமம். வேதசாத்திரங்களில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல் தருமம் என அறிஞர் கூறுகின்றனர்.

### (இ) தர்மசாத்திரங்களில் அறம்

- தர்மசாத்திரங்களில் யுக தர்மம் பற்றிக் கூறப்பட்டுகின்றது.
- சமயச் சடங்குகள் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டவை.
- தர்ம சாத்திரங்களில் வர்ண தர்மம், ஆச்சிரம தர்மம், புருடார்த்தம் என்பன அறம் பற்றிக் கூறுவன.

### (ஈ) புராண, இதிகாசங்களில் அறம்

- மகாபாரதம்,இராமாயணம் எனும் இதிகாசங்களும் புராணங்களும் அறத்தை எடுத்துக் கூறுவன.
- மகாபாரதத்தில் தர்மம் உண்மையும் ஒளியும் இன்பமும் உடையது என்று வருணித்துக் கூறப்பட்டுள்ளது.
- புராண இதிகாசங்களில் தர்மத்தையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்பவன் தனது பாவங்களில் இருந்து விடுபட்டு ஆத்மீக ஞானம் அடைவான் என்றும் கூறப்பட்டுள்ளன.
- அன்பு, சத்தியம், பொறுமை, பொதுநலம் முதலிய அறச் சிந்தனைகள் இதிகாசங்களில் பெரிதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

### (உ) பகவத்கீதையில் அறம்

- பகவத்கீதை மனித அறம் பற்றிய நூலாகும்.
(உ-ம்) யதோ தர்மஸ்ய ததோஜெய" எங்கே தர்மம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது என்பது இதன் கருத்தாகும்.

**(ஊ) தமிழ் நூல்களில் அறம்**

- பண்டைத் தமிழ் நூல்களாகிய சங்க நூல்களில் அறக் கருத்துக்கள் காணப்படுகின்றன.
- சங்க மருவிய காலத்தில் அறம் பற்றிய கருத்துக்களைக் கொண்ட நூல்கள் பெருமளவு தோற்றம் பெற்றன.
- சங்க மருவிய கால நூல்களில் திருக்குறள் மனித அறம் பற்றிக் கூறும் முக்கிய நூலாகும்.
- திருக்குறளிலுள்ள அறத்துப்பால் அறக்கருத்துக்களையே வலியுறுத்துகின்றது.
  அழுக்காறு அவா வெகுளி இன்னாசொல் இவை நான்கும்
  இழுக்கா றியன்றது அறம்"
  இதில் அறத்தைக் கடைப்பிடிப்பவன் தவிர்க்கவேண்டிய செயல்கள் கூறப்பட்டுள்ளன.
  - மேற்கூறிய அறங்களினாலேயே உயர் பேறாகிய பேரின்பம் (வீடுபேறு) கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.
- சங்க மருவிய கால அறம் பற்றிய நூல்களுள் திருமந்திரம் குறிப்பிடத்தக்கது. திருமந்திரத்தில் காணப்படும் அறம் தொடர்பான கருத்துக்கள் முக்கியமானவை.
  - "யாவர்க்கு மாம் இறை வற்கொரு பச்சிலை..."
    எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் அன்றாட வாழ்வினை எவ்வாறு அறவழியில் அமைக்கலாம் என்பதையும், அறஞ்செய்வது அரியசெயலன்று; எல்லோ ராலும் செய்யக்கூடியது. யாவர்க்கும் எளிதானது என்பதையும் இப்பாடல் விளக்கும்.
  - "அறம் அறியார் அண்ணல் பதம் நினையும் திறன் அறியார் "
    இதன் மூலம் அறத்தின் முக்கியத்துவம் திருமந்திரத்தில் வலியுறுத்தப்படுகின்றது.
- சைவ சித்தாந்தத்தில் அறம் மேலானதாகக் கூறப்படுகின்றது. சைவ சாதனையுடன் அறம் நெருங்கிய தொடர்புடையது. சைவசித்தாந்த சாத்திரத்தில் ஒன்றான சிவஞான சித்தியார் அறம் பற்றிய விளக்கத்தைப்பின்வருமாறு கூறும்.
  ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம் வழுக்கிலா தவம் தானம் வந்தித்தல் வணங்கல் வாய்மை அழுக்கில்லா துறவு அறிவு அர்ச்சித்தல் ஆதி இழுக்கில்லாத அறங்கள்..."

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I:** 'இந்து அறவியல்' என்ற தலைப்பினை மாணவர்களைக் கவரத்தக்க வகையில் முன்வையுங்கள்.

**படி II:** மேற்படி தலைப்பின் கீழ் வரக்கூடிய விடயங்களைச் சேகரிப்பதற்கான ஆதாரநூல்களை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுங்கள்.

**படி III:** மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்து, அவற்றிற்குத் தலைப்புக்களை வழங்கி, தகவல்களைச் சேகரிக்க வழிகாட்டுங்கள்.

- சேகரித்த விடயங்களைத் தொகுத்து முன்வைக்க ஒவ்வொரு குழுவிலும்ஒருவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முன்வைத்த விடயங்களை அழகுற எழுதி, வகுப்பறையில் காட்சிப் படுத்துங்கள்.

**குழுக்களுக்கான தலைப்புக்கள் குழு**

- அறம், தர்மம், கடமை என்பவற்றுக்கான பொருள் விளக்கம்
- அறத்தைக் கடைப்பிடிப்பதால் ஒவ்வொருவரின் அகத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்கள்.
- வடமொழி நூல்களில் காணப்படும் அறம் தொடர்பான கருத்துக்களைத் தொகுத்தல்.
- தமிழ்மொழி நூல்களில் காணப்படும் அறம் தொடர்பான கருத்துக்கள், மேற்கோள்கள், பாடல்கள் தொடர்பான தொகுப்பு.
- இந்து நூல்களில் கூறப்பட்ட அறக்கருத்துக்களையும், அவற்றைப் பொது வாழ்விலும் பாடசாலை வாழ்விலும் கைக்கொள்ளும் விதமும் பற்றிய தொகுப்பு.

**தேர்ச்சி 7.0** : மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வார்..

**தேர்ச்சி மட்டம் 7.1** : இந்து அற நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை வாழக்கையில் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 05

**கற்றற் பேறுகள்** :

- இந்து அறவியல் நூல்களையும் அவற்றிலுள்ள அறவியல் சார்ந்த விடயங்களையும் பட்டியற்படுத்துவார்.
- இந்து அறவியல் நூல்களுள் தர்மசாத்திரம் பெறும் இடத்தையும் அதன் காலம், உள்ளடக்கம், அரசர்கள், மக்கள் என்போர் மத்தியில் பெற்ற செல்வாக்கு என்பவற்றையும் விளக்கி எழுதுவார்.
- தமிழ்நீதி நூல்களைப் பட்டியற்படுத்தி, அவற்றுள் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்னும் நூல்கள் மக்கள் மத்தியில் பெறும் முக்கியத்தையும் விபரிப்பார்.
- திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்களின் ஆசிரியர், காலம், அவற்றில் கூறப்படும் பொருள்மரபு முதலான தகவல்களைத் தேடித் தொகுப்பார்.
- மேற்கூறிய தமிழ்நீதி நூல்களிற் கூறப்படும் அறக் கருத்துக்களை இனங்கண்டு அவற்றை உதாரணங்களுடன் முன்வைப்பார்.
- மேற்கூறப்பட்ட இந்து அறவியல் நூல்களில் கூறப்படும் காலத்துக்குப் பொருத்தமான கருத்துக்களை இனங்கண்டு வாழ்வில் பின்பற்றுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி** :

### 7.1.1 இந்து அறவியல் நூல்கள் அறிமுகம்

- இந்துசமயம் மக்கள் வையத்துள் ஒழுகலாற்றுடன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதுடன் ஆன்மீக இலட்சியத்தை நோக்கிச் செல்வதற்கும் துணை புரிகிறது.
- உயிர்கள் இறைவனை அடைவதற்கான சாதனங்களுள் தர்மம் என்ற பொருளும் ஒன்று. இது உலகத்தைத் தாங்குவது; உலகத்தையும் மக்களையும் பாதுகாப்பது, நிலைநிறுத்துவது என்னும் பொருள்களைத் தரும்.
- தர்மம் - அறம் எனவும் பொருள் தரும். அறம் எனப்படுவது விதித்தன செய்தலும் விலக்கியன ஒழித்தலும் என மனுதர்ம சாத்திரம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன.
- இந்துசமயம் சனாதன தர்மம் எனப்படும். இதன் முதல் நூல்களுள் ஒன்றான வேதங்கள், 'தர்மத்தின் மூலம்' எனக் கூறப்படுகின்றன. 'வேதோகிலோ தர்ம மூலம்'
- வேதங்களிலும் உபநிடதங்களிலும் சுருங்கிய வடிவில் கூறப்பட்ட தர்மங்கள் இதிகாச, புராணங்களில் விரித்துரைக்கப்பட்டன. அவை தருமசாத்திரங்களில் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கூறப்படுவதாகச் சொல்லப்படுகின்றது.

- இவை தனிமனித தர்மமாகவும், குடும்ப தர்மமாகவும், சமூக தர்மமாகவும், அரச தர்மமாகவும் மக்கள் மத்தியில் வற்புறுத்தப்பட்டன.
- அறம் பற்றிக் கூறும் பல நூல்கள் வடமொழியில் இருப்பதுபோல தமிழ் மொழியிலும் உள்ளன. - கி.முற்பட்ட சங்க இலக்கியங்களில் அறம் பற்றிய கருத்துக்கள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.
  (உ-ம்) யாதும் ஊரே யாவரும் கேளிர்
  தீதும் நன்றும் பிறர்தர வாரா... "
  - சங்க காலத்துக்குப் பின்னர் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் அறம் பற்றிக் கூறுகின்றவையே.
  - திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலான நூல்களும் தருமம் பற்றிக் கூறுபவையே.
  - கால நிர்ணயம் செய்யப்படாதிருக்கும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி முதலான நூல்கள் தமிழில் எழுந்தவையே. இவை வடமொழி நூல்களில் கூறப்படும் அறக்கருத்துக்களை விடச் சிறப்பு வாய்ந்தவை.
  - நாயக்கர் காலத்தில் எழுந்த உலக நீதி, நீதிவெண்பா முதலான நூல்களும் அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 7.1.2 தர்மசாத்திரங்கள்

- தர்மத்துக்கு மூலமாயமைந்த வேதங்கள் 'சுருதி' எனப்பட்டன. இவ்வேதங்களை அடிப்படையாகக் கொண்டு சமயக் கடமைகளையும் தத்துவங்களைப் பற்றியும் அமைந்த நூல்கள் ஸ்மிருதிகள் எனப்பட்டன.
- சுருதிகள் - கேட்கப்பட்டவை; ஸ்மிருதிகள் - நினைத்துச் செய்யப்பட்டவை
  ;
  நினைக்கப்படவேண்டியவை. அதாவது நினைத்துப் பின்பற்றப்படவேண்டியவை.
- சுருதிகள் நேரடியான இறையனுபவத்தின் மூலம் ரிஷிகளுக்கு உணர்த்தப்பட்ட என்றுமுள்ள உண்மைகள். இவ்வனுபவங்களை நினைத்துச் செய்யப்பட்டவை ஸ்மிருதிகள் எனப்பட்டன. ஸ்மிருதி எனச் சரியாக வழங்கப்படும் நூல்கள் விதிநூல்கள் எனும் தர்மசாத்திரங்களாகும்.
- புராதன இந்து சமயத்தில் வாழ்க்கைநெறி என்பதனையும் தர்மம் எனக் குறித்தார்கள். வாழ்வியல் பற்றிய மிகப் புராதனமான நூல்கள் தர்மசூத்திரங்களாகும்.
- இத் தர்ம சூத்திரங்களைப் பொருள் மரபில் ஒத்தவையாய், அவற்றினின்றும் விரிந்தவையாய், சமகால வழமைகளையும் சிந்தனைகளையும் கொண்டவையாய் செய்யுள் நடையில் அமைந்தவையே தர்மசாத்திரங்களாகும்.
- இத்தர்மசாத்திரங்கள் பற்றியும் அவை கூறும் விடயங்கள், அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் தரம் 12 இல் நோக்கியுள்ளோம். இந்நூலில் தர்மசாத்திரங்களில் காணப்படும்

- **தர்மசாத்திரங்களில் அறக்கருத்துக்கள்:**
  - தர்மசாத்திரங்கள், தனிமனிதர்களுக்கும் சமூகங்களுக்கும் அன்றாட வாழ்க்கை நெறிகளில் வழிகாட்டுவதற்கு உதவியான விதிகளைச் சொல்லுதல்.
    வேதத்தின் என்றுமுள்ள உண்மைகளைக் காலத்திற்கேற்பவும் சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும் எடுத்துக் கூறுதல்.
    - மேற்கூறியவற்றின் மூலமாகத் தூயநெறியைப் பாதுகாத்து இந்துசமயத்தினை முன்னேற்றுவதையும் தலையாய நோக்கங்களாகக் கொண்டுள்ளன.
  - இவ்வடிப்படையில் எல்லா மக்களதும் வாழ்க்கைக்கு வேண்டிய அன்றாடப் பணிகளைத் தர்மசாத்திரங்கள் தனிமனித தர்மம், சமூக தர்மம், அரச தர்மம் எனப் பலவாறாகப் பகுத்துக் கூறுகின்றன.
  - மனுஸ்மிருதி "தர்மம் பற்றிய விதிகள் தெய்வீகமானவை என்றும் அவை பிருகு முதலிய முனிவர்களுக்கு இறைவனால் உபதேசஞ் செய்யப்பட்டவை " என்றும் கூறுகிறது.
  - தர்மம் என்பது 'விதித்தன செய்தலாலும் விலக்கியன ஒழித்தலாலும் புண்ணியத்தை ஈட்டுதல் எனவும், இத்தர்மங்களுக்கு மூலாதாரமானவை 'சுருதி ஸ்மிருதி, இவற்றை நன்கு அறிந்தவர்களது ஆசாரங்கள், ஒருவரின் மனச்சாட்சி' என்பதாகவும் குறிப்பிட்டுள்ளன.

**தனிமனித அரச தர்மங்கள்**

- தர்மசாத்திரங்கள் தனிமனிதனதும் சமூகத்தினதும் கடமைகளாக வருணாச்சிரம தர்மக் கோட்பாட்டை விளக்குகின்றன.
  - இருக்குவேத 'புருஷசூக்கத்தில் குறிப்பிடப்பட்ட பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரரெனும் நால்வகை வர்ணங்களையும் அவற்றுக்குரிய கடமைகளையும் அவற்றுக் கிடையிலான தொடர்புகளையும் 'வருண தருமம்' குறிப்பிடுகிறது.
  - நால்வகை வர்ணத்தாருக்குரிய கடமைகளைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

    அந்தணருக்குரியவை - ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

    சத்திரியருக்குரியவை - குடிகாத்தலும், வேட்டலும், ஓதுதலும், வேட்டலும் ஓதுதலும் சிறப்பாக நிறையோம்பலும் உழுது பயிரிடுதலும்

    வைசியருக்குரியது - வாணிகம் செய்தலும் வட்டிக்குப் பணம் கொடுத்தலும்.

    சூத்திரருக்குரியவை - முதல் மூன்று வருணத்தாருக்கும் சிறப்பாக ஊழியஞ் செய்தல்.

    இவ்வர்ணப் பாகுபாட்டிற்கு அடிப்படைத் தத்துவமாக தொழிற்பிரிப்பு அமைந்துளது. இப்பாகுபாடு நாளடைவில் பிறப்புப்பற்றிய பிரிவுகளாய் மாறிவிட்டன. சமுதாய அமைப்பை ஒரு சீரானநிலையில் வைத்துக்கொள்ளவே இந்தவர்ண தருமம் பேணப்பட்டது என்பர்.

- மனு தமது நூலில் வர்ணக் கோட்பாட்டை மிக இறுக்கமாக வலியுறுத்தியதோடு மற்றுமொரு கருத்தையும் முன்வைக்கிறார்.
  பிராமணன் வேதத்தைப் படிக்காமல் வேறு தொழில் செய்தால், அவன் சந்ததியோடு சூத்திரனாகி விடுகிறான். அதேபோன்று தன் நடத்தையினாலும் ஒரு சூத்திரன் பிராமணன் ஆகிவிடுவதும், பிராமணன் சூத்திரனாகி விடுவதும் உண்டு. இதே விதி சத்திரியனாய்ப் பிறந்தவனுக்கும் வைசியனாய்ப் பிறந்தவனுக்கும் பொருந்தும்" என்பதாகும்.
- இக்கருத்து ஒருவன் பிறப்பினாலன்றி, தன்நடத்தையாலும் உயர்ந்தவனாகக் கருதப் படமுடியும் என்ற உண்மையை உணர்த்துவதாக அமைகிறது.
- சமூகக் கட்டுக்கோப்பைப் பேணுமுகமாக வர்ண தருமத்தை முன்வைத்த தர்மசாத்திரங்கள் தனிமனிதனின் வாழ்க்கைப் படிநிலைகளில் ஒருவன் ஆற்றவேண்டிய கடமைகளை 'ஆச்சிரமங்கள்' என்றன. ஆச்சிரமங்கள் வாழ்க்கையின் நான்கு நிலைகளாகும். அவை பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன.
- வாழ்க்கையின் முதன்நிலையான பிரமச்சரியம் கல்வியும் ஒழுக்கமும் கற்கும் நிலை ஆகும். தர்மசாத்திரங்கள் உபநயனம் பெறத் தகுதியுடைய பிராமண, சத்திரிய, வைசிய மாணாக்கருக்கு கல்வி உரியதெனவும், சூத்திரர் தந்தை வழியில் அக்கல்வியைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், அது தொழில்சார் கல்வியாக அமையும் எனவும் கூறுகின்றன.
- கிருஹஸ்தம் என்பது ஒருவன் மணமுடித்து குடும்பத் தலைவனாக வாழும் நிலை எனவும், இந்நிலையில் அவன் பஞ்சயக்ஞம் முதலிய கடமைகளை ஆற்றவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன.
- வானப்பிரஸ்தம் என்பது குடும்பக்கடமைகளை நிறைவுசெய்த பின்பு பந்தபாசங்களை விடுத்து காட்டில் சென்று புலனடக்கத்தோடு, ஆன்மீக விடயங்களில் நாட்டம் செலுத்த வேண்டும் எனக் கூறப்படுகிறது.
- சந்நியாசம் - வானப்பிரஸ்த நிலையில் ஆன்மீகப் பயிற்சி பெற்ற ஒருவன் முற்றும் துறந்த நிலையில் வீடுபேற்றுக்காக முயற்சிக்கும் நிலையாகும். இந் நிலையே மனிதவாழ்வின் இலட்சியமாகும் என தர்மசாத்திரங்கள் கூறுகின்றன.
- தனிமனிதன் ஒவ்வொருவனதும் ஒழுக்கத்தை விளக்கும் படிமுறைகளூடாக, சமூகக் கட்டுக்கோப்பினை வளர்ப்பதற்கும் அறவாழ்வில் ஈடுபடுவதற்கும் மோட்சநிலையைப் பெறுவதற்கும் ஆச்சிரமதருமங்களை தர்மசாத்திரங்கள் வலியுறுத்துகின்றன.
- இவ் ஆச்சிரம தர்மகளூடாக புருடார்த்தங்களை வாழ்வில் கடைப்பிடித்து, ஒழுகுவதற்கும் தர்மசாத்திரங்கள் வழிகாட்டுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்பவை ஒரு மனிதனால் அடையப்பட வேண்டியவை. இவை குறிப்பாகக் கிருகஸ்தனுக்கே முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. கிருகஸ்தன் இவற்றைக் கடைப்பிடிக்கும்போது சமூக நலன் பேணப்படும் என்பது தர்மசாத்திரங்களின் நம்பிக்கை ஆகும்.

- தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களில் சாதாரண தர்மங்கள் பற்றியும் தர்ம சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. அவை தூய்மை, தன்னடக்கம்,பற்றின்மை, சத்தியம், அஹிம்சை ஆகிய ஐந்து அறப்பண்புகளை அடிப்படையாகக் கொண்ட உயர்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளாகும். இவை எல்லோராலும் எக்காலத்தும் கடைப்பிடிக்க வேண்டியவையாகக் கருதப்படுகின்றன.
- தர்மசாத்திரங்கள் உலகின் தோற்றம், பிரமம் அதனைத் தோற்றுவித்த வகை, அது நிலைபெறுவதற்கு மனிதர் கடைப்பிடிக்க வேண்டிய வழிவகைகள் என்பன பற்றியும் விபரிக்கின்றன. பிரமத்தை அறிந்து அதனோடு சேர்வதற்கான வழிவகை களை வாழ்க்கையோடு இணைத்துக்காட்டுவதன் மூலம் இந்து ஒருவனின் ஆன்மீக அறத்துக்கும் வழிகாட்டுகின்றன.

**அரச தர்மம் :**

- தர்மசாத்திரங்களில் முக்கியத்துவமுடையதாக மனுஸ்மிருதி கருதப்பட்டது. மனு தர்மத்தைக் கடைப்பிடிப்பது ‘இராச தர்மம்’ என்ற சிந்தனை இந்து அரசர்களிடையே காணப்பட்டது.
- இந்துக்களின் அரசியற் சிந்தனையில் அரசியல் முதலான யாவற்றுக்கும் தர்மமே அடிப்படை. அரசன் தர்மத்தின் காவலன் என்ற கோட்பாடு வேதகாலம் முதலாக வழங்கி வருகிறது. ஆயினும் இராச தருமம் பற்றிய விதிகளைச் சட்டங்களாக வகுத்துத் தந்தவை தர்ம சாத்திரங்களே.
- மனு தர்மசாத்திரம் அரசனின் இயல்புகள், கடமைகள், பொறுப்புக்கள், நீதிபரிபாலனம், நிருவாகம், வரி அறவிடுதல், படைமாட்சி முதலியன பற்றியெல்லாம் தனியாக விபரிக்கின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டே நாரதர் முதலியோர் தத்தமது தருமசாத்திரங்களில் சட்டங்களை உருவாக்கி உள்ளனர். கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும் மனுஸ்மிருதியைப் பெரிதும் ஒத்ததாக அரசியல் தர்மத்தை விளக்குகிறது.
- தர்மசாத்திரங்கள் விவரிக்கின்ற அரசியல் முடியாட்சி அரசியலாகும். ஆயின் அரசன் தர்மத்தின் காவலன் தர்மத்தினாற் கட்டுப்பட்டவன். தர்மத்திலிருந்து அவன் விலகிச் செல்லுமிடத்து அவன் தண்டனைக்குள்ளாகிறான். “அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்” எனும் சிலப்பதிகாரக் கூற்று தர்மசாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டதே.
- தர்மத்தை நிலைநாட்டுவதோடு குடிகளைக் காப்பதும் அரசனது கடமையாகிறது. இது மகாயாகத்துக்கு ஒப்பானது என ஸ்மிருதி நூல்கள் கூறுகின்றன.
- ‘மன்னன் தனது தவவலிமையால் அரசபதவியைப் பெறுகிறான்’ என நாரத ஸ்மிருதி கூறுகிறது. அரசன் அட்டதிக்குப்பாலகரின் அம்சமென ஸ்மிருதிகள் கூறுகின்றன. தர்மசாத்திரங்கள் அரசனது இயல்புகளையும் கடமைகளையும் தேவர்களுக்குரியனவாக ஒப்பிடுகின்றனவே அன்றி, ஈஸ்வரனாகக் கொள்ளவில்லை. மக்கள் அடங்கி இருக்க வேண்டுமென்பதற்காகவும் மகிமைப்படுத்தவுமே இவ்வாறு கூறின என்பர்.
- மனு ஸ்மிருதியானது, அரசன் வேதம், பொருளியல், தத்துவம் ஆகியவற்றைத் துறை போகக் கற்று கற்றபடி ஒழுகவேண்டும் எனக் கூறுகிறது. ஒழுக்கம், கல்வி, நல்லோரிணக்கம், வீரம், சாதுரியம், விழிப்புணர்ச்சி முதலான இயல்புகள் பொருந்திய வனாக இருக்க வேண்டுமென ஸ்மிருதி நூல்கள் வலியுறுத்துகின்றன.

- அரசன் இச்சை, பேராசை, கோபம் என்பவற்றால் ஏற்படும் தீய பழக்கங்களைத் தவிர்க்க வேண்டும். ஐம்புல அடக்கமுடைய ஒருவனால் மட்டுமே குடிகளின்மீது அதிகாரஞ் செலுத்த முடியும் எனவும் கூறுகின்றன.
- தர்மசாத்திரங்கள் அரசனது அன்றாட கருமங்களைப் பற்றியும் அரச கடமைகளைப் பற்றியும் விரிவாகக் கூறுகின்றன. வேளாண்மை விருத்தி, போக்குவரத்து பாதையமைத்தல், நாடாக்கம், குடியிருப்புக்களை உருவாக்கல், கோட்டை கொத்தளங்கள் அமைத்தல், அரச பதவிகளை வழங்கல், மந்திர ஆலோசனை, இறைவரி பெறல், ஊழியச்சேவை பெறல், குடிகளின் நலனில் அக்கறை செலுத்துதல் பற்றியும் விபரிக்கின்றன.
- ஒருவன் செய்த குற்றத்துக்கு, கர்ஷாபணம் ஒன்று தண்டமாக விதிக்கப்பட்டால் அதே குற்றத்தைப் புரிகின்ற அரசனுக்கு 1,000 கர்ஷாபணம் அபராதமாகும் என்பதே விதி என மனு கூறுகிறார். இது அரச தர்மத்துக்கு எடுத்துக்காட்டாகும்.

**சட்டமும் நீதிபரிபாலனமும்:**

- இந்து சமுதாயத்தின் நீதிமுறை பற்றி மனு ஸ்மிருதியை அடிப்படையாகக் கொண்டு யாக்ஞவல்லியர், நாரதர், பிருகஸ்பதி முதலியவர்களின் பெயரால் வழங்கும் ஸ்மிருதி களும் அர்த்தசாஸ்திரமும் விளக்குகின்றன.
- தர்மம் (மறைநூல் வழக்கு), வியவகாரம் (ஒப்பந்தம்), சாரித்திரம் (மேலோர் வழக்கு), ராஜசாசனம் (அரசரின் கட்டளைகள்) என்னும் நான்கும் சட்டத்திற்கு மூலமானவை என்பதும் வேத சாத்திரங்கள் மூலமான மரபுகள் அரசனது தீர்மானங் களைக் காட்டிலும் பிரதானமானவை என்பதும் தர்மசாத்திரங்களின் கருத்தாகும்.
- நீதிமன்றங்கள் அதாவது பத்து அல்லது மூன்று உறுப்பினர் கொண்ட 'பரிஷத்' எனும் சபை நீதி பரிபாலனத்துக்குப் பொறுப்பாக அமைதல் வேண்டும் என்பது மனுஸ்மிருதியின் கருத்தாகும். நீதிமன்றிலே அரசன் தலைவனாக இருக்க வேண்டும் என்பதும் ஸ்மிருதிகளின் கருத்தாகும்.
- பலவகையான வழக்குகள் பற்றியும் குற்றங்கள் பற்றியும் தரும சாத்திரங்கள் t gupf; pd; wd . F wwj ;j pd ;, a y G> m j w; hd Nehf f; k>, I k>f hy k ;vd gt w; wயும் குற்றவாளி தண்டனையைத் தாங்கிக் கொள்ளும் சக்தியையும் தீர்க்கமாக ஆராய்ந்து அறிந்த பின்பு குற்றவாளிகளுக்கு வேண்டிய தண்டனையை அரசன் வழங்கவேண்டும். நீதியில்லாத தண்டனை வழங்குமிடத்து அரசன் அபகீர்த்திக்கு உள்ளாவதோடு, மறுமை உலகையும் பெறமுடியாதெனக் கூறப்படுகிறது.
- சட்டம், நீதிபரிபாலனம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் பிரஸ்பதி, நாரதர் தருமசாத்திரங்களே மிகச் சிறப்பான ஒழுங்குபடுத்தப்பட்ட நீதிபரிபாலனம் பற்றிக் கூறுகின்றன.
- குறிப்பாக ஞாக்யவல்லியர், நாரதர் தருமசாத்திரங்களில் பெண்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.
- தற்கால நீதிபரிபாலனங்களுக்கு முன்னோடியாக அமைந்தவை இத்தரும சாத்திரங்களே என்பர்.

**தேர்ச்சி 7.0 :** மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 :** இந்து அற நூல்களின் முக்கியத்துவத்தினை அறிந்து அவற்றை வாழக்கையில் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள் :** 05

**கற்றற் பேறுகள் :**

- இந்து அறவியல் கோட்பாடுகளில் முக்கியத்துவம் பெறும் ஆச்சிரம தர்மங்களையும் புருடார்த்தங்களையும் விளக்கிக் கூறுவார்.
- இவை தனிமனித வாழ்வை அறநெறிக்கு உட்படுத்தி, ஆன்மீக இலட்சியத்தை அடைய வழிகாட்டுமாற்றினைச் சான்றுகளோடு முன்வைப்பார்.
- இந்து அறவியல் கோட்பாடுகளுடன் சமணத்தில் பத்து ஒழுக்கங்களையும் பௌத்தத்தின் பஞ்சசீல, தசசீலக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு எழுதுவார்.
- இந்து அறவியல் கோட்பாடுகள், உலகியல் வாழ்வை படிநிலைகளாக ஆன்மீக நெறிக்கு இட்டுச்செல்லுமாற்றை அறிந்து, நடைமுறை வாழ்வுடன் ஒப்பிடுவார்.
- இந்துசமய அறவியல் கோட்பாடானது, வாழ்வை ஒழுங்குமுறையில் அமைத்துக் கொள்ள உதவும் சாதனமாக அமைவதை உணர்ந்து மதிப்பளிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 7.1.1.1 ஆச்சிரம தர்மங்கள்

- இந்துமக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழவும் அதன் பயனாக ஆத்மீக விடுதலை பெறவும் எமது முன்னோர்களால் வகுத்தளிக்கப்பட்ட படிநிலைகளின் ஆச்சிரமக் கோட்பாடாகும்.
- இந்துக்கள் மனித வாழ்வினைப் பிரமச்சரியம் (மாணவ நிலை), கிருஹஸ்தம் (இல்லற நிலை), வானப்பிரஸ்தம் (காட்டில் வசிக்கும் நிலை), சந்நியாசம் (துறவு நிலை) எனும் நான்கு நிலைகளாக வகுத்தனர். இந்நான்கு வாழ்க்கைப் படிநிலை களும் வடமொழி நூல்களில் ஆச்சிரமங்கள் எனப்பட்டன.
- ஆச்சிரம தர்மங்களினின்று ஆற்ற வேண்டிய கடமைகள், கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை முறைகள் என்பன பற்றி தருமசாத்திரங்கள் விதிகளாக விளக்குகின்றன.
  பிரமச்சரியம் -வாழ்க்கையின் ஆரம்பக் கட்டம் (மாணவப் பருவம்)
  கிருஹஸ்தம்-ஒருவன் மணமுடித்து இல்வாழ்க்கை நடத்துக் காலம்.
  வானப்பிரஸ்தம் -இல்வாழ்க்கையின் பயன்களை அதற்குரிய கடன்களை நிறைவேற்றிய பிறகு மறுமைப்பயன் கருதி ஆன்மீக ஈடேற்றத்திற்கு ஆயத்தமாகும் நிலை. சந்நியாசம்- முற்றுந் துறந்த நிலை - வானப்பிரஸ்த நிலையில் பந்தபாசங்களைத் துறந்து, இன்ப துன்பங்களைச் சமநிலைப்படுத்தி பற்றினைத் துறத்தற்கான பக்குவ நிலையினின்றும் மேலான நிலை.
- இந்து சமுதாயத்தில் இவ்வாச்சிரம தர்மங்கள் தனிமனித தர்மத்தைப் பேணவும், ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் இறுதியில் ஆன்மீக இலட்சியத்தை அடையவும் வழிகாட்டுவதனால் இந்து அறவியல் கோட்பாடுகளில் முக்கியத்துவம் பெறுகின்றன.

**பிரமச்சரிய நிலை**

- இது மனித வாழ்க்கையின் முதலாவது படியாகும். ஒருவன் கல்வியும் ஒழுக்கமும் கற்கும் நிலையினைப் பிரமச்சரியம் என்பர்.
- பிரமம் என்பது மெய்ப்பொருள். மெய்ப்பொருளை நோக்கி மாணவனை அழைத்துச் செல்லும் கல்வி முறைமை பிரமச்சரியம் ஆகும்.
- கல்வி என்பதனை 'மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்றார் வள்ளுவர். மாணாக்கன் குருவின் இல்லம் நாடிச் சென்று குருவைத் தெய்வமாக மதித்து, குருவுக்குப் பணிவிடை செய்து, குருவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, அறிவியல்களையும் கலைகளையும் கற்றுக் கொள்ள வேண்டும்.
- குருகுலக் கல்வியில் வேதக்கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அத்துடன் அரசியல், பொருளியற்கல்வியும் வழங்கப்பட்டன. புராதன குருகுலங்களில் வில்வித்தை முதல் குருவிற்கு பொருள் தேடலில் பெற்ற அனுபவக்கல்வியும் அளிக்கப்பட்டது.
- பயிற்சிக்காலம் முடிந்தவுடன் குரு தம் மாணாக்கர்களுக்கு இறுதியாய் புத்திமதி களைக் கூறி வீட்டுக்கு அனுப்பி வைப்பார். தைத்திரிய உடநிடதத்தில் இத்தகைய அறிவுரையொன்று காணப்படுகிறது.

  சத்தியத்தைப் பேசுங்கள்; அறச்செயல்களைச் செய்யுங்கள்; படித்ததை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள்... "
- மாணவனும் குருவுக்குத் தன்னாலியன்ற தட்சணையை வழங்கி, தன் பெற்றோரின் இல்லம் சென்று, கிருஹஸ்த வாழ்வுக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்வான்.
- புலனடக்கம், நல்லொழுக்கம், ஆசாரம் பேணுதல், பிரமச்சரிய விரதம் காத்தல், கல்வி கற்றல் முதலானவை பிரமச்சரியத்தின் சிறப்புக்களாகக் கருதப்பட்டன.

**கிருஹஸ்த நிலை:**

- இது வாழ்க்கையின் இரண்டாவது படிநிலையாகும். தனது கல்விப் பருவத்தை நிறைவுசெய்த ஒருவன் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையைத் தன் மனையா ளோடு மேற்கொள்ளும் நிலை.
- கிருஹஸ்தம் அறத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையாகும். குடும்பத் தலைவன் தன் மனையிலிருந்து, தன் மனைவியின் துணையோடு சமய, சமூக, குடும்ப ரீதியாக அறங்களை ஆற்றுதலால் குடும்பவாழ்வு இல்லறம் எனப்பட்டது.
- கிருஹஸ்தன், பிரமச்சரிய நிலையில் கற்ற அறவொழுக்கங்களினின்றும்வழுவாது இல்லறதருமத்தைப் பேண வேண்டியவன். ஒருவன் அடைய வேண்டியவையாகிய அறம், பொருள், இன்பம் ஆகியவை இல்வாழ்வானுக்காகவே விதந்துரைக்கப்பட்டன.
- இல்வாழ்வான் அறத்தின் வழிநின்று பொருளைத் தேடி அதனைப் பகிர்ந்துண்டு, அறத்தின் வழியே இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்றும் இவற்றின் வழி வீடுபேறு அடையலாம் எனவும் தர்மசாத்திரங்கள் கூறுகின்றன.

- தர்மசாத்திரங்கள் முதலிய இந்து அறநூல்கள், கிருஹஸ்தன் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி விளக்குகின்றன. அவை பஞ்சயக்ஞங்களாகும். அவை வருமாறு:

1. **பிரமயக்ஞம்:**பிரமயக்ஞம் என்பது மேலான பரம்பொருளை வழிபடுதலாகும். தேவார, திருவாசகங்களாலும், திருமுறைகளாலும் போற்றப்படுவதாகும்.
2. **தேவயக்ஞம்:** தேவயக்ஞம் என்பது தேவர்களுக்கு ஆற்றும் வழிபாடு. நன்றியுணர்வில் செய்யப்படுவது
3. **பிதிர்யக்ஞம்:** பிதிர்யக்ஞம் என்பது இறந்துபோன மூதாதையர்களின் ஆன்ம சாந்தியின் பொருட்டு, சிரார்த்தச் சடங்கினை நடத்துதலும் பிதிர்லோகத் தெய்வங்களுக்கும் செய்யும் வழிபாடு
4. **பூதயக்ஞம்:** பூதயக்ஞம் என்பது விலங்கு பறவை போன்ற உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு. குறிப்பாக வீட்டில் உள்ள உயிரினங்களின் பொருட்டுச் செய்யப்படுவதாகும். (உ- ம்) பட்டிப்பொங்கல்
5. **மானிடயக்ஞம்:** மானிடயக்ஞம் என்பது மானிடர் பொருட்டுச் செய்யப்படும் வழிபாடு. வீட்டில் நடைபெறும் பிறப்பு, திருமணம் போன்றவற்றின் போது விருந்தினரை உபசரித்தல் முதலான சடங்குகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

- மேற்கூறியவற்றுடன் புதல்வரைப் பெறுதலும் இல்வாழ்வானுக்குரிய கடமையாகக் கருதப்படுகிறது. இதுவே தம் இல்லறக் கடமைகளை ஒப்படைத்து வானப்பிரஸ்தம் மேற்கொள்ள வழிவகுக்கிறது.
- இல்லறம் நல்லறமாக நடக்கின்றபோது சகல ஜீவராசிகளையும் நேசிக்கும் பண்பு வளர்க்கப்படுகிறது. அன்பு, கருணை, இரக்கம், அஹிம்சை முதலிய நல்லறங்களைச் சமூகத்திற்கு வழங்க முடியும்.

**வானப்பிரஸ்த நிலை:**

- வாழ்க்கைநிலையின் மூன்றாவது படிநிலை இதுவாகும். இல்வாழ்வான் தனது இல்லற தருமத்தைத் தொடர்ந்து நடத்தி, பிள்ளைப்பேறுகள் பெற்று, இல்வாழ்க்கையின் கடமைகளை நிறைவுசெய்தபின் மனைவியோடு வனஞ் சென்று செபம், தவம், தியானம் முதலியவற்றில் ஈடுபட்டு ஆன்மீக இலட்சியத்தை அடைய முயற்சிப்பது வானப்பிரஸ்தமாகும்.
- இந்நிலைக்குரிய காலம் பற்றி மனுதர்ம சாஸ்திரம் பின்வருமாறு கூறுகிறது. “குடும்பத்தலைவன் நெற்றியில் கோடுகள் விழ ஆரம்பித்த பின், தலையில் நரை தோன்றிய பின் தன் மகனுக்கு மகனைக் கண்டபின் காட்டுக்குச் செல்லலாம் “ என்பதாகும்.
- வாழ்க்கைக் கடமைகளைத் நிறைவு செய்தபின் மனைவியுடனோ அல்லது தனியாகவோ வனம் சென்று தன் தேவைகளைக் குறைத்து, உடலை ஒறுத்து, வானமே கூரையாக வாழ்ந்து தவம் முதலிய ஆன்மீக விடயங்களில் நாட்டத்தைச் செலுத்துதலாகும்.
- இவ்வானப்பிரஸ்த நிலையே வாழ்க்கையின் இறுதிப்படியான சந்நியாச நிலைக்கான பயிற்சிக்காலமாக அமைகிறது. தியானத்தாலும், தவத்தாலும் உலகப்பற்றுக்களி னின்றும் தன்னை விடுவித்துக் கொள்கிறான்.

**சந்நியாஸநிலை:**

- வாழ்க்கையின் இறுதிப்படிநிலை இதுவாகும். சந்நியாஸம் என்பது முற்றும் துறத்தல் எனப்படுகிறது. உலகப் பற்றுக்களையெல்லாம் ஒருங்கே துறந்த நிலையில் ஊர்தோறும் சென்று யாசகம் பெற்று ஆன்மீக இலட்சியத்தை அடையும் வரை வாழ்தலாகும்.
- சந்நியாஸமே இந்து ஒருவனின் இறுதி இலக்கு எனப்படும். உன்னத இலட்சியத்தை நோக்கி வாழ்க்கையின் கடைசிப்பகுதிக்கு மனிதன் தனிமையாகவே நடந்து செல்ல வேண்டும் என டாக்டர். இராதாகிருஷ்ணன் கூறுகிறார்.
- சந்நியாசி தனது காலத்தை யோகத்திலும், தியானத்திலும் கழிக்கிறான்.
- மனித இனத்தின் ஆன்மீகத்துக்குக் காவலனாய் இருந்து வாழ்க்கையின் இரகசியங்களைப் பற்றிச் சிந்திக்கிறான். விருப்பு வெறுப்பற்றவன்; அன்புடையவன். நாடு, இனம் என்ற குறுகிய வட்டத்தைக் கடந்து விடுதலை பெற்ற மனிதனாய் உள்ளான்.
- சந்நியாச நிலை இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, இறை இன்பத்தில் திளைக்கும் நிலையாகும்.

**வாழும் இந்துமதத்தில் ஆச்சிரம தர்மங்கள்:**

- இவ் ஆச்சிரம தர்மங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து படிப்படியாக அதனின்றும் விடுபட்டுப் பரம்பொருளை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு வகுக்கப்பட்டவையாகும்.
- அவைதிக மதங்களின் துறவொழுக்கங்களுக்கு ஆட்படாது இயல்பான வாழ்க்கையைப் படிமுறைக் கிரமமாக ஆற்றி, உன்னதமான பரத்தை அடைவதற்கான வழியாகவே அக்கால கட்டத்தில் இதனை வகுத்தனர்.
- புராதன இந்து சமூகத்தில் இவ் ஆச்சிரம தருமநெறி நின்று, பரஞானத்தை அடைந்தவர்களையும் நாம் புராண இதிகாசங்க ளூடாக அறிய முடிகிறது.
- வாழ்க்கைப் படிநிலைகளை ஒழுங்குமுறையாகக் கடந்தவர்களைத் தவிர, சந்நியாசிகளாக வாழ்ந்தவர் களையும் நாம் காண்கிறோம். உயர் நோக்கங்களுக்காக பிரமச்சரிய நிலையிலேயே நின்று ஞானிகளாக விளங்கியவர்களும் வாழ்ந்தனர். உ-ம்: சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர்.
- இல்லறத்திலிருந்து கொண்டே ஞானிகளாக விளங்கியவர்களும் வாழ்ந்தனர். உ-ம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, ஸ்ரீ இராமர்
- வாழ்க்கையின் முற்பகுதியிலே உலக இன்பங்களை இறைவழி நின்று அனுபவித்துப் பிற்பகுதியிலே பற்றினைத் துறந்து பரஞானம் பெற்று ஞானியாக வாழவேண்டும் என்பதையே ஆச்சிரம தருமம் உணர்த்துகிறது.

**இன்றைய நிலையில் ஆச்சிரம தர்மம்**

- இயந்திரவியல் உலகில் இலத்திரனியல் பயன்பாட்டாலும் விஞ்ஞானத்தின் விந்தைகளாலும் மனித வாழ்க்கையின் நடைமுறைகள் நாளுக்குநாள் மாறுபட்ட வண்ணம் உள்ளன.
- மாறுபாடு அடைகின்ற வாழ்க்கை முறைக்குள் ஆங்காங்கே மதங்கள் எடுத்தியம்பும் ஆச்சிரம தர்மங்களை ஓரளவுக்குக் காணமுடிகிறது.
- இன்றைய சமூகத்தில் பிரமச்சரிய நிலையில் பிரமச்சரிய கடமைகளும் கிருகஸ்த நிலையில் கிருகஸ்த கடமைகளும் நிறைவேற்றப்பட்டு வருவதை அவதானிக்கலாம். வானப்பிரஸ்த நிலையும் சன்னியாச நிலையும் ஒரு சிலரால் பின்பற்றப்படுகின்றன.

### 7.1.1.2 புருடார்த்தங்கள் - அறிமுகம்

- மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்துசமயம் வகுத்து அமைத்த அறநெறி முறைகளுள் புருடார்த்தங்களும் அடங்கும்.
- ஒவ்வொரு மனிதனும் ஆன்மீக இலட்சியத்தை அடைய வாழ்க்கையின் நான்கு நிலையிலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் இப்புருடார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- புருடார்த்தங்கள் என்பவை மனிதனால் அடையப்பட வேண்டிய செல்வங்கள் எனப்படும்.
- இவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும். இதனை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்.
- வாழ்வின் இலட்சியத்தை அடைய அறத்தின் வழிநின்று அவ்வழியிலேயே பொருளைத் தேடி வாழ்க்கையினை அனுபவிக்க வேண்டும் என்பதே புருடார்த்தங்களின் குறிக் கோளாகும். இதன் வழி வீடுபேறு சித்திக்கும் என்பது ஆன்றோர் வாக்காகும்.

**அறம்:**

- இந்து மரபிலே வலியுறுத்தப்படும் உயர்ந்த அறநெறிகள் புருடார்த்தங்களாகும். புருடார்த்தங்களில் அறமே பிரதானமானதாக முதனிலைப்படுத்தப்பட்டுள்ளது. அதுவே யாவற்றுக்கும் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.
- அறம், தர்மம் எனவும் பொருள்படும்.
- தர்மம் - 'த்ரு' என்ற வடமொழி வினையடியிலிருந்து தோன்றியது. இதன் பொருள் வைத்திருத்தல், போஷித்தல், காப்பாற்றுதல், தாங்கிக்கொண்டிருத்தல் முதலியனவாம்.
- தர்மம் என்ற சொல் கட்டளை, வாழ்க்கை நெறி, விதி, கடமை, ஆணை, கோட்பாடு, சட்டம், சமயம் ஒழுங்கு, ஒழுக்கம், நீதி நேர்மை எனப் பல பொருள்படும்.
- தமிழிலுள்ள அறம் என்ற சொல்லும், ஒழுக்கம், புண்ணியம், சமயம், ஞானம், நூல், நோன்பு, இறுத்தல், நீக்குதல் முதலிய கருத்தைப் புலப்படுத்தும்.
- ஆகவே தர்மம், அறம் என்பன ஒரே கருத்தைப் பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றன.
- "வேதோ கிலோ தர்ம மூலம்" என்பது தர்மத்தின் அடிப்படை, வேதங்களே என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. வேதங்கள் மூலமும் முனிவர்கள் கண்ட தரிசனங்கள் மூலமும் தர்மம் பற்றி விளக்கப்பட்டுள்ளது..
- வேதங்கள், முதலில் தர்மம் என்பது சமயச்சடங்குகள், கிரியைகள் எனக் குறிப்பிட்டன. ப்ரதமா தர்மம் (முதல் ஆணை) சனாதாதர்மானி (பழைய ஆணை) இருக்குவேதம் (3.17.1, 10.56.3)
- பின் அதர்வ வேதத்தில் (9.9.17) சமயக்கடமைகளையும் கிரியைகளையும் வேதங்களிலுள்ளவாறும் பெரியோர் விதித்தவாறும் செய்யும் ஒருவனுக்குக் கிடைக்கக்கூடிய புண்ணியங்களை தர்மம் என்ற சொல் குறித்துள்ளது.
- பிருகதாரணிய உபநிடதத்தில் (1.14.14) தர்மம் சத்யம் (உண்மை) என்ற பொருளில் வந்துள்ளது. தைத்திரிய உபநிடதத்தில் குருகுல வாசம் முடித்து வீடு திரும்பும் மாணவனுக்கு குரு கூறும் உபதேசங்களில் "சத்யம் வத, தர்மம் சர" எனும் கூற்றுக்கள் காணப்படுகின்றன.

- முண்டக உபநிடதம் சத்தியமே வெற்றி பெறும் என்கிறது. சத்யம் ஏவ ஜயதே”
- சாந்தோக்கிய உபநிடதம் (2.23) இல்வாழ்வான், வானப்பிரஸ்தன், பிரமச்சாரி ஆகியோருக்கான கடமைகள் தர்மத்தின் மூன்று பிரிவுகள் எனக் கூறப்பட்டுளது.
- “ஸ்தர்மவே நிதனம் சிரேயஹ “ - தனக்கு விதிக்கப்பட்ட கடமையை (தர்மத்தைச்) செய்யும்போது இறத்தலே நன்று என பகவத்கீதை கூறுகிறது. (3.35, 2.31).
- “ஆசாரமே மேலான தர்மம்” - என மனு ஸ்மிருதி (1.108) கூறுகிறது.
- “அஹிம்சையே மேலான தர்மமென “ - மகாபாரதத்திலுள்ள அனுசரணை பர்வப் பகுதி கூறுகிறது.
- மகாபாரதத்தில் - “பிரபஞ்சத்தினைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஒழுங்கும் ஒரு பொருள். அது இருக்க வேண்டியவாறு அமைந்திருப்பதற்கான மூலமும் அதுவேயாம். நல்லொழுக்கமுள்ளவர்களுக்கு நன்மை செய்வதும், அவர்களைத் தாங்கி நிற்பதும் தருமமே; உலகங்கள் அனைத்திலும் வாழ்க்கையை நெறிப்படுத்துவதும் அதுவே“- என்று கூறப்படுவதும் இங்கு நோக்கத்தக்கதே.
- மகாபாரதம், இராமாயணம் எனும் இதிகாசங்கள் தருமத்தின் வழி இவ்வுலகில் வாழ்வதற் கேதுவான வழிகாட்டல்களை உள்ளடக்கி உள்ளன. மகாபாரதத்தில் தருமனும், இராமாயணத்தில் இராமனும் தருமத்தின் வழி வாழ்ந்தவர்களாகச் சித்தரிக்கப்பட் டுள்ளனர்.
- தர்மம் தன்னைக் கொன்றவனைக் கொல்லும். அது தன்னைப் பாதுகாத்தவனைக்காக்கும். “தர்ம ஏவ ஹதோ ஹத்தி... “
  தர்மம் தலைகாக்கும்”
  அரசன் அன்று கொல்லும்
  தெய்வம் நின்று கொல்லும்“
- புராணங்களில் போதிக்கப்படும் ஒழுக்கம், தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். புராணங்கள் சாதாரண தர்மம், விசேட தர்மம் என இரு வகைத் தர்மங்கள் பற்றிக் கூறுகின்றன. விசேடதர்மம் ‘ஸ்வதர்மம்’ அதாவது அவரவருக்குரிய தர்மம் எனவும், யாவர்க்கும், எக்காலத்துக்கும் பொருத்தமானதாகவும் நிரந்தரமானதாகவுமுள்ள ஒழுக்க விதிகளே சாதாரண தர்மம் எனவும் கூறப்படுகிறது. உ-ம்: உண்மை பேசுதல் - அரிச்சந்திரன்
- இவ்வாறு மேற்குறிப்பிட்ட வரையறைகளின் அடிப்படையிலே நோக்கும்போது ‘தர்மம்’ என்பது பரந்த கருத்திலே நோக்கப்பட்டு வந்துளது. பொதுவாக வைதிக சமூகத்தில் தனிமனிதனின் ஒழுக்கத்தரம், வர்ண ஆச்சிரம தருமக் கோட்பாடுகள், நான்கு புருடார்த்தங்கள் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய கடமைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக உணரப்பட்டுள்ளது.
- மனித குலம் ஆன்மீக ரீதியில் முழுமையும் இன்பமும் அடையும் வகையிலும், உலகியல் வாழ்வில் அவர்கள் ஒழுக்கம், பொருளியல், அறவியல் ரீதியில் குறிப்பிடத்தக்க நன்னிலை அடைவதற்கு வழிகாட்டுவதே தர்மத்தின் தலையாய நோக்கமாகும்.
- பரம் பொருள் உறைந்திருக்கும் மனிதனின் மானிடப் பண்பை உணர்த்துவதும், ஒவ்வோர் உயிரிலும் இறைவன் உள்ளான் எனும் ஞானமுமே என்றுமுள்ள தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடென மகாபாரதம் கூறுகிறது.

- தர்ம சாத்திரங்களில் தர்மம் பற்றிய சிந்தனைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவை கடமை, ஒழுக்கம் என்ற கருத்தில் காணப்படுகின்றன. மனு ஸ்மிருதியில் தர்மம், சட்டம் என்ற கருத்திலேயும் நோக்கப்படுகின்றது. இதில் தருமத்தின் மூலங் களாகச் சுருதி, ஸ்மிருதி, இவற்றை நன்கு அறிந்தவர்களது ஆசாரங்கள், ஒருவரின் மனச்சாட்சி என்பன கூறப்படுகின்றன.
- தர்மசாத்திரங்களில் ஸ்வதர்மம், ஆச்சிரம தர்மம், இராஜ தர்மம் என பல வகைப் பட கூறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சுவதர்மம் | - | இது குலதர்மம் எனப்படும். ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளைச் செய்தலைக் குறிக்கும். இவை வாழ்க்கைக்கு அவசியமான கடமைகளாகும். |
| ஆச்சிரம தர்மம் | - | வாழ்க்கையின் நான்கு நிலைகளிலும் மேற்கொள்ளவேண்டிய ஒழுக்கங்கள், கடமைகள் இதனுள் அடங்கும்.பிரமச்சரிய, இல்லறக் கடமைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. |
| இராஜ தர்மம் | - | நீதிபரிபாலனம், சமுதாய ஒற்றுமை, முடிசூட்டுதல் முதலியனபற்றியும் தர்மம் தவறினால் நாட்டில் ஏற்படும் தீமை பற்றியும்கூறப்பட்டுள்ளன. |

- தர்மசாத்திரங்களில் எல்லோருக்கும் பொதுவான சாதாரண தர்மங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதாக அவற்றுக்கு உரை எழுதியோர் கூறியுள்ளனர். (உ-ம்) அஹிம்சை முதலியன. புராணங்களில் சாதாரண தர்மங்கள் இன்றியமையாத விதிகளாக வலியுறுத்தப்பட்டுள்ளன. அஹிம்சை, சஷமா (பொறுமை), இந்திரிய நிக்கிரவர (புலனடக்கம்), தயை (இரக்கம்), தானம் (கொடை), சௌச (தூய்மை), சத்யம் (உண்மை), தபஸ் (தவம்), ஞானம் (அறிவு) முதலியன பற்றி பத்ம, கருட, கூர்ம, அக்கினி புராணங்களில் விளக்கப்பட்டுள்ளன.
- புராண கதாபாத்திரங்கள் தர்மத்தைத் தம் வாழ்வின் இலட்சியமாகப் போற்றியுள்ளனர். (உ-ம்) அரிச்சந்திரன், ருக்மாங்கதன் (உண்மை பேசுதல்)
- மனித செயற்பாடுகளுக்கு அப்பாலும் உலகனைத்தையும் பிரபஞ்சமனைத்தையும் தாங்கி இயக்கி வரும் முழுமுதற் காரணியாகவும் தருமம் கருதப்பட்டு வந்துள்ள வகையில் தருமம் தெய்வம் என்ற கருத்திலேயும் அதாவது தரும தேவதை, அறக் கடவுள் எனக் கருதப்பட்டுள்ளது.
- தர்மத்தின் வழி ஒழுகுவதனால் அடையும் நன்மைகள் பற்றியும் இந்துசமய நூல்களில் கூறப்பட்டுள்ளது. தருமமே ஒருவனுக்கு மரணத்தின் பின்னரும் தொடர்ந்து வரும் மிக நெருங்கிய நண்பன். முழுமையும் பேரின்பமுமளிக்கவல்ல நிரந்தரமான மூலம் என பிரம்ம, கருட புராணங்கள் கூறுகின்றன. ஜைமினியின் பூர்வ மீமாம்ச சூத்திரத்திலே (1.1.2) வேதங்களிலே போற்றி விதிக்கப்பட்டுள்ள சமய ஒழுக்கக் கடமைகளைச் செய்தலே தர்மமென்றும், இதனால் இறுதியில் வாழ்க்கையில் சாந்தியும் சமாதானமும் மகிழ்ச்சியும் உண்டாகும் எனவும் கூறப்பட்டுள்ளது.

**தமிழ்நூல்களில் அறம்**

- மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத் தமிழ் நூல்களிலும் நாம் காணமுடிகின்றது.
- சங்க இலக்கியங்களில் அரசியல் தர்மம் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

  (உ-ம்) - அறம் துஞ்சும் செங்கோல்...” (புறம் - 2)

  - அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். (சிலப்பதிகாரம்)

- சங்க காலத் தமிழகத்தில் புருடார்த்தங்கள் பற்றிய கருத்தும் மக்களிடையே தெளிவாகக் காணப்பட்டுள்ளமையையும் அறிய முடிகின்றது.

  (உ-ம்) - சிறப்புடைமரபிற் பொருளும் இன்பமும்
  அறத்து வழிப்படுஉம் தோற்றம் போல“ (புறநானூறு - 31)

- திருக்குறள் அறம், பொருள், இன்பத்தை அடிப்படையாகக் கொண்ட நூல். இதன் நாலாவது அதிகாரம் அறன் வலியுறுத்தலாகும். இந்நூல் வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ள தர்மம் பற்றிய கருத்துக்களையொத்த பொருள் மரபைக் கொண்டு விளங்குகிறது.

  “அறத்தால் வருவதே இன்பம்... “
  அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை...”

  சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூ உங்கு
  ஆக்கம் எவனோ உயிர்க்கு “ - (31)

  என அறத்தின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது. திருவள்ளுவர் அறத்துப்பாலில் இல்லறம், துறவறம் ஆகிய இரு நிலைகளைப் பற்றி விளக்கியுள்ளார்.

- சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலானவை அறநூல்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ஔவையார் ‘அறம் செய விரும்பு’ எனக் கூறியுள்ளார். பிற்காலத் தமிழ் இலக்கியங்களும் அறம், பொருள், இன்பம், வீடு பயத்தலே நூற் பயன் என்கிறது.
- இந்துக்களின் வாழ்வின் எல்லா நிலைகளிலும், அம்சங்களிலும் தர்மம் தலையாய இடத்தினை வகித்து வந்துள்ளது. அது மட்டுமன்றி அவைதிக மதங்களான சமண பௌத்த மதத்திலும் தர்மம் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பொருள்:**

- புருடார்த்தங்களில் பிரமச்சரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம் ஆகிய நிலைகளிலுள்ளோருக்கு அறம் வலியுறுத்திக் கூறப்பட்டதன் பின்பு அர்த்தம் அதாவது பொருள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
- “பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை “ என்ற கூற்று வையத்துள் வாழ்வாங்குவாழ பொருள் அவசியம் என்பதனை வெளிப்படுத்தப்படுகின்றது.
- தனிமனிதனதும் சமுதாயத்தினதும் சிறப்பான வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாதது.

- அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினுள் நடுவாக உள்ள பொருளை அடைந் தாலே அறமும் இன்பமும் எய்தும் என்பர். அதாவது பொருளை அறத்தின் வழி நின்று ஈட்டினால் தான் அறத்தையும் அதன் வழி இன்பத்தையும் குறைவிலாது அனுபவிக்க முடியும் என்பது ஆன்றோர் வாக்காகும்.
- அர்த்த சாஸ்திரம், திருக்குறள் முதலிய நூல்களில் பொருளீட்டல் பற்றிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அர்த்த சாஸ்திரம் பொருளை ஈட்டுவதற்கான வழிவகைகள் பற்றி சிறப்பாக அரசனுக்கே எடுத்துக் கூறுகின்றது.
- பொருளைத் தேடும்போது அறத்தின் வழிநின்றே ஈட்டவேண்டும். இவ்வாறு ஒரு தனிமனிதன் பொருளை ஈட்டத் துணைபுரிவது அரசு. அப்பொருளைப் பாதுகாத்து வாழவும் உதவுவது அரசு. அதனாலேயே அரசு பற்றி அறநூல்கள் ஆராய்ந்துள்ளன. திருக்குறளிலும் பொருட்பாலில் சிறப்பாக அரசியல் பற்றியே விபரிக்கப்பட்டுள்ளது.
- இந்துக்களின் பொருளாதாரக் கோட்பாட்டை விளக்கும் நூலாக அமையும் அர்த்தசாஸ்திரம் பொருளீட்டல், பொருளைப் பயன்படுத்தல், சமூக விருத்திக்குப் பொருள் அவசியம், பொருள் அரசனால் உரியவாறு பரிபாலனம் செய்யப்பட வேண்டியது எனும் கருத்தையும் முன்வைத்துள்ளது.
- இராஜசேவை, வாணிபம், விவசாயம் முதலிய தொழில்களால் பொருளீட்டலே சிறப்பானது என தர்மசாத்திரங்களும் அர்த்தசாத்திரங்களும் கூறுகின்றன. விசுவாதகாதம், பரிதானம் சுங்கம் கொடாமை, வட்டிக்கு வட்டி முதலிய தீயவழிகளில் ஈட்டும் பொருள் அதர்மத்துக்கே வழிகோலும். அதனாலேயே ஔவையார்,

  -தீவினை விட்டீட்டல் பொருள்" எனக் கூறியுள்ளார்.
- பிரமச்சரிய நிலையில் குருவின் இல்லம் சென்று கல்வி கற்று வீடு திரும்பும் மாணாக்கனுக்கு குரு கூறும் அறிவுரையில் "பொருள் வளத்தினைக் கவனிப்பாயாக" என்பது பொருளின் முக்கியத்துவத்தினை அக்கால இந்துக்கள் உணர்ந்திருந்தனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.
- இல்வாழ்வான் இல்லறம் நல்லறமாக அமைய அறவழியில் பொருளை ஈட்டவேண்டும். அறம், பொருள், இன்பம் ஆகிய புருடார்த்தங்கள் இல்வாழ்வானுக்கு உரியவையாதலால், அறச்செயல்களில் ஈடுபடவும் அதன் வழி இன்பத்தை அனுபவிக்கவும் பொருள் இன்றியமையாததாகும்.
- இல்வாழ்வான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணையாக அமைவதற்கும் 'பஞ்சயக்ஞம்' செய்வதற்கும் பொருள் இன்றியமையாததாகும்.
- பொருள், ஆன்மீக இலட்சியத்தை அடைய உதவும் சாதனமாகவும் கருதப்படுகின்றது.

  " பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
  தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

  என்பதில் அறவழியில் ஈட்டிய பொருளைப் பிறருடன் பகிர்ந்து உண்ணுதலே ஆன்மீக இலட்சியத்தை அடையும் வழி எனப்படுகிறது.
- "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் இல்வாழ்க்கை
  வழி எஞ்சல் எஞ்ஞான்று மில்" எனும் திருக்குறள் வாயிலாகவும் இதனை விளக்கலாம்.
- தாம் ஈட்டிய பொருளைக் கொண்டு இம்மையில் இன்பம் அடைவதோடு, பலவகையான அறப்பணிகளிலும் பயன்படுத்தும்போது இம்மைப் புகழும் மறுமை இன்பமும் ஈற்றில் முத்திப்பேறும் கிடைக்க வழி ஏற்படும்.

**இன்பம்:**

- புருடார்த்தங்களில் ஒன்றான இன்பம் (காமம்) என்பது, காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவுபடுவதே ஆகும்.
- இவ்வின்பத்தை இல்லறத்தில் அமர்ந்து முறையாகப் பெறுதல் வேண்டும். இல்லறத்தில் இன்பம் என்பது சிறந்த புதல்வரைப் பெற்று அவர்கள் மூலம் தமது அறங்கள் தொடர்ந்து இடையூறின்றி நிகழ்வதற்கும் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்ற ஐம்புலத்தையும் ஓம்பிப் பாதுகாப்பதற்கும் இன்றியமையாததாகிறது.
- சமயநூல்கள் இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் எனவும் வகுத்து நோக்கும். ஆணும் பெண்ணும் கருத்தொருமித்து அனுபவிப்பதே சிற்றின்பம். அழியும் பொருள்களால் அடையப்படும் இன்பம் சிற்றின்பத்தை அற வழியிலே அனுபவிக்கப்பட வேண்டும்.
- இறைவனைச் சார்ந்து அனுபவிக்கும் பேரின்பம் ஆன்மீக ரீதியான ஆனந்தம் ஆகும்.

**வீடுபேறு:**

- ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு வீடுபேறாகும். இது மோட்சம் எனவும் வழங்கும்.
- அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அறத்தின் வழிநின்று அனுபவிக்கும் போது இறுதியில் வீடுபேறு எய்துதல் நிச்சயம் என ஞானியர் கூறுவர்.
- பின்வரும் ஔவையார் பாடலில், புருடார்த்தம் பற்றிய விளக்கத்தைக் காணலாம்.

  "ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் எந்நாளும்
  காதல் இருவர் கருத்தொருமித்து
  ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்திம் மூன்றும்
  விட்டதே பேரின்ப வீடு"

- இந்து சமயத்தில் எல்லாப் பிரிவினரும் மோட்சத்தை அடைவதற்கான வழிவகைகளைக் கூறுகின்றனர்.
- இந்து சமயமானது எல்லாத் தளைகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் ஆன்மாக்கள் விடுதலை பெற இயலும் என்று உறுதி அளிக்கின்றன.
- துன்பங்களிலிருந்து முழுமையாக விடுபடுவதே உண்மையான விடுதலை என்பர். துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமன்றி ஈடிணையற்ற ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிப்பதே மோட்சம் என்பது இந்துமதத்தின் கருத்தாகும்.
- இந்த இன்பத்தை அடைந்த ஆன்மாவிற்கு மறுபிறப்பு இல்லை. இதுவே ஒவ்வோர் ஆன்மாவும் அடைகின்ற முடிவாகும்.

### 7.1.1.3 தமிழ் நீதிநூல்கள் - அறிமுகம்

- நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு' என்பது ஔவை வாக்கு. அதாவது நீதிநூல்களில் கூறப்பட்டுள்ள நல்ல நீதிமுறைகளை அறிந்து (கற்று) நல்ல ஒழுக்கத்துடன் நட (வாழ்) என்பது இதன் பொருள்.
- இவ்வகையில் தமிழில் எழுந்த இலக்கியங்கள் பலவும் மக்களுடைய வாழ்க்கை நெறியை ஒழுங்குபடுத்துவனவாக அமைகின்றன. இதனாலே அவை அறம் சார்ந்த நூல்களாக விளங்குகின்றன.
- திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியன தமிழ் நீதிநூல்களையும் அவற்றிலுள்ள அறப்பண்புகளையும் இங்கு கற்போம்.

### 7.1.1.4 திருக்குறள்

- தமிழில் தோன்றிய அறநூல்களுள் எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய கருத்துச் செறிவுள்ள நீதிநூல் திருக்குறள்.
- திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருவள்ளுவரைப் பொய்யாமொழிப்புலவர், தெய்வப் புலவர், செந்நாப்போதர் முதலிய பல பெயர்களால் போற்றுவர்.
- சங்கமருவிய காலத்துக்குரிய நூல் எனத் திருக்குறள் கருதப்படுகிறது. ஆயினும் இந்நூலின் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகளுண்டு.
- திரு + குறள் = திருக்குறள். தெய்வத்தன்மை பொருந்திய அல்லது மேன்மைமிக்க குறட் பாக்களாலான நூல் என்பது இதன் பொருளாகும்.
- திருக்குறளை முப்பானூல், பொய்யாமொழி, தமிழ்மறை, உலகப் பொதுமறை, தெய்வநூல் முதலிய சிறப்புப் பெயர்களால் வழங்குவர்.
- குறள் வெண்பா வகையால் எழுதப்பட்ட இந்நூல் 133 அதிகாரங்களை உடையது. அதிகாரங்கள் ஒவ்வொன்றும் பத்துக் குறள்களை உடையன.
- திருக்குறளில் 1330 (133 x 10) குறட்பாக்கள் உள்ளன.
- அறமானது ஒழுக்கம், தண்டம், வழக்கு என மூவகைப்படும். ஒழுக்கமாவது மக்கள் தமக்கு விதிக்கப்பட்ட பிரமச்சரியம் முதலிய வாழ்க்கை நிலைகளினின்றும் அவ்வவற்றிற்குரிய அறங்களினின்றும் வழுவாது ஒழுகுதல்.
- திருவள்ளுவர் திருக்குறளில் ஒழுக்கத்துக்கே மிகுந்த முக்கியத்துவம் கொடுத் துள்ளார். வழக்கு, தண்டம் முதலியன உயிர்க்கு உறுதிபயத்தலில் சிறப்பில. ஆதலால் அவற்றை ஒழித்து சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனக் குறிப்பிடுகிறார்.
- இந்து அறவியலில் முக்கியத்துவம் பெறும் புருடார்த்தங்களான அறம், பொருள், இன்பம் எனும் மூன்றையும் அடிப்படையாகத் கொண்டு திருக்குறள் பாடப்பட்டுள்ளது. இதனால் இந்நூல் முப்பானூல் எனப்பட்டது.

**நூலமைப்பும் பொருள்மரபும்:**

- திருக்குறளின் வைப்புமுறை பற்றி நோக்கும்போது இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளை உடையது.

  அறத்துப்பால் - 38 அதிகாரங்கள்
  பொருட்பால் - 70 அதிகாரங்கள்
  காமத்துப்பால் - 25 அதிகாரங்கள்

- திருக்குறளின் பொருள் மரபை நோக்கின் முதல் நான்கு அதிகாரங்களும் பாயிரவியல் எனப்படுகிறது. இவை திருக்குறளின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது.
- முதலாம் அதிகாரம் கடவுள் வாழ்த்து ஆகும். இதில் 'கற்றதனாலாயபயன் கடவுளை வணங்குதல்' எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே, இங்கு திருவள்ளுவர் 'அறவாழி அந்தணன்' எனக் குறிப்பிட்டுள்ளமை இந்நூல் அறத்துக்கு வழங்கும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- திருக்குறளின் நாலாம் அதிகாரம் அறன் வலியுறுத்தலாகும். அறமானது, இம்மை, மறுமை, வீடு பயத்தலால் ஏனைய பொருளையும் இன்பத்தையும் விட வலிமையுடையது என்பது விளக்கப்படுகிறது. இவ்வதிகாரத்தில் மனத்துக்கண் மாசிலனாதலே அனைத்து அறங்களுக்கும் அடிப்படை என்பது உறுதிபடக் கூறப்பட்டுள்ளது.
- அறத்துப்பால் இல்லறம், துறவறம் என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவ்விரு அறங்களுள்ளும் இல்லறமே ஏற்புடையது எனவும், இல்லறத்தைச் சார்ந்தே துறவறம் உள்ளது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுளது.

  உ-ம்: 'துறந்தார்க்கும்....'

- இல்லறவியல் குடும்பத்தின் பொது முக்கியத்துவம் பற்றியது. குடும்பத்தில் ஆணின் துணையாகவே பெண் பேசப்படுகிறான். நன்மனையாளின் இயல்பு, பிள்ளைப்பேறு, அன்பு, விருந்தோம்பல் முதலிய இல்லறத்தானுக்குரிய பண்புகளும் தனிமனிதன் கடைப்பிடிக்க வேண்டிய இன்சொல், நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய பல பண்புகளும் கூறப்பட்டுள்ளன.
- துறவறவியலில் துறவுக்கு அடிப்படையாய் அமையும் அருள் உடைமை என்பது முதலிலும் துறவி கைக்கொள்ள வேண்டிய புலான் மறுத்தல், தவம், வாய்மை, வெகுளாமை முதலிய பல விடயங்களும் விளக்கப்பட்டுள்ளன.
- துறவறவியலில் இறுதி நான்கு அதிகாரங்களிலும் துறவின் பயனாகிய ஞானம் அதாவது வீடு பயக்கும் உணர்வினைக் கூறுகிறார்.

  உ-ம்: 'பற்றுக பற்றற்றான் பற்றினை..'

- இல்லறம், துறவறம் ஆகிய இருநெறியில் நின்றாலும், செய்வினையின் பயனை அனுபவித்தே தீரவேண்டும் என்பதனால் திருவள்ளுவர் அறத்துப் பாலின் இறுதியில் 'ஊழ்' எனும் அதிகாரத்தை வைத்துள்ளார்.

  உ-ம்: 'ஊழிற் பெருவலி யாவுள...'

- பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று பகுதிகளை உடையது. அரசியலிலும் அங்கவியலிலும் அடங்காதவற்றை ஒழிபியலில் வகுத்துக் கூறுகிறார். ஒழிபியல் குடிமை,மானம், பெருமை, நல்குரவு, கடமை எனப் பல விடயங்களை கொண்டுளது. இங்கு நன்றியில் செல்வம், நல்குரவு ஆகிய அதிகாரங்களில் ஒருவன் பொருளைத் தேடி பிறருடன் பகுத்துண்ணுதலைச் செய்யானாயின் அவனுக்கு கோடி பொருள் உண்டாயினும் இல்லாததாகும் என்றும் பொருளின் அவசியத்தையும் எடுத்துரைக்கிறார்.
- பொருட்பாலில், பொருளை ஈட்டுவதற்கும், அனுபவிப்பதற்கும், துணைக் காரணமாகிய அரச நீதியைப் பற்றி விளக்குகிறார்.
- திருவள்ளுவர் பொருட்பாலில் இறைமாட்சி எனும் அதிகாரத்தில்,

  "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
  வகுத்தலும் வல்லது அரசு" (385)

  என்ற குறள் வாயிலாக பொருள் ஈட்டுதலும் ஈட்டிய பொருளைப் பேணிப் பாதுகாத்தலும், காத்த பொருளை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டு செலவிடுதலும் உடையவனே அரசன் எனக் கூறுகிறார். இதன் மூலம் அரசனுக்கும் மக்களுக்கும் பொருளின் இன்றியமையாமை பற்றி விளக்குகிறார்.
- இறுதியாக காமத்துப்பாலில், உலகியல் இன்பத்தை அறத்தின்வழி அனுபவித்தலுக் கேது பற்றி கூறுகின்றார். காமம் என்பது இங்கு இன்பம் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது.

  "காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம் " எனும் ஔவை வாக்கினை இது விளக்குகிறது. அறத்தின் வழிநின்று பொருளைத் தேடி அதனைத் துய்ப்பதன் காரணமாக, இம்மை பயப்பதாகிய உலகியல் இன்பத்தை விபரிக்கிறார்.
- சங்க மருவிய காலத்தில் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கிய வைதிக சமய மரபுகள் மக்களிடையே செல்வாக்குப் பெறத் தொடங்கியது. அடிப்படையான சமூக மாற்றம் ஏற்படும் காலகட்டத்தில் அந்த மாறுகிற சமுதாயத்தின் பிரசவத்திற்கு வேண்டிய சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டு மாற்றங்களுக்கான மெய்யியற் கோட்பாட்டை வள்ளுவர் வழங்குகிறார்.
- இந்த முயற்சியின் சிந்தனை வளமும் சிந்தனைச் சிறப்பும் காரணமாகவே திருக்குறள் உலகளாவிய ரீதியில் போற்றப்படுகிறது என்பர்.

## முடிவுரை

- தமிழர் வாழ்வில் சமூகச் சவால்களை ஏற்பதற்கான கருவி நூலாகத் திருக்குறளைக் கொண்டாடும் முறையொன்று வளரத் தொடங்கிற்று.
- கி.பி. 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் இல்லற மாண்புகளை வெளிப்படுத்தும் வகையில் ஓதல், வாழ்க்கைச் சடங்குகளுக்குத் திருக்குறளைப் பயன்படுத்துதல் என்பவற்றினால், திருக்குறள் ஒரே சமயத்தில் வாழ்வியல் வழிகாட்டியாகவும் பண்பாட்டின் குறியீடாகவும் கருதப்படலாயிற்று என்பர்.

  உ-ம்: திருமணச்சடங்கில் ஓதல்.

### 7.2.2.2 ஆத்திசூடி

- தமிழில் தோன்றிய நீதிநூல்களுள் பாலர், பாமரர், பண்டிதர் என உள்ள யாவரும் படிப்பதற்கேற்ற நூல்களாக விளங்குபவை ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களாகும்.
- இவற்றுள் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் அறக்கருத்துக்களை இரண்டு மூன்று சொற்களால் விளக்கும் கட்டளை மொழிகளாக அமைந்தவை.

**நூலாசிரியர்:**

- அறநூல்களைப் பாடிய ஔவையார் பெண்பாற் புலவராகும். இவர் பல்வேறு காலங்களோடு தொடர்புடையவராக விளங்குவதால் ஔவையார் என்ற பெயரில் பலர் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.
- தமிழறிஞர் மு. அருணாசலம் அவர்கள் சங்ககால ஔவை, இடைக்கால ஔவை, சோழர்கால ஔவை, சமயப்புலவர் ஔவை, பிற்கால ஔவை I , பிற்கால ஔவை II என பல ஔவையார்கள் இருந்தனர் என்கிறார்.
- பொதுவாகத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் சங்ககால ஔவையார், சோழர்கால ஔவையார் ஆகிய இருவருமே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஔவையார் ஆவார்.
- சங்ககால ஔவையார் அதியமானிடமிருந்து நெல்லிக்கனி பெற்றவர் என்றும், அவரது பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன என்றும் கூறுவர். ஔவையார் பாடல்களாக நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியவற்றில் மொத்தம் 59 பாடல்கள் காணப்படுகின்றன.
- அறநூல்களைப் பாடிய ஔவையார் சோழர்கால ஔவையார் என அறியப்படுகின்றது. இவரைக் கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். பொதுவாக இவரது காலம் கி.பி. 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டுகள் என்பர்.
- சோழர்கால ஔவையார் பாடிய நூல்கள் என அறியப்படுபவை பல உள. அதிசயக்கோவை, பத்தனந்தாதிப் பெட்டகம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, கல்வியொழுக்கம், ஞானக்குறள், விநாயகர் அகவல், கணபதி ஆசிரிய விருத்தம், உயர்ஞானசார நூல் சாத்திரம், நவமணிமாலை, தரிசனப்பத்து, அருந்தமிழ்மாலை, நன்னூற்கோவை, நான்மணிக்கோவை என்பனவுமாகும்.
- ஔவையாரின் வரலாற்றைத் திருவள்ளுவர் கதை, கபிலரகவல், ஞானாமிர்தம், புலவர் புராணம், விநோத ரச மஞ்சரி, பன்னிரு புலவர் சரித்திரம், தமிழ் நாவலர் சரிதை, பாவலர் சரித்திர தீபகம் முதலான நூல்களிலும் தனிச் செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு ஆகியவற்றினூடாகவும் அறிய முடிகிறது.
- மு. அருணாசலம், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, ந. சுப்பிரமணியம், தமிழண்ணல் முதலானோர் ஔவையாரின் வரலாற்றை வரன்முறையாக இலக்கிய ஆராய்வோடு எழுதியுள்ளனர்.
- ஔவையார் என்பதற்குப் பலவாறு பொருள் கொள்வர். அவை தாய், அன்னை, துறவி, புலமைப்பாட்டி, மூதாட்டி, பெண்துறவி, நோற்பவள், தவப்பெண் முதலியனவாம்.
- 'ஔவை வாக்கு அமுதவாக்கு' என்பர் ஆன்றோர். ஔவையாரைத் தமிழ் மக்கள் எத்துணை மதித்துப் போற்றினர் என்பதற்குத் தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் துளஜாப் பட்டினத்தில் அமைக்கப்பட்டுள்ள கோயிலே சான்றாகும்.

**நூற்பெயர்:**

- ஔவையார் பாடிய ஆத்திசூடி நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல், 'ஆத்திசூடி' எனத் தொடங்குவதனால், அதுவே நூலுக்கும் பெயராயமைந்த சிறப்பினை உடையது.

**நூலமைப்பு:**

- ஆத்திசூடி மிகச் சிறிய நூலாகும். காப்புச் செய்யுளோடு 108 கூற்றுக்களைக் கொண்டது. ஆத்திசூடியின் ஒவ்வொரு கூற்றும் ஒவ்வோர் அறங்களாக மொத்தம் 108 அறங்களைக் கூறுகிறது. இதனால் இதனை அஷ்டோத்திர நீதிநூல் எனவும் சிறப்பித்துக் கூறுவர்.
- ஆத்திசூடியின் காப்புச் செய்யுள் (கடவுள் வாழ்த்து) சிவபெருமானைப் போற்றுகிறது. ஆத்திசூடி தமிழ் நெடுங்கணக்கு முறையிலமைந்த நூலாகும். தமிழில் உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களில் மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை முதலாகவும் அவ்வாறு வராத எழுத்துக்களை இரண்டாம் எழுத்தாகவும் கொண்டு பாடப்பட்டுள்ளது.
- முதலில் 'அ' தொடக்கம் 'ஔ' வரை உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டும் பின் ஆய்த எழுத்தும் இடம்பெறுகிறது. பின்னர் 'க' கரம் முதல் 'ன' கரம் ஈறாக பதினெட்டு மெய் எழுத்துக்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- அதன்பின் க, ச, த, ந, ய, ம, வ எழுத்து வருக்கத்தில் ஔகாரம் நீங்கலாகப் பதினொரு உயிர்மெய் எழுத்துக்களும் சூத்திரங்களின் முதலாக அமைகின்றன. மொழி முதலில் வராத எழுத்துக்களின் முன்னே அகர, இகர, உகர உயிர்கள் சேர்த்துச் சூத்திரங்களின் முதலாக அமைந்துள்ளது.
- ஆத்திசூடியை 1848 இல் ஜே. சுதன் பாதிரியார் முதன்முதலில் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 1851 இல் ஆத்திசூடியையும் கொன்றைவேந்தனையும் தமது பாலபாடம் முதலாம் புத்தகத்தில் பதிப்பித்து வெளியிட்டார். 1852 இல் இவ்விரு நூல்களுக்கும் உரையெழுதி இரண்டாம் புத்தகத்தில் சேர்த்துப் பதிப்பித்து வெளியிட்டார்.
- ஆத்திசூடி பொருள்பொதிந்த வாக்கியங்களாலானது; கருப்பொருள் அமைதி உடையது. இதனாலேயே இந்நூலுக்குப் பலர் உரையெழுதியுள்ளனர்.
- இப்போது கிடைக்கும் உரைகளுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் உரை பரிமேலழகர் உரை எனப்படுகிறது. இது பற்றிய கருத்து வேறுபாடுகளும் உள. இதன் பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய உரையே காலத்தால் முற்பட்ட உரையாகக் கிடைக்கிறது.
- இந்நூலுக்குப் பல உரைநூல்கள் எழுந்தது போலவே பல சார்பு நூல்களும் வழிநூல்களும் தோன்றியுள்ளன. புதிய ஆத்திசூடி, ஆத்திசூடி வெண்பா, ஆத்திசூடிப் புராணம், ஆத்திசூடிச் சிந்து, ஆத்திசூடி அகவல், ஆத்திசூடிக் கதைகள் போன்றனவாகும்.

  உ-ம்: பாரதியாரின் புதிய ஆத்திசூடி இராமபாரதியின் ஆத்திசூடி வெண்பா

## பொருள் மரபு

- ஆத்திசூடியின் பொருள்மரபை நோக்கும்போது அது வேத உபநிடதக் கருத்துக்களின் சாரமாக அமைந்துள்ளமை பற்றியும் விளக்கியுள்ளனர்.

  மானிட வாழ்க்கையின் பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகைப் புருடார்த்தங்களையும் எடுத்து விளக்குகின்றது.

  உ-ம்: அறம் செய விரும்பு"
  பொருள்தனைப் போற்றிவாழ்"
  மெல்லிநல்லாள் தோள்சேர்"
  வீடு பெறநில்"

- ஆத்திசூடியின் கூற்றுக்களுக்கும் திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. திருக்குறளில் பல அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள விடயங்கள் இந்நூலில் ஓரிரு சூத்திரங்களில் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

  உ-ம்: நன்றி மறவேல்"
  ஞயம்பட உரை"
  ஊக்கமது கைவிடேல்"

- ஒரு மனிதன் மனம், மொழி மெய்களால் அறத்தின் வழிநின்று சீர்பெற வழிகாட்டும் நீதிநூலாகவும் விளங்குகின்றது. அறத்தின் மேன்மை, ஈகைச்சிறப்பு, கல்வியின் அவசியம், உழைத்து வாழல், உலகத்தோடொட்ட ஒழுகல், நல்ல நட்பு, செய்ந் நன்றி மறவாமை, ஒழுக்கம் பேணல், ஆன்மீக இலட்சியம் ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

- ஆத்திசூடி இந்து அறவியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் நூல் மட்டுமன்றி, இந்து தத்துவ சிந்தனைகளையும் அடிப்படையாகக் கொண்டது என்பர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தமது உரைகளில் இந்து தத்துவங்களின் அடிப்படையில் விளக்கமளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

  உ-ம்: ஓதுவது ஒழியேல்"
  பேதமை அகற்று"
  தூக்கி வினை செய்"
  வீடு பெற நில்"

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I: இந்து அறவியல் கருத்துக்களைக் கூறும் தமிழ் அறநூல்கள் பற்றி மாணவர் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படி** II: தமிழ் அறநூல்களான திருக்குறள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களின் நூலாசிரியர், நூலமைப்பு தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக மாணவர்களுக்கு நூல்களை வழங்கி வழிப்படுத்துங்கள்.

**படி** III: மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து இந்நூல்களில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்களை வகைப்படுத்தி தொகுக்குமாறு கூறுங்கள்.

**படி** VI: தொகுத்த விடயங்களை ஒழுங்குபட எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிகாட்டுங்கள்.

**உசாத்துணைகள்:**

| | | |
|---|---|---|
| இந்துசமயத் தத்துவம் | - | ரி. எம். பி. மகாதேவன் |
| திருக்குறள் | - | பரிமேலழகர் உரை |
| திருக்குறள் உரைவிளக்கம் | - | திரு. நி. வரதராஜன் |
| திருக்குறள் ஆராய்ச்சி | - | ஆசிரியர் இறையனார் |
| திருவள்ளுவர் நூல்நயம் | - | திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை |
| திருக்குறள் ஓர் உலக இலக்கியம் | - | திரு. ச. மோகன் |
| சிறுவர் நீதிநூல்கள் (விளக்கவுரையுடன்) | - | லேனா தமிழ்வாணன் |
| தமிழ்இலக்கிய வரலாறு (பன்னிரண்டாம் நூற்றாண்டு) | - | மு. அருணாசலம் |
| ஔவையார் (இந்திய இலக்கியச் சிற்பிகள்) | - | தமிழண்ணல் |
| பாலபாடம் II | - | ஆறுமுகநாவலர் |
| ஆத்திசூடி - பரிமேலழகர் உரை | - | இராசேந்திரன் |
| கொன்றைவேந்தன் | | |
| உபநிடதம் | | |
| பகவத்கீதை | | |
| தருமசாத்திரம் | | |

**தேர்ச்சி 7.0 :** மனித வாழ்வு செம்மையாகவும் ஆன்மீக ஈடுபாடு உடையதாகவும் அமைவதற்கு அறவழியில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளில் ஈடுபாடு கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.2 :** இந்து அற விழுமியங்களையும், பௌத்த அற விழுமியங்களையும் இனங்கண்டு எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 30

**கற்றற் பேறுகள் :**

- இந்து அறவியல் கோட்பாடுகள் தனிமனித வாழ்வை அறநெறிக்கு உட்படுத்தி, ஆன்மீக இலட்சியத்தை அடைய வழிகாட்டுமாற்றினைச் சான்றுகளோடு முன்வைப்பார்.
- இந்து அறவியல் கோட்பாடுகளுடன் பௌத்தத்தின் பஞ்சசீல, தசசீலக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டு எழுதுவார்.
- இந்து அறவியல் கோட்பாடுகள், உலகியல் வாழ்வை படிநிலைகளாக ஆன்மீக நெறிக்கு இட்டுச்செல்லுமாற்றை அறிந்து, நடைமுறை வாழ்வுடன் ஒப்பிடுவார்.
- இந்துசமய அறவியல் கோட்பாடானது, வாழ்வை ஒழுங்குமுறையில் அமைத்துக் கொள்ள உதவும் சாதனமாக அமைவதை உணர்ந்து மதிப்பளிப்பார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி :**

## 7.2.1 இந்து அறவியலும் பௌத்தமும் சமயமும்

- உலக சமயங்கள் அனைத்தும் தத்தமது கொள்கைகளில் வேறுபட்டாலும் அற ஒழுக்க சிந்தனைகளில் ஒன்றுபட்டுள்ளன. இவ்வுலக வாழ்வுக்கும் மறுமை வாழ்வுக்கும் ஒழுக்கம் மிகவும் அவசியம் என்பதுவே இதற்குக் காரணம். ஒழுக்க விழுமியங்கள் இந்து மதத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.
- "இந்தியாவில் இந்து தத்துவம் அறிவைப் பெறுவதற்காக மட்டுமன்றி, வாழ்வின் மிக உயர்வான இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டது" என்ற மாக்ஸ் முல்லரின் கூற்று இந்து ஒழுக்கவியலின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகும்.
- இந்து மதத்தின் நூல்களான வேத இலக்கியங்கள் ஒழுக்க விழுமியத்திற்கு சிறந்த இடமளித்துள்ளன. இருக்கு வேதத்தில் 1 ஆம் மந்திரம் 22 ஆம் சூத்திரம் - உலகைத் தாங்குவதும் நிலைநிறுத்துவதும் எதுவோ அதுவே தர்மமாகும்.
- பௌத்த அறக்கோட்பாடுகளும் அவற்றின் சிந்தனைகளும் அறவியலில் தமக்கெனத் தனித்துவமான சிறப்புக்களைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் இந்துமதம் சார் அறவியல் சிந்தனைகளுடனும் அவை ஒத்துப் போகின்றன.
- ஒழுக்கவியல் பல கூறுகளைக் கொண்டது. சத்தியம், அகிம்சை, பஞ்சமாபாதகங்களில் இருந்து விலகி நிற்றல், அழுக்காறின்மை, அன்பு செலுத்துதல், பெரியோரை மதித்தல் முதலானவை அவற்றுள் அடங்கும்.
- "ஒரு சமயநெறியின் வளர்ச்சிப் பாதை என்பது சத்தியத்தின் பாதை" என்கிறது. முண்டக உபநிடதம்.

- மனுஸ்மிருதி தர்மம் தன்னைக் கொன்றவனைக் கொல்லும்; பாதுகாப்பவனைப் பாதுகாக்கும் எனக் குறிப்பிடப்படுகின்றது.
- உபநிடதங்களில் ஒழுக்க சிந்தனை முக்கியத்துவம் பெறுகின்றது.

  உ-ம்: சீஷாவல்லி - தைத்திரிய உபநிடதம்
- திருடுவோன், மது அருந்துவோன், குருபத்தினியுடன் தகாத உறவு கொள்வோன், அந்தணனைக் கொலை செய்வோன், பாவிகள் என்பவற்றுடன் இந்துதர்மம் பொய்யையும் சேர்த்து பஞ்சமாபாதகம் என்கிறது சாந்தோக்கிய உபநிடதம்.
- பௌத்தம் இவற்றைச் செய்யாதிருத்தலை பஞ்சசீலம் என்று கூறுகிறது.

  ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
  காத்த மனையாளைக் காமுறும் காளையர்
  வீட்டுப் பலாவின் கனியுண்ண மாட்டாமல்
  ஈச்சம் பழத்திற்கிடருற்றவாறே"

  எனும் திருமந்திரப் பாடல் பிறர்மனை நயத்தலைக் கண்டிக்கிறது. பௌத்த மதமும் இதனைக் கண்டிக்கின்றது.
- புறநானூற்றுச் செய்யுளொன்று,

  அறம் எனப்பட்டது செங்கோனாட்டத்து
  முறை வேண்டும் பொழுதில் பதணெளியோரின் "

  என ஒரு நாட்டுத் தலைவனுக்குரிய ஒழுக்கத்தை நியமப்படுத்துகின்றது. இதுபோல்,

  அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"

  என்கிறது சிலப்பதிகாரம்.
- ஆன்ம ஈடேற்றம் பெறுவதில் ஒழுக்கத்திற்கு முக்கிய பங்குண்டு என்பது இந்து தத்துவவாதிகளின் ஒருமித்த கருத்தாகும். அட்டாங்க யோகத்தில் உள்ளடங்கும் இயமம், நியமம் என்பன நல்லனவற்றை செய்தல், தீயனவற்றை விலக்குதல் என்பதனைக் குறித்து நிற்கின்றன. இந்துமதம் காட்டும் ஒழுக்க சிந்தனைகளை ஒரு குறிப்பிட்ட வரையறையினுள் காட்டமுடியாது. அச்சிந்தனைகளுடன் ஒண்றித்த வகையிலேயே பௌத்த, சமண ஒழுக்க சிந்தனைகளும் காணப்படுவதை அவதானிக்கலாம்.
- பௌத்தம் தனிமனித மேம்பாட்டிற்குப் பல்வேறு ஒழுக்க வழிமுறைகளை முன்வைக் கின்றது. நற்காட்சி, நற்கருத்து, நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி ஆகிய எட்டு வழிகளைக் காட்டுகிறது.
- பௌத்த உபதேசங்களில் தருமசீலங்கள், மனதை ஒரு நிலைப்படுத்தும் நெறி முறைகள், உபாசனை, தியானம் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. ஒருவனது முயற்சியிலேயே அவனது ஒழுக்கம் சிறப்படையுமெனப் பௌத்தம் கூறுகிறது. பௌத்த ஒழுக்கவியலின் நோக்கம் இம்மை, மறுமைப் பயனைத் தருவதாகும். பௌத்தம் கூறும் துறவு இந்துசமயம் கூறும் சந்நியாச வாழ்வுடன் ஒப்பிடத்தக்கது.

- பௌத்தம் கூறும் பஞ்சசீலம், அட்டசீலம், தசசீலம் ஆகிய ஒழுக்கநெறிகள் இந்து சமயத்தின் யோகமார்க்கம் கூறும் புலனடக்கத்துடன் தொடர்புபட்டதாகும்.
- பௌத்தத்தின் அடிப்படைக் கோட்பாடு பஞ்சசீலமென்னும் ஐந்தொழுக்க அறத்தை நடைமுறைப்படுத்துவதாகும். அவை:

01. கொலை செய்யாமை 02. களவின்மை
03. காமமின்மை 04. பொய்யாமை
05. மது அருந்தாமை

என்பனவாகும். இவற்றை இந்துசமயமும் இவ் அற ஒழுக்கங்களைக் குறிப்பிடுகின்றது. இந்த ஐந்து ஒழுக்கங்களும் நாள்தோறும் கடைப்பிடிக்க வேண்டியவை என்கிறது பௌத்தம். மேலும் மாதத்திற்கு ஒரு முறையோ, இரு முறையோ அட்டசீலம் எனும் ஒழுக்கங்களை ஏற்க வேண்டுமென பௌத்தம் கூறுகின்றது. மேற்கூறிய பஞ்சசீலத்துடன் கீழ்வருவனவும் அட்டசீலத்துள் அடங்கும்.

6. நடுப்பகலுக்கு பின் உணவேதும் ஏற்காமை (அகால உணவு ஏற்காமை)
7. ஆடல், பாடல், களிப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஈடுபடாமை (களியாட்டங்களைத் தவிர்த்தல்), ஆபரணங்களைப் பயன்படுத்தாமை.
8. ஆடம்பர இருக்கையையோ, படுக்கையையோ ஏற்காமை. (சொகுசு நாடாமை)

- பௌத்தம், இந்துமதம் வலியுறுத்தும் நான்கு நன்னெறிகளை "பிரம்ம விஹாரா" என்கின்றது. இந்துமதம் பரவலாக பேசும் இவ்வொழுக்கங்கள் பௌத்தத்தில்,

01. மெத்தா - அன்புறுநேயம் 02. கருணா - கருணை
03. முதிதா - இரக்க நல்லின்பம் 04. உபேக்சா - நிதானம்

எனக் குறிப்பிடப்படுகின்றன.

- பௌத்தம் நல்ல செயல்களை குசல என்றும், தீயவற்றை அகுசல என்றும் குறித்து நிற்கின்றது. புகழ்ச்சிக்குரிய நல்ல செயல்கள் பத்தாகும். இது தஸகுசல எனப்படும்.

1. தான - ஈகை 02. சீல - ஒழுக்கம்
3. பாவனா - தியானம் 04. அபசாயன - மரியாதை
5. வெய்யாவச்ச - தொண்டு 06. பத்திதான - பகிர்ந்து கொள்ளல்
7. அனுமோதனா - பிறரின் நற்செயல்களில் மகிழ்தல்
8. தம்ம சிரவன - தர்மம் தொடர்பான விடயங்களைச் செவிமடுத்தல்
09. தம்ம சேதனா - தர்மத்தை விபரித்தல்
10. திட்டிஜ்ஜுகம்ம - கருத்துக்களைச் சீர்படுத்துதல்

இகழ்ச்சிக்குரிய செயல்கள் பத்து. இவை தஸஅகுசல என அழைக்கப்படும்.

1. உடலால் புரியப்படுவது மூன்றாகும். அவை பின்வருமாறு அமையும்.
   1. கொலை 2. களவு 3.விபச்சாரம்
2. உரையால் புரியப்படும் அகுசல நான்காகும்.
   1.பொய் 2. வன்சொல் 3. புறங்கூறல் 4. வீணுரை
3. . உளத்தால் புரியப்படுவது அகுசல மூன்று வகைப்படும்.
   1. அவா 2. பகைமை 3. தவறான கருத்துக்கள்

- தனது கோபமானது தான் செல்லும் இடத்தை அழிக்கும் நெருப்பைப் போன்றது என திருக்குறள் குறிப்பிடுவது போல, பௌத்த தர்மம் சினத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி கூறுகின்றது. இதன் மூலம் சினமின்மை எனும் ஒழுக்கச் சிந்தனை விபரிக்கப்படுகின்றது. சினத்தால் மனிதன் தீயபலன்களைப் பெறுகிறான்.

01. அசிங்கமாகின்றான்
02. துன்பத்தால் நோய்வாய்ப்படுகின்றான்
03. பொருள் வளம் இழக்கின்றான்
04. செல்வந்தனாவதில்லை
05. புகழ் பெறமாட்டான்
06. நண்பர்கள் அற்றவனாகின்றான்
07. மறுமையிலும் துன்பமடைகின்றான்

## கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

**படி I:** இந்து அறவியல் சிந்தனைகள் பற்றி மாணவர் அறிந்தவற்றைக் கூற இடமளியுங்கள்; கலந்துரையாடுங்கள்.

**படி II:** இந்து அறவியலில் முக்கியத்துவம் பெறும் ஆச்சிரம தர்மங்கள், புருடார்த்தங்கள், பௌத்த சமண அறக்கோட்பாடுகள் என்பவை பற்றிய கருத்துக் களை மாணவர் அறிந்து தொகுப்பதற்குத் தேவையான நூல்களை வழங்கி வழிகாட்டுங்கள்.

**படி III:** மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து பின்வரும் தலைப்புக்களில் தகவல்களைத் திரட்டச் செய்யுங்கள்.

1. 'தனிமனித வாழ்வை நெறிப்படுத்துவதில் ஆச்சிரம தர்மத்தின் பங்களிப்பு'.
2. 'புருடார்த்தங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றன'.
3. 'இந்து அறவியல் சிந்தனைகளும் சமண, பௌத்த அறக் கோட்பாடுகளும் ஒப்பீடு'.
4. 'இந்து அறவியல் ஆன்மீக இலட்சியத்தை அடையத் துணை புரிகின்றன'.

**படி IV:** திரட்டிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு குழுவும் சிறந்த சொற்பொழிவொன்றை வகுப்பறையில் நிகழ்த்த உதவுங்கள்.

## உசாத்துணைகள்:


(1) சமணமும் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமி
(2) புத்ததர்மம் - எஸ். ஏ. எதிரிவீர
(3) தம்மபதம் - சோ. நடராஜன்
(4) சமணம் - தா. ஏ. ஞானமூர்த்தி
(5) பௌத்தம் அடையாளம் - சி. மணி
(6) பௌத்த தத்துவவியல் - ராகுல் சாங்கிருத்தியாயன்
(7) பௌத்தமும் தமிழும் - மயிலை சீனி வேங்கடசாமி
(8) இந்தியதத்துவக் களஞ்சியம்- சோ. நா. கந்தசாமி
(9) சமய தத்துவவியல் - ராகுல் சாங்கிருத்தியாயன்
(10) தமிழர் மெய்யியல் - குணா

**தேர்ச்சி 8.0 :** இந்து சமுதாய வளர்ச்சியில் அரசியல், பொருளாதார, கல்விப் பாரம்பரியம் என்பன பெறும் இடத்தை ஆதாரங்களினூடாக விளங்கிக் கொள்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.1 :** இந்து சமுதாய வளர்ச்சியில் இந்துக் கல்வி பெறும் இடத்தை ஆதாரங்களின் துணைக் கொண்டு எடுத்துக் கூறுவார்.

**பாடவேளைகள் :** 30

**கற்றற் பேறுகள் :**

- இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் சிறப்புக்களை அறிந்து கூறுவார்.
- இந்து நாகரிக வரலாற்றில் இந்துக் கல்விப் பாரம்பரியத்தின் வளர்ச்சியினைக்கால அடிப்படையில் ஆதாரங்களுடன் முன்வைப்பார்.
- இந்துக் கல்விக் கோட்பாட்டினை இனங்கண்டு எழுதுவார்.
- இந்துக் கல்விப் பாரம்பரியம் சமுதாய, ஆத்மீக சிந்தனையுடன் தொடர்புறுமாற்றை அறிந்து மதிப்பார்.

## 9.3 இந்துக் கல்விப் பாரம்பரியம் - அறிமுகம்

- இந்துக் கல்விப் பாரம்பரியம் குருகுலக் கல்வியை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- குருகுலக்கல்வியானது இந்துசமய நெறி, இறைநம்பிக்கை, குருபக்தி, ஆச்சிரமவாழ்வு, வாழ்வியல் சிந்தனைகள், ஆன்மீகம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர் புடையது.
- இந்துக்கல்வி மரபானது வேதகாலம் தொடக்கம் சமுதாயத் தொடர்புடனும் ஆத்மீக சிந்தனையுடனும் தொடர்புபட்டிருப்பதனையும் நோக்க முடியும்.
- இந்து நாகரிக வரலாற்றில் இந்துக் கல்விப் பாரம்பரியம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

## இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்கல்விப் பாரம்பரியம்

- புராதன இந்துக்கல்வி மரபு வேத இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டமைந்தவை என இருக்கு வேதப் பாடல்கள் கூறுகின்றன.
- மிகப் பழங்காலத்தில் குருவும் சீடர்களும் ஆற்றோரங்களிலும் மலையடிவாரங்களிலும் மரநிழல்களின் கீழிருந்தும் வேதங்களை ஓதியமை பற்றி அறிய முடிகிறது.
- இருக்குவேத பிரமச்சாரியசூக்தம் மாணாக்கர் குருவின் இல்லம் நாடிச் சென்று குருகுலவாசம் செய்து கல்வி கற்றதனை விபரிக்கிறது.
- இருக்குவேத பிந்திய பாசுரமொன்றிலே பார்ப்பனரின் வேறான முனிவர் என்றொரு வகுப்பினரை அறிகிறோம். ‘ஆன்றவிந்தடங்கிய சான்றோரான இவர்கள் இயற்கை எழில் நிறைந்த வனப் பிரதேசங்களை அண்டி ஆச்சிரமங்களை அமைத்துத் தவம் முதலியவற்றில் ஈடுபட்டனர். அவ் ஆச்சிரமங்களும் குருகுலங்களாகவும், தவப் பள்ளிகளாகவும் விளங்கியுள்ளன.

- குருகுலவாசக் கல்வியின் உயர்நிலையை உபநிடதங்களில் காணமுடிகிறது. குருவும் சீடரும் நெருங்கியிருந்து தத்துவ ஞான ஆய்வுகளில் ஈடுபட்டனர். மாணாக்கர் குருவின் இல்லம் நாடிச் சென்று குருவைத் தெய்வமாக மதித்து அவரோடு தங்கி யிருந்து அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து குருவிடம் கல்வி கற்றுக் கொள்ளல் குருகுலவாசமாகும். கல்விக் கால முடிவில் குருவுக்குத் தட்சணை வழங்கி வீடு திரும்பினர்.
- புராண இதிகாச காலங்களில் முனிவர்களின் ஆச்சிரமங்களே கல்வி நிலையங்களாகச் சிறப்புப் பெற்றிருந்தன. இங்கு வேத உபநிடதக் கல்வியோடு வில்வித்தை, மருத்துவம், சோதிடம், இலக்கணம் முதலியவற்றையும் கற்பித்தனர்.
- இதிகாசங்களில் முனிசிரேஷ்டரின் ஆச்சிரமங்களை நாடிச் சத்திரிய, வைசியர் பிராமணச் சிறுவர்கள் கல்வி கற்கச் சென்றமை பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

  (உ-ம்)

  (i) இராமாயணத்தில் இராமனும் தம்பியரும் வசிட்டரின் ஆச்சிரமம் சென்று கல்வி கற்றனர்.

  (ii) மகாபாரதத்தில் கிருஷ்ணனும் குசேலரும் சாந்தீப முனிவரின் ஆச்சிரமம் சென்று தங்கி கல்வி கற்றமை.
- இதிகாச காலத்தில் அரண்மனைக் கல்வி வழங்கப்பட்ட செய்திகளும் காணப்படு கின்றன. மகாபாரதத்தில் கௌரவர்களும் பாண்டவர்களும் அரண்மனையிலேயே துரோணர், கிருபாச்சாரியார் முதலியோரிடம் தமக்கு வேண்டிய அரசியல், நீதி, நிருவாகம், போர்ப்பயிற்சி முதலியவற்றைக் கற்றுக் கொண்டமை சான்றாகும்.
- வட இந்தியாவில் சில நகரங்கள் அறிவு சான்ற ஆசிரியர்களாற் சிறப்பெய்தி, பெருந்தொகையான மாணவர்கள் கல்வி கற்கின்ற கல்விச்சாலைகளாகவும் பின் பல்கலைக்கழகங்களாகவும் விளங்கின.

  (உ-ம்) காசி, நாலந்தா, உஜ்ஜயினி, பாடலிபுரம் முதலியன.
- இவ்வாறு வளர்ச்சி பெற்ற நகரங்களுள் வடஇந்தியாவில் வாரணாசியும், வடமேற்குப் பகுதிகளில் தட்சசீலமும் முதன்மை பெற்று விளங்கின. வாரணாசி சமய நூற் கல்விக்கும் தட்சசீலம் உலகியல் சார்ந்த கலைத் துறைகளுக்கும் முதன்மை அளித்தன.
- கி.மு. 4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாணினி, சந்திரகுப்த மௌரிய மன்னனின் அமைச்சரான கௌடில்யர், இந்திய மருத்துவக் கலையிற் பெரும்புகழ் பெற்ற 'சரகர்' முதலியோர் தட்சசீலத்தோடு தொடர்புடைய பேரறிஞர்களாவர்.
- இப்பல்கலைக்கழக நகரங்களில் உண்மையான கல்லூரிகளே இருந்தனவெனவும் இங்கு 500க்கு மேற்பட்ட மாணவர்களும் பல ஆசிரியர்களும் கல்விப்பணியில் ஈடுபட்டிருந்தனரெனவும் அறிய முடிகிறது. இந்தியாவின் நாகரிகமுற்ற பகுதிகளிலிருந்து இளைஞர்கள் இங்கு வந்து கல்வி கற்றனரென்பதை பௌத்த ஜாதகக்கதைகளும் கூறுகின்றன.

- குப்தர் காலத்தில் பீகார், நாலந்தா, வல்லபி ஆகிய இடங்களில் இருந்த கல்வி நிலையங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. குறிப்பாக நாலந்தா தலைசிறந்த கல்விப்பீடமாக கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை விளங்கியுள்ளது. இதன் சிறப்பினை சீன யாத்திரிகர் 'யுவான் சுவாங்' குறிப்புகள் உறுதி செய்கின்றன. இது பௌத்தக் கல்விப்பீடமாக மட்டுமன்றி இந்துக் கல்வியையும் புகட்டும் பல்கலைக்கழகங்களாக விளங்கியது. குறிப்பாக வேதம், இந்து மெய்யியல், தர்க்கம், இலக்கணம், மருத்துவம் முதலிய பிறவும் கற்பிக்கப்பட்டன.
- இக்காலப் பகுதிகளில் கிராமப்புறங்களில் மரநிழல்களிலும் பொது இடங்களிலும் மண்டபங்களிலும் கல்விப் போதனைகள் சாதாரண மக்களுக்கு வழங்கப்பட்டன.
- மத்திய காலத்தில் இந்துக்களிடையேயும் துறவோர் கூட்டமாக வாழும் அமைப்புகள் தோன்றத் தொடங்கியமையால், அவர் தம் மடங்கள் கல்வி மையங்களாகின.

  (உ-ம்) சங்கரர் மடங்கள். இங்கு வைதிகக் கல்வி மரபு பேணப்பட்டது.

## இந்துக் கல்விப் பாரம்பரியம்

- தமிழ்நாட்டில் மிக ஆரம்ப காலத்தில் புலவர்களே கல்வியோடு தொடர்புடையவர்களாகக் காணப்பட்டனர். ஆயினும் கல்வி நிறுவனங்கள் பற்றிய குறிப்புகள் இல்லை.
- சங்க இலக்கியங்களில் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

  (உ-ம்) உற்றுளி உதவியும்

  உறுபொருள் கொடுத்தும்..." (புறநானூறு)
- சங்க மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்களில் கல்வியின் சிறப்பு பெரிதும் விளக்கப்பட்டுள்ளன.

  (உ-ம்) திருக்குறள், நாலடியார், ஆசாரக்கோவையில் கல்வி பற்றிய குறிப்புக்கள் உண்டு
- தமிழகத்தில் எழுச்சி பெற்ற சமண, பௌத்தப் பள்ளிகள், மடங்கள் கல்விப் போதனைகளைச் சாதாரண மக்களுக்கு வழங்கின. 'பள்ளிக்கூடம்' என்ற சொல் வழக்கு கல்விச்சாலையை குறித்து வழங்குவதற்கு இது காரணமாயிற்று.
- பல்லவ - பாண்டியர் காலத்தில் கல்விக்கூடம் "கடிகை"என்ற பெயரால் சுட்டப்பட்டது.
- பல்லவரின் ஆட்சிக் காலத்தில் காஞ்சிக்கடிகைத் தானங்கள் வைதிகக் கல்வியைத் தமிழகத்தில் போதித்தன. பாகூர், சோழிங்கூர் ஆகிய இடங்களிலும் இக் கல்லூரிகள் காணப்பட்டன.

  கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்..." என்ற அப்பர் தேவார அடிகள் 'காஞ்சிநகர்' கல்வியிற் சிறந்திருந்தமையை எடுத்துக்காட்டப்படுகின்றது.
- சோழராட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் கோயில்கள் இந்துக்கல்வி மரபைப் பேணலாயின. திருக்கோயில்களை ஆதாரமாகக் கொண்டு கல்விச்சாலைகள் எழுந்தன.

  (உ-ம்) தஞ்சைப் பெரிய கோயிலில் சரஸ்வதி மண்டபம், வக்காணிப்பு மண்டபங்கள், வியாகரண மண்டபங்கள், தேவாரச் சுற்றுக் கல்லூரிகள், நிருத்த மண்டபங்கள் காணப்பட்டமை

- இவற்றோடு பிராமணக் குடியிருப்புக்களான சதுர்வேதி மங்களங்களும் வேதக் கல்வியோடு கலை வளர்ச்சிக்கும் பங்களிப்பு செய்தன.

  (உ-ம்)(i) மூன்றாம் குலோத்துங்கசோழன் காலத்தில் (கி.பி 1178-1218) திருவொற்றியூர் திருத்தலத்தில் அமைக்கப்பட்டிருந்த வியாகரண மண்டபம் அதற்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் பற்றி திருவொற்றியூர் கல்வெட்டு கூறுகிறது.

  (ii) முதலாம் இராஜேந்திரசோழன் காலத்துச் சாசனமொன்று வக்காணிப்பு மண்டபம் பிராமணரின் வேதக்கல்வி நிலையமென உறுதி செய்கிறது.

- நாயக்கர் காலத்தில் இந்துக் கல்வி மரபினைப் பேணிப் பாதுகாத்த சிறப்புக்குரியவை மடங்களும் ஆதீனங்களுமாகும். குறிப்பாகத் தென்னிந்தியாவில் வைதிகக்கல்வி மரபை வளர்த்து செல்வதில் முன்னிற்கின்றன.

  (உ-ம்) திருவாவடுதுறை ஆதீனம்

- ஐரோப்பியராட்சிக் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களே இந்துக் கல்விப் பாரம்பரியத்தைப் பேணியவைகளாக விளங்குகின்றன.

- 19 ஆம் நூற்றாண்டில் இந்து மக்களிடையே ஏற்பட்ட சமய விழிப்புணர்வு காரணமாக பல சமய நிறுவனங்கள் தோன்றிக் கல்விச்சாலைகளை அமைத்துக் கல்விப் பணிபுரிந்தன.

  (உ-ம்) பிரமசமாஜம், ஆரியசமாஜம், இராமகிருஷ்ண மிசன் ஆகியன.

## இலங்கையில் இந்துக் கல்விப் பாரம்பரியம்

- இலங்கையில் சோழராட்சிக் காலம் வரை இந்துக் கல்விப் பாரம்பரியம் அரண்மனை சார்ந்த வைதிகக் கல்விச் செயற்பாடுகளாகக் காணப்பட்டன.

  (உ-ம்)அனுராதபுரத்தை ஆண்ட பண்டுகாபய மன்னன் ‘பண்டுல’ எனும் வைதீகப் பிராமணனிடம் இராசகுமாரன் ஒருவன் கற்றுக் கொள்ள வேண்டிய வித்தைகளைக் கற்றதாக அறிய முடிகிறது.

- சோழராட்சியின்போது பொலனறுவைப் பிரதேசங்களில் குடியேறிய பிராமணக் குடியிருப்புக்கள் இந்துக் கல்விப்பாரம்பரியத்தை வளர்க்கின்ற இடங்களாக விளங்கின.

- பொலனறுவை இராசதானியை ஆட்சி செய்த விஜயபாகு, பராக்கிரமபாகு, நிசங்க மல்லன் காலத்திலும் பிராமணக் குருமாரின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. அரண்மனைகளிலும் பெரும் வித்யாபீடங்களிலும் வேதம், வேதாகமங்கள், சோதிடம், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், மனுதர்மசாத்திரம் என்பன கற்பிக்கப்பட்ட செய்திகளைச் சூளவம்சம் கூறுகிறது.

- யாழ்ப்பாண இராச்சிய காலங்களிலும் பிராமணர்களே வைதிக கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

- திண்ணைப் பள்ளிக்கூடங்களில் அக்காலப் புலவர்கள் தமிழ் இலக்கண, இலக்கிய, காவிய, புராண, இதிகாச மரபுகளைக் கற்பித்துள்ளனர் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

- புராதனகால இலங்கையில் வாழந்த இந்துக்கள் வைதீகக் கல்வி முறையில் சமயச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

- போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களில் மடங்கள், ஆதீனங்கள், திண்ணைப் பள்ளிக்கூடங்கள் என்பன சாதாரண பொதுமக்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மேற் கொண்டன.
- ஆங்கிலேயராட்சிக் காலத்தில் கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முயற்சியினால் சைவக் கல்விப் பாரம்பரியம் பாடசாலைக்கல்வியினூடாக வழங்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (உ-ம்) சைவப்பிரகாச வித்தியாசாலைகள், யாழ் இந்துக் கல்லூரி
- 20ஆம் நூற்றாண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இந்துப் பாடசாலைகளை நிறுவிக் கல்விப் பணிபுரிந்தது.
- இராமகிருஷ்ணமிசனும் இலங்கையில் இந்துக் கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுக்கும் பணியில் ஈடுபட்டதோடு அநாதை இல்லங்களையும் நிறுவி பணிபுரிந்தது.
- இருபதாம் நூற்றாண்டில் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் இந்துக்கல்வி மரபு பாடத்திட்டத்தினூடாக இந்து மாணவர் கற்பதற்கான வாய்ப்புத் தொடர்ந்தது. இன்று பல்கலைக்கழக மட்டத்தில் இந்துக் கல்விப் பாரம்பரியம் பேணப்பட்டு வருகின்ற சிறப்பு இலங்கையில் காணப்படுகிறது.
- அத்தோடு இந்து அறநெறிப் பாடசாலைகளூடாகவும் இந்துக் கல்விப் பாரம்பரியம் அரசின் அனுசரணையோடு பேணப்பட்டு வருகிறது.

## புராதன இந்துக் கல்வியின் நோக்கம்:

- புராதன இந்துக் கல்விப் பாரம்பரியம் இரு வகை நோக்குடையதாகக் காணப்பட்டது.
  1. ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த அறிவைப் பெறுதல்.
  2. உலகியல் சார்ந்த அறிவைப் பெறுதல்.
- இவற்றை முறையே பரவித்தியா, அபரவித்தியா என அழைத்தனர்.
- பரவித்யா அதாவது ஆன்மீக ஈடேற்றம் சார்ந்த கல்வி வேத உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டது. இது இரசனை சார்ந்த கல்வியாக அதாவது இலக்கியங்களைக் கற்று, இரசித்து, இன்பம் பெறுவதோடு உயரிய இலட்சியத்தை அடையவும் வழிகாட்டியது.
- அபரவித்யா உலகியல்சார்ந்த தொழில்சார் கல்வியாகக் காணப்பட்டது. ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன பிராமணருக்குரிய செயற்பாடுகளாகக் காணப்பட்டன. ஆயினும் அவை ஆன்மீக நோக்கம் கொண்டவை. ஆதலால் அதன் வழி நோக்கப்பட்டன. சாதாரண மக்களுக்குரிய தொழிற்கல்வி தந்தைவழி மரபில் போதிக்கப்பட்டது.

- மேலும் இந்துக்கல்வியின் நோக்கத்தை பின்வருமாறும் நோக்கலாம்.
    - (i) தனியாள் நோக்கம்- இது ஆன்மீக இலட்சியமாகவும் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும் அறநெறியைக் கடைப்பிடித்தல் எனப்பட்டது.
    - (ii) சமூக நோக்கம் - இந்து சமூக தர்மத்தைப் பேணுவதற்கும் நாட்டில் அமைதி, சமாதானம், ஒற்றுமையைப் பேணவும் வழிவகுத்தது.
    - (iii) அரச நோக்கம் - ஒரு நாட்டின் அரசனும் அரச அதிகாரிகளும் அரச தர்மத்தைக் கடைப்பிடிக்கவும், சமய நீதியைப் பேணவும் வழிவகுத்தது.
    - (iv) பொருளாதார நோக்கம் - இவை வணிகர்கள் உழைப்பாளிகள் சமூகத்தினதும் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியது
    - (v) தொழில்சார் நோக்கம் - தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவின.

**புராதன இந்துக் கல்விக் கோட்பாடுகள்:**

- புராதன இந்துக் கல்வி மரபு குருகுலவாசக் கல்வியையே சிறப்பாகக் கருதியது.
- பிரமச்சரிய நிலையிலுள்ள மாணாக்கர் குருகுலவாசம் செய்து கல்வி கற்க வேண்டு மெனவும், பிரமச்சரிய காலமே கல்விக்குரிய காலமாகவும் கருதப்பட்டது.
- குருசீட பரம்பரையில் பெரும்பாலும் செவி வழி மரபிலே கல்வி போதிக்கப்பட்டது. மனனமே கல்வியின் அடிப்படையானது.
- நூற்கல்வியின் இறுதி இலட்சியம் ஆன்மீக ஈடேற்றத்தை அடைவதே ஆகும்.
  (உ-ம்) (i) அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே
  (ii) கற்றதனாலாய பயன் கடவுளை வணங்குதல்
- ஆரம்பக் கட்டங்களில் கல்வியைப் பெறும் உரிமை அல்லது சந்தர்ப்பம் தகுதியுள்ள ஒரு சிலருக்கே உண்டு எனக் கருதப்பட்டது. நால்வகை வருணத்தாருள் சூத்திரர் தவிர்ந்த ஏனையோர் கல்வி கற்கும் உரித்துடையோராயினர்.
- ஏனையோர் தத்தம் குலத்தொழிலைத் தந்தை, தமையன், உறவினர் என்போரிடமிருந்து கற்றுக் கொண்டனர்.
- தர்மசாத்திரங்கள் குருகுல வாசத்துக்குரிய வயதெல்லையை மூன்று வருணத்தோருக்கும் வேறுபடுத்துகின்றன.
- ஒரு சிறு தொகையினரான மாணாக்கரே ஓராசிரியரிடம் கற்றல் வேண்டும் என்பது ஸ்மிருதி நூல்களின் இலட்சியமாகும்.
- ஆன்ம வித்தையைக் கற்பிப்பவர் ஆசிரியன், ஆச்சார்யன் எனப்பட்டார். சம்பளம் பெற்றுக் கொண்டு உலகியலறிவைத் தருகின்ற கருவி நூல்களைப் போதிப்பவன் உபாத்தியாயன் என வழங்கப்பட்டார்.
- குருகுலக்கல்வியின் இலட்சியமாக ஒழுக்கம் கருதப்பட்டது. குரு, சீடனைத் தன் பிள்ளையாகக் கருதி கல்வி மூலம் நல்வழிப்படுத்த வேண்டும். குருகுலக்கல்விப் பயிற்சி முடித்த பின்னரே தன் குருவுக்குப் பொருத்தமான குரு தட்சணை வழங்குதல் கடனாகக் கருதப்பட்டது.

- குருகுலக் கல்வியை முடித்து குருதட்சணை வழங்கிய மாணவன் 'ஸ்நாகதன்' எனப்பட்டான்.
- குருகுலக் கல்வி முடிவில் கல்வியின் இலட்சியங்கள், அறிவுரைகளாகக் குருவினால் சீடனுக்குக் கூறப்பட்டன.

  (உ-ம்) உண்மை பேசு..", "தருமம் செய்... "இத்தகைய அறிவுரைகள் தைத்திரிய உபநிடத சீஷாவல்லிப் பகுதியில் காணப்படுகிறது.

- இடைக்காலங்களில் ஆசிரியருக்குரிய வேதனம் ஊர்ப் பொது நிலங்களில் பெற்ற வருவாயிலிருந்து வழங்கப்பட்டது.
- கல்வி கற்பிக்கும் குருவுக்கும் கல்வி கற்போனுக்கும் சமூகத்தில் பெருமதிப்பு அளிக்கப்பட்டது.

## புராதன இந்துக் கல்வி முறை :

### வேத உபநிடங்களின் குருகுலக் கல்வி மரபு

- வேத இலக்கியங்களில் சுருதி வழியான கல்வி முறை முதன்மை பெற்றது. வேத அத்தியயனம் இதில் சிறப்பிடம் பெற்றது.
- குருவும் சீடரும் சேர்ந்து வேதங்களை ஓதிய முறையினை இருக்குவேத பிரமச்சரிய சூக்த மூலம் உணர முடிகிறது.
- குருவின் இல்லம் நாடிச் சென்ற மாணவன் குருகுலவாசம் செய்து குருவுக்கு அடிபணிந்து, குருவின் ஏவல்களைப் பூர்த்தி செய்து தன் ஆசானைத் தெய்வம் போல் மதித்து அவர் விரும்பிய நேரங்களில் கல்வி கற்றான். இது குருகுலவாசக் கல்வி எனப்பட்டது.
- இக்குருகுலக் கல்வி மரபுக்கு வேத, உபநிடதங்களே ஆதாரமாயமைந்தன. இப்புராதன கல்வி மரபின் வளர்ச்சியின் உன்னத நிலையினை உபநிடதங்களில் காணலாம்.
- பிரமச்சரிய வாழ்வுடன் குருகுலக்கல்வி தொடர்புடையதாகக் காணப்பட்டது. குருகுல வாசத்தின்போது குருகுல வாழ்வு, குருசேவை, குருபக்தி, குரு தர்மம், ஒழுக்கம் என்பன அவசியமாகப் போற்றப்பட்டன.
- குருவின் வீட்டில் தங்கியிருந்த மாணவர்கள் யாகாதி கருமங்களில் பங்குபற்றினர். ஓதுதல், ஓதுவித்தல் முதலிய உபசரணைகளும் இடம்பெற்றன.
- குருகுல வாசமும் குருகுலக் கல்வியும் ஆடி மாத பூர்வ பட்சத்தில் ஆரம்பமாயின.
- குருகுலக் கல்வியில் ஈடுபட்ட மாணவர்கள் பிராணாயாமம், சந்தியாவந்தனம் முதலிய கடமைகளிலும் ஈடுபட்டனர். உபநிடதங்களில் குருவும் சீடரும் நெருங்கியிருந்து தத்துவ விசாரணைகளிலும் ஈடுபட்டனர். உபநிடதக்கல்வி முறைகளில் வினாவிடை, உரையாடல், செய்முறை, எடுத்துக்காட்டுகள் முதலிய உத்திகளும் கையாளப்பட்டன.
- சத்திரியர்களும், பெண்களும் இவ்வுபநிடதக் கல்வியில் இணைந்து கொண்டமையும் முக்கியத்துவம் பெறுகின்றது.

- வேத, உபநிடதங்களில் குருகுலக் கல்வி சிறப்புப் பெறுவதைப் போன்று, புராண இதிகாசங்களில் ஆச்சிரமக் கல்வி மரபு சிறப்புப் பெறலாயிற்று. இது குருகுலக் கல்வி மரபின் வளர்ச்சி நிலையைக் குறிக்கிறது. ஆச்சிரமங்களில் பரந்துபட்ட கல்வி முறைமைகள் காணப்பட்டன.
- முண்டக உபநிடதம் புராதன கல்வி முறையை இருவகையாக வகைப்படுத்துகிறது.

  1.அழியாப் பரம்பொருளை அறிவதற்கான பரவித்யா

  2.உலகியல் தொடர்புடைய அபரவித்யா
- சாந்தோக்கிய உபநிடதத்தில் வேதவித்யா, பிரமவித்யா, பூதவித்யா, சாத்திரவித்யா, நட்சத்திரவித்யா, தேவஜனவித்யா எனப் பல கல்விகள் போதிக்கப்பட்டன எனக் குறிப்பிடப்படுகிறது.
- அதர்வ வேதத்தில் பல வகை மருத்துவம் தொடர்பான கல்வி மரபுகள் காணப்பட்டன எனக் குறிப்பிடப்படுகிறது.
- பொதுவாக வேத உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பவற்றில் இலக்கணம், தருக்கம், கணிதம், காலம், ஒழுக்கவியல் பற்றிய கல்வி முறைமை காணப்பட்டது எனலாம்.

### அரண்மனைக் கல்வி மரபுகள்:

- இதிகாசங்களில் சத்திரியச் சிறுவர்களுக்கு வேதக் கல்வியோடு அரண்மனைக் கல்வியும் போதிக்கப்பட்ட செய்திகள் காணப்படுகின்றன.
- அரசியல் முறைமை, அரச நிருவாகம், நீதி பரிபாலனம், சமூகப் பாதுகாப்பு முதலியவற்றின் பொருட்டு தரும சாத்திரங்கள், அர்த்த சாத்திரம் என்பனவும் போதிக்கப்பட்டன.
- வில்வித்தை, குதிரையேற்றம், யானையேற்றம், மல்யுத்தம், தேரோட்டம், வாள்பயிற்சி முதலிய போர்க்கலைகளும் பயிற்றுவிக்கப்பட்டன.
- இவற்றுடன் இலக்கிய இலக்கணங்கள், வானியல் சோதிடக் கலைகள், கணிதம், தருக்கம் என்பனவும் சிற்பம், ஓவியம், நாட்டியம், இசை முதலிய கலைகளும் கற்பிக்கப்பட்டமை பற்றி அறிய முடிகிறது.

### பல்லவர், சோழர்கால இந்துக் கல்வி மரபு:

- சமண பௌத்த கல்விக் கூடங்களைப் போன்று இக்காலப் பகுதிகளில் இந்துக் கல்வி நிலையங்களும் கல்வியை வழங்க முற்பட்டன. இவை பெரும்பாலும் கோயில் மண்டபங்களைக் கல்விச்சாலைகளாகக் கொண்டு கற்பித்தன.
- வடமொழிக் கல்வி மரபுகளோடு தமிழ்மொழிக் கல்வி மரபுகளும் பேணப்பட்டன.
- ஒருபால் வேத ஒலியும், மறுபுறம் திருமுறை ஒலியும் எழுந்தமையை பல்லவ, சோழர் காலப் பதிகங்கள் எடுத்துக் காட்டுகின்றன.
- சோழராட்சிக் காலப்பகுதியில் பண்ணிசை, நடன சிற்பக் கலைகள் சிறப்பாகப் பயிற்றப்பட்டன. சோழர் காலக் கல்வெட்டுக்கள் இதனை அறியத் தருகின்றன.
- மடங்கள் ஆதீனங்களில் சைவ சித்தாந்த நூற்கல்விப் போதனைகள் மத்திய காலத்தில் முக்கியத்துவம் பெற்றன.

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்: கற்றல் -

**படி** I: புராதன கல்விச் செயற்பாடுகள், குருகுலவாசக் கல்வி என்பன பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**படி** II: மாணவர்கள் புராதன கல்விமுறையை வகைப்படுத்தி, நோக்குவதற்கு வழிகாட்டுங்கள்.

**படி** III: மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, புராதன கல்விப் பாரம் பரியத்தின் சிறப்பம்சங்களை சான்றுகளின் மூலம் ஆதாரங் காட்டி எழுத வழிப்படுத்துங்கள்.

**படி** VI: எழுதியவற்றை வகுப்பறையில் வாசித்துக் காட்டச் செய்யுங்கள்.

**உசாத்துணைகள்**

(1) வியத்தகு இந்தியா - ஏ. எல். பசாம்
(2) இலங்கையின் இந்து கலாசாரம் - சி. பத்மநாதன்
(3) இந்து நாகரிகம் - க. சி. குலரெத்தினம்

**தேர்ச்சி 9.0** : இந்து அறிவியல் கால உணர்வுகளோடும் தேவை களோடும் இணங்கியும் இசைந்தும் மனித வாழ்வை மேம்படுத்துமாற்றினை அறிந்து விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : இந்து அறிவியல் தொடர்பான சிந்தனைகள் இந்து வாழ்வியலுடன் கொண்டுள்ள தொடர்புகளை எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள்** : 60

**கற்றற் பேறுகள்** :

- அறிவியல் என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாகக் குறிப்பிடுவார்.
- இந்து அறிவியல் அம்சங்கள் காலத்தால் முற்பட்டவை என்பதை உதாரணங்களுடன் முன்வைப்பார்.
- காலத்தால் முற்பட்ட இந்து அறிவியல் அம்சங்கள் ஏனைய நாடுகளிலும் பரவி உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறுவார்.
- இந்து அறிவியலில் அடங்கும் விடயங்களைப் பகுத்தும் தொகுத்தும் எடுத்துக்காட்டுகளுடன் முன்வைப்பார்.
- இந்து அறிவியலில் எமது முன்னோரின் அறிவியல் சிந்தனைகளின் பங்களிப்புகளை விளங்கி, மதிப்பளிப்பார்.
- இந்து அறிவியல் அம்சங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை விளங்கி செயற்படுவார்.

## 9.1.1 இந்து அறிவியல் ஓர் அறிமுகம்

- ஆக்கத்திற்கு அடிகோலுவது ஆய்வுச்சிந்தனை. அதனை அடிப்படையாகக் கொண்டமைவது அறிவியல் துறையாகும்.
- “அறிவைக் கொண்டு ஒன்றை ஆராய்ந்து, அதன் உண்மைத் தன்மைகளைப் பகுப்பாய்வு செய்து பரிசோதனை மூலம் நிறுவுதலே அறிவியல் “என வரைவிலக்கணப்படுத்துவர்.
- ‘அறிவு’, ‘இயல்’ எனும் இரு சொற்கள் இணைந்து ‘அறிவியல்’ என்னும் கலைச்சொல் உருவானது.
- முழுமையான ஒன்றைப் பற்றிப் பகுத்து ஆராய்வதும் முழுமையற்றுக் காணப்படும் ஒன்றின் படிமுறையான தொடர்பையும் ஒழுங்கையும் ஆராய்தலும் அறிவியலாகும்.
- அறிவியல் என்பதை விஞ்ஞானம் எனவும் கூறுவர்.
- இந்து அறிவியல் துறைகள் ஒவ்வொன்றும் இந்துக்களின் வாழ்வியலோடு தொடர்புபட்டதாகவே விளங்குகின்றன.
- இந்துப் பண்பாட்டில் அறிவியலும் ஆன்மீகமும் ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளன.
- இந்து அறிவியல் என்பதனுள் எண்ணற்ற துறைகள் அடங்கும். அவற்றுள் இந்து கணிதவியல், இந்து வானியலும் சோதிடவியலும், இந்துக்களின் மருத்துவம், நாட்டார் அறிவியல் என்னும் விடயங்களை மட்டும் இங்கு விரிவாக நோக்குவோம்.

## 9.1.2 வானியல் அறிமுகம்

- இந்து நாகரிக வரலாற்றில் இந்துக்களிடையே அறிவியல் சிந்தனைகள் மிக ஆரம்ப காலத்திலிருந்தே தோற்றம் பெற்றன என்பர். அவற்றுள் வானியலும் சோதிடவியலும் மிக முக்கியத்துவமுடையன.
- வானியலை அடிப்படையாகக் கொண்டே சோதிடக்கலை தோற்றம் பெற்றதனால் இவை இரண்டும் இணைந்து செயற்படுபவைகளாகவும் உள்ளன.
- வானியல், சோதிடம் பற்றிய சிந்தனைகள் மக்கள் வாழ்வை வளப்படுத்துவனவாகவும் விளங்குகின்றன.
- இந்துக்களின் சமய வாழ்வுக்கும் சமய இலட்சியங்களை அடைவதற்கும் உரிய சாத்திரங்களாக வானியலும் சோதிடவியலும் அமைகின்றன.
- வேத இலக்கியங்களின் துணை நூலான வேதாங்கங்கள் ஆறினுள் சோதிடமும் ஒன்றாகும். சோதிட சாத்திரம் என்பது வேள்வி நிகழ்த்துவதற்கேற்ற நாளையும் நேரத்தையும் குறிப்பிடுவதையே நோக்காகக் கொண்ட, பண்டைய வானியலை உள்ளடக்கியதாகும்.

## 9.1.3 வானியல்

- பண்டைய இந்தியர்கள் வானியல் துறை சார்ந்த விடயங்களில் நிரம்பிய அறிவுடையோராய் இருந்தனர்.
- வேதகால மக்கள் போதியளவு வானியலறிவு பெற்றிருந்தனர் என்பதை வேதங்களின் சில பகுதிகளிலிருந்து நாமறிய முடிகிறது.
- இந்திய வானியல் வரலாறு மிகவும் பரந்தது என மராட்டிய ஆசிரியரான S. B. தீட்சித் என்பவர் குறிப்பிடுகிறார். இவ்விடயம் பற்றி விரிவான நூலொன்றையும் அவர் எழுதியுள்ளார்.
- இந்திய வானியல் தொடர்பான அறிவியல் சிந்தனைகளை பின்வரும் தலைப்புக்களில் ஆராயலாமெனவும் S. B. தீட்சித் குறிப்பிடுகின்றார்.

### (i) வேத காலம்

- மண், விண், இடைவெளி பற்றி ஆராயப்பட்டுள்ளன.
- சூரிய, சந்திரர் பற்றி அறியப்பட்டுள்ளன.
- நாள், சந்திர மாதம், சூரிய வருடம் பற்றிய குறிப்புகளும் உள்ளன.
- பிராமணங்களில் சூரியனது போக்குப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ஐந்து முதல் ஆறு காலங்கள் பற்றியும் 12 மாதங்கள் பற்றியும் 27 நட்சத்திரங்கள் பற்றியும் சில கிரகங்கள் பற்றியும் குறிப்புகள் உள.

### (ii) வேதாங்கங்கள்

- சோதிடம் - வேதாங்கங்களில் ஒன்றாகும்
- சந்திர மாதம் பற்றிக் கூறப்படுகிறது.
- அதில் சூரிய வருடம் பற்றி விபரம் காணப்படுகிறது.
- அதர்வ வேதத்தில் சோதிடத்தின் தொடக்கமுளது.
- மகாபாரதத்தில் யுகங்கள், மாதங்கள், ருதுக்கள் பற்றிய குறிப்புக்கள் உள.

**(iii) பண்டைய வானியல் கோட்பாடுகள்** (கி.மு. 500 - கி.பி. 500)

(அ) **பிதாமஹ கோட்பாடு** - வருடம் 365 நாட்களைக் கொண்டது.

(ஆ) **புளிஷ கோட்பாடு** - நீள்வட்டப்பாதை பற்றிய விபரம்(Oblique Path)

- நட்சத்திரங்களின் தோற்றம், மறை நாட்கணிப்பு

(இ) **சூரியக் கோட்பாடு** - கிரகங்களின் அசைவுக் கணிப்பு

**(iv)** வராக மிகிரர் முதல் கணேஷ் தைவஞ்ஞன் வரை வராக மிகிரர் முதல்

கணேஷ் தைவஞ்ஞன் வரை (கி.பி. 500 - கி.பி. 1500)

- இந்து வானியல் பற்றி ஆராய்ந்த ஆரம்பகால ஐரோப்பிய அறிஞர்கள் பிற்காலத்திலெழுந்த நூல்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்களே அன்றி, ஆரம்பகால

  நூல்களைப் புறக்கணித்தமையால் இந்து வானியல் பற்றிய உண்மைகள் அதிகம் வெளிப்படவில்லை.
- இருக்கு வேத காலத்திலிருந்து வானத்தில் 27 நட்சத்திரங்கள் அல்லது சந்திர வீடுகள் உள எனக் கணக்கிடப்பட்டது.
- சந்திரனானது நிலையான நட்சத்திரங்களைச் சுற்றி வர 27 சந்திர நாட்களும் 7 3/4 மணி நேரமும் எடுக்கிறது. அதனால் வானம் 27 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் சந்திரன் சுற்றி வரும்போது சூரியனில் வெளித்தோற்றப் பாதை யிலுள்ள எந்த நட்சத்திரக் கூட்டத்தை அணுகிச் செல்கிறதோ அதன் பெயரால் அவை அழைக்கப்பட்டன.
- சந்திர மாதம், நட்சத்திரங்களைக் கொண்டு அளவிடப்பட்டது. அது 27 நாட்களும் 8 மணி நேரமுமாயிருந்தமையால் இதனைச் செம்மைப்படுத்த பிறிதொரு நட்சத்திரத்தை இடையிற் புகுத்தினர் என்பர்.
- சந்திரனுக்கு மாசத்தை உருவாக்குபவன் என்ற கருத்தில் ''மாசக்கிருத்தா'' என்ற பெயர் வழங்கப்பட்டது
- இந்திய வானியலாளர் தம் வானியல் அறிவை, கணித அறிவோடு விருத்தி செய்து அராபியரூடாக ஐரோப்பியர்களுக்கு நல்கினர் என்ற செய்தி அறியப்படுகிறது.
- பண்டைய வானியல் முறைகள் யாவற்றையும் போன்று இந்திய வானியலாளர்களும் தொலைநோக்கி இன்றியே தம் அவதானிப்புக்களைச் செய்தனர். இவ் அவதானிப்பு முறைகள் மிகச் செவ்வையாயிருந்தமையாலும் அவர்கள் தசம முறை மூலம் கணித்தலில் தேர்ச்சி பெற்றிருந்தமையாலும் மிகச் செப்பமாக அவற்றை அளவீடு செய்தனர்.
- இவர்கள் தம் அளவீடுகளூடே ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஏழு கிரகங்களையே ஆரம்பத்தில் அறிந்திருந்தனர். பின் இராகு, கேது எனும் கிரகங்களையும் சேர்த்துக் கொண்டனர்.
- இவ்வெல்லாக் கிரகங்களும் ஒவ்வோர் ஊழிக் காலத் தொடக்கத்திலும் ஒரேநிலையில் நின்று சுழலத் தொடங்கினதென்றும் அவ்வூழிக்கால முடிவில் அந்நிலைக்கே

- இந்து வானியலார் ஏனையோரைப் போலின்றி கோள்களுக்குச் சமமான, உண்மையான இயக்கமுண்டு எனவும், அவை புவியினின்றும் வெவ்வேறு தொலை விலிருப்பதனாலேயே வெவ்வேறான கோணவியக்கத்தை உடையன எனவும் கூறினர்.
- இந்து வானியல்படி ஆரம்பத்தில் கிரகங்கள் பூமியை மையமாகக் கொண்டுள்ளன எனக் கணிப்பு முறைக்காகக் கொள்ளப்பட்டது. எனினும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டளவில் ஆரியப்பட்டர் எனும் இந்து வானியலார் புவியானது சூரியனைச் சுற்றி வருகிறதெனவும், அது தன் அச்சில் சுழல்கிறதெனவும் கருத்து வெளியிட்டார்.
- சூரியன் நடுவரையைக் கடக்கும் காலத்தை அறிந்து, அதனை ஓரளவு செம்மையாகக் கணித்தனர்.
- கி.பி. 5 ஆம் - 7 ஆம் நூற்றாண்டளவில் உஜ்ஜயனியில் வானியலாராச்சி மையம் இருந்ததாக நம்பப்படுகிறது.
- மேலும் ஓராண்டின் காலவளவு, சந்திரமாதம் என்பவை நம்பக்கூடியவையாக இருந்த தோடு கிரேக்க, ரோம கணிப்பு முறைகளிலும் செம்மையாகக் காணப்பட்டது எனக் கருதினர்.
- இந்து வானியலார் கிரகணங்களைத் திருத்தமாக எதிர்வு கூற அறிந்திருந்ததோடு, அவற்றின் உண்மைக் காரணத்தையும் விளங்கியிருந்தனர்.
- 1ஆம் ஆரியப்பட்டர், வராஹமிஹிரர், பிரம்மகுப்தர் ஆகிய மூவரும் புராதன இந்து வானியற்புலமை மரபின் முப்பெரும் பிதாமகர்கள் எனப்பட்டனர்.
- கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிரிய நாட்டு வானியலறிஞரான செவரசு செபோத்து என்பார் இந்திய வானியலாளரின் வானியல், கணிதவியல் சிறப்பை போற்றியுள்ளார்.
- இந்திய அல்லது இந்து வானியலாளர்கள் பற்றி அல்புறூணியின் (Albiruni's India 1031 - A. D) குறிப்புக்களிலிருந்தும் பல விடயங்களை நாமறிய முடிகிறது.
- இந்திய வானியல் பற்றிய நூல்களில் ஆரியப்பட்டர் பற்றிய குறிப்புகள் காணப்படு கின்றன. வராகமிகிரர் தொடக்கம் இன்று வரையிலான வானியலாளர்கள் ஆரியப் பட்டரின் குறிப்புக்களை மேற்கோளாகக் காட்டுகின்றனர். மகா ஆரிய சித்தாந்த என்ற நூல் இவரது நூல்கள் அழிந்து போனமைக்கு ஆதாரமாகும். ஆரியப்பட்டரது சித்தாந்தம் (1) கீதிகா - வானவியல் அட்டவணை (2) கணிதம் (3) காலக்கியா பாடம் (கால அளவு) (4) கோளம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பர்.
- ஆரியபட்டர், புளிசர், வாசிஷ்டர், லாடதேவர் ஆகியோர் உலகம் உருண்டையாக இருப்பதனால் ஓரிடத்தில் பகலும் ஓரிடத்தில் இரவும் நிலவுவதாகக் குறிப்பிட்டனர்.
- புளிசரால் புளிச சித்தாந்தம் என்ற வானியல் நூல் தொகுக்கப்பட்டது.

- இந்து வானியலார் ஏனையோரைப் போலின்றி கோள்களுக்குச் சமமான, உண்மையான இயக்கமுண்டு எனவும், அவை புவியினின்றும் வெவ்வேறு தொலை விலிருப்பதனாலேயே வெவ்வேறான கோணவியக்கத்தை உடையன எனவும் கூறினர்
- பிரம்மகுப்தர் குப்தர் காலத்தில் (கி.பி. 598) வாழ்ந்த சிறந்த வானியலாளராகக் கருதப்படுகிறார். பிரம்மஸ்புடசித்தாந்தம் இவரது வானியல் தொடர்பிலான சிறந்த நூலாகும்.
- கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் உஜ்ஜயினியில் வாழ்ந்த வானியலாளர் வராகமிகிரர் சோதிடத்தில் மிக வல்லவரான இவர் வானவியல் வரலாற்றுக்குப் பயன்படும் 'பஞ்ச சித்தாந்திகை' எனும் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.
- வராகமிகிரர் தமது நூலில் பௌலீசர், ரோமகர், வாசிஷ்டர், சௌரர், பைதாமகர் எனும் ஐந்து வானியல் சித்தாந்திகளையும் சிம்வராசாரியார், ஆரியபட்டர், யவனர் ஆகிய ஆசிரியர்களையும் குறிப்பிடுகிறார்.
- லடாசாரியார் யவனபுரத்தில் சூரியாஸ்தமனத்தை அடிப்படையாகக் கொண்டும் சிம்வராசாரியார் இலங்கையின் சூரிய உதயத்தை அடிப்படையாகக் கொண்டும் நேரத்தைக் கணித்தனர்.
- பொதுவாக இந்து வானியலாளர் சூரியனது பரிமாணம், சந்திரனது பரிமாணம், அவற்றின் தூரம், கிரகணங்கள் பற்றியும் வானவியல் கருவிகளான நீர்க்கடிகாரம் சங்கு, சக்கரம், அரைவட்டம், வில் போன்றவை பற்றியும் அறிந்து விளக்கியுள்ளனர்.

## 9.1.4 சோதிடவியல்

- சோதிடம் என்பது கருமானுட்டானங்களைச் செய்வதற்கு நாள், கோள் முதலிய கால விசேடங்களைக் கணித்துக் கூறுவது எனப்படுகிறது.
- இந்து வானியலும் சோதிடமும் இணைந்து செயற்படும் அறிவியல் சார்ந்த சிந்தனைப்புலங்களாகும்.
- அறிவியலும் நம்பிக்கையும் ஒன்றிணையும் துறையாகச் சோதிடம் வளர்ச்சி கண்டுள்ளது.
- வேதகாலத்தில் வானில் நிகழும் இயற்கை நிகழ்வுகள் பூமியில் நிகழும் கால மாற்றங்கள் என்பவற்றில் மக்கள் கொண்ட நம்பிக்கைகளே சோதிடம் பற்றிய சிந்தனைகளாக விருத்தியடைந்தன.
- வேதாங்கங்களின் ஆறு அம்சங்களில் ஒன்றாக சோதிடம் விளங்குகிறது.
- யசுர் வேதத்தில் யாகங்களில் நாள், கோள் குறித்தமை பற்றிய சிந்தனைகள் சோதிடம் இக்காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை பிரதிபலிக்கின்றன.
- இதிகாச, புராணங்களில் சோதிடத்தின் செல்வாக்குக் காணப்படுகிறது.

  உ-ம்:
  - சகாதேவன் சோதிட வல்லுநராக அறியப்படுகின்றார்.
  - இராமாயணத்தில் இராமனது பட்டாபிஷேகத்திற்கு நாள் குறித்தல்.
  - கிருஷ்ண பரமாத்மா சோதிடத்தில் கவனம் செலுத்தியமை.
  - புராணங்களில் தேவர்கள், அசுரர்கள் சோதிட சிந்தனைகளை முன்னிறுத்தி செயற்பட்ட சம்பவங்கள், அரண்மனைகளில் சோதிடர் செல்வாக்கு.

- சோதிடம் வடமொழியில் ‘ஜ்யோதிஷம்’ எனப்பட்டது. இதன் பொருள் ‘ஒளியுடைய சாத்திரம்’ என்பது. ஜ்யோதிஷம்
    - ஞானத்தை அல்லது அறிவைத் தரும் ஒளி
    - நட்சத்திரங்களின் தூதுச் செய்தி

  என்ற கருத்துக்களுமுண்டு.
- சோதிடம் வானியல்படி அமைகின்ற கோள்களின் நிலையைச் சார்ந்துள்ளது என்பர். பண்டைய வானியல் தொடர்பான அறிவியற் சிந்தனைகளான சூரியன், சந்திரன், நாள், சந்திரமாதம், சூரிய வருடம், ஆறு காலங்கள், பன்னிரண்டு மாதங்கள், 27 நட்சத்திரங்கள், யுகங்கள், சதுர் யுகங்கள், மன்வந்தரங்கள் பற்றிய குறிப்புக்கள் யாவும் இந்து சோதிடக் கலைக்கு அடிப்படையாய் அமைந்தன எனலாம்.
- பண்டைய வானியல் கோட்பாடுகளான பிதாமஹ கோட்பாடு, புளிஷ கோட்பாடு, சூரியக் கோட்பாடு போன்றவையும் இந்து சோதிடக் கலை வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்தன.
- பொதுவாக மக்கள் வானவீதியில் வலம் வரும் கோள்கள், நட்சத்திரங்களின் இருப்புகள், அசைவுகள் என்பவற்றை அறிந்து, அவற்றின் இயக்கங்கள் பூமியோடு எவ்வாறு தொடர்புறுகின்றன என்பதையும் அந்தத் தொடர்புகளால் மானிட வாழ்வில் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பதையும் தெரிந்து அத்தீமைகளினின்றும் தப்பி நன்மையடைய முயன்றனர். இம்முயற்சியின் விளைவாகத் தோற்றம் பெற்றதே சோதிடவியல் என்ற கருத்தும் காணப்படுகிறது.
- இந்து வானியலாளர் பெற்றிருந்த வானசாத்திரமும், கணிதப் புலமையும் பஞ்சாங்கங்களைக் கணித்துச் சோதிடத்தை விருத்தி செய்ய உதவின.

- புராதன வானியலறிஞர்களான ஆரியபட்டர், பிரம்மகுப்தர் ஆகியோரின் நூல்களிலிருந்தும் சோதிடவியல் பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. மகரிஷியாகிய ‘கார்க’ பிருது மன்னனின் சோதிடராவார் என்பதும் மகாபாரதத்திலிருந்து இவரது திறமைகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன என்பதுமாகும்.
    - ‘கார்கா’ காலம் பற்றிய சிறந்த அறிவைப் பெற்றிருந்தாரென்றும், நட்சத்திரங்கள் பற்றிய சாஸ்திரத்தில் சிறந்த புலமை பெற்றிருந்தார் என்றும் குறிப்பிடப்படுகிறது.
    - காலஞானம், காலம் பற்றிய அறிவியல் நூல் இவருடையது எனவும் அறியப்படுகிறது.
    - விஷ்ணு புராணத்தின்படி மாமுனிவராகிய ‘கார்கஷேச’ என்பவரிடமிருந்து வானியல் பற்றிய அறிவையும் கிரகங்கள் பற்றிய விடயங்களையும் அறிந்து கொண்டனரென்றும் குறிப்பிடப்படுகிறது.

- கார்கி சமஹிதை சோதிடத்தைப் பற்றிய ஒரு நூலாக அமைவதாகவும் இது கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப காலத்தில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது. இந்நூல் புராண அமைப்பைக் கொண்டது என்பர்.
- கார்க என்பவரது நூலை அடிப்படையாகக் கொண்டே வராகமிகிரர் எனும் வானியலாளர் பிருஹத் சமஹிதை எனும் சோதிட நூலை இயற்றினார் எனப்படுகிறது.

- பிருஹத் சம்ஹிதையில் வராகமிகிரர் தேவர்களது இருப்பிடமாகிய மேருமலையைச் சார்ந்த இடத்தில் நாரதர் பிருஹஸ்பதிக்கு ரோகிணி யோகத்தை கூறினார். அதே சாஸ்திரம்தான் கார்க, பராசரர், காசியபர், மயன் ஆகியோரால் பல்வேறு சீடர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இந்த உண்மைகளை ஆராய்ந்தே தானும் ஒரு சுருக்கமான நூலை எழுதியதாக வராகமிகிரர் குறிப்பிடுகிறார்.
- "சோதிடனை ஆதரிக்காத இளவரசன் அழிவைச் சந்திப்பான்" எனப் பகவான் கார்க கூறியதாக அவர் குறிப்பிட்டிருப்பது சோதிடக்கலையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.
- கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வராகமிகிரர் வானியல் சாத்திரத்தை விட சோதிடத்தில் சிறந்தவராக விளங்கியுள்ளார். 'பிருகத் சம்ஹிதை' இவரது மிகச் சிறந்த படைப்பாகும். இதில் சோதிடம் பற்றிய மிகப் பரந்த விடயங்களைக் குறிப் பிட்டுள்ளார். சோதிடக் கலைச் சொற்கள் பற்றிய விளக்கம், பல்வேறு கிரகங்கள் பற்றிய விளக்கம், பல்வேறுபட்ட பிறப்புகள், பாலரிஷ்டம் எனும் இளமையில் இறப்பு, நீண்ட ஆயுளைத் தீர்மானித்தல், கால ஒழுங்கில் கிரகபலன், வாழ்க்கை முறை, ராஜயோகம், இரு கிரக சேர்க்கைப் பலன், பல்வேறு ராசி வீடுகளில் உள்ள கிரக பலன், துரதிஷ்டம், மாரகம் ஏற்படுதல் போன்ற விபரங்கள் பிருகத் சமஹிதையில் காணப்படுகின்றன.
- இவர் பிருகத் ஜாதக, யோக யாத்திரா போன்ற நூல்களையும் எழுதியுள்ளார். இவர்களின் பின் 'முஞ்சல' என்பவர் காலக் கணிப்போடு தொடர்புடையவராகவும், சதானந்தர் என்பவர் சூரிய சந்திர மானங்களைப் பற்றி ஆராய்ந்தவராயும் சோதிட விருத்திக்கு உதவியுள்ளனர்.
- பிற்கால அறிஞர் வரிசையில் கி.பி. 1114 இல் வாழ்ந்த பாஸ்கராச்சாரியார் குறிப் பிடத்தக்கவர். இவரது சாதக பாஸ்கரன் எனும் நூல் குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாட்டில் வானியலும் சோதிடமும்

- தமிழ்நாட்டின் புராதன வரலாற்றை அறிய உதவும் சங்க இலக்கியங்களில் வானியல், சோதிடம் பற்றிய செய்திகள் அக்காலப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன.
- வானியல், சோதிட நூலின்படி அமைந்துள்ள காலக் கூறுபாடுகளான திங்கள், பக்கம், நாள் ஆகியவற்றைத் தமிழர் பழங் காலத்தில் அறிந்திருந்தனர்.
- நெடுநல்வாடையில் நக்கீரர் வானவியல் குறிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார். ஞாயிறானது மேடராசி தொடங்கி இராசி தோறும் பெயர்ந்து செல்வதை அவர் பாடியுள்ளார். (நெடுநல்வாடை 160, 161)
- கூடலூர்கிழார் இராசியின் பெயர், அதில் ஞாயிறு நின்ற நிலை, வெள்ளி எனும் கோள் நின்ற நிலை, நாண் மீன்கள் எழுவதும் அமர்வதும், எரிமீன் விழுவதும் ஆகியவற்றைப் புறநானூற்றுப் பாடலொன்றில் (புறம் 229) விளக்குகிறார். இவர் இராசிகளுக்கும் நாண் மீன்களுக்கும் தமிழ்ப் பெயர்களையே அளித்துள்ளார்.
- உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் புறநானூற்றுச் செய்யுளிலும் இது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. (புறம் 20)
- முல்லைப் பாட்டில் காலத்தை அளவிடும் கருவியான 'கன்னல்' எனும் நாளிகை வட்டில் பற்றி அறிந்திருந்தனர்.
- பொதுவாக சங்க காலத் தமிழர்கள் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே
  - (i) மேடம், இடபம் முதலான பன்னிரண்டு இராசிகளையும்
  - (ii) கோள்கள் திரிந்து வரும் வானமண்டலத்துள் அமைந்திருக்கும் நாண்மீன்களையும்
  - (iii) கோள்நிலை திரிவதாலும், புகைமீன் வீழ்வதாலும் நாண்மீன் ஒவ்வொன்றுடனும் நிலாக்கூடி வருவதாலும் ஏற்படக்கூடிய விளைவுகளையும் அறிந்திருந்தனர்.
- பழந் தமிழர்களில் சிலர், வானத்தில் இராசிதோறும் ஞாயிறு பெயர்ந்து செல்வதையும், அங்கு ஒரு குறிப்பிட்ட வட்டமான வழியிலேயே அது சுற்றி வருவதையும், காற்று இயங்குவதையும் ஆகாயம் நிலைத்து நிற்பதையும் சில 'கணிகள்' இருக்குமிடத்திலிருந்தே கோள்களைத் துல்லியமாகக் கணிக்கும் ஆற்றல் பெற்றிருந்தனர்.
- வானத்தில் மின்னுவன விண்மீன்கள், ஞாயிற்றின் ஒளியைக் கொண்டு மின்னுவன கோள்கள் - இக்கோள்களின் இயக்கங்களைக் கணித்துப் பின்வருவனவற்றை முன்னரே கூறும் ஆற்றல் வாய்ந்தவர் 'கணி' அல்லது 'கணியன்' என அழைக்கப்பட்டனர். கணியர்களின் தலைவன் பெருங்கணியன் எனப்பட்டான். இவை பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களிலுண்டு.

  (உ-ம்) கணியன் பூங்குன்றனார், சோதிடக் கலையில் வல்லுனராக விளங்கினார்.
- பண்டைத் தமிழர், பின்வருமாறு வழங்கியமைக்கு இலக்கியச் சான்றுகளுண்டு.

| | | |
|---|---|---|
| செவ்வண்ணக் கோள் | - | 'செவ்வாய்' |
| பொன்வண்ணக் கோள் (வியாழன்) | - | பொன் |
| வெண்ணிறக்கோள் | - | வெள்ளி |
| நீலவண்ணக்கோள் | - | நீலன்காரி |

- பபிலோனியா, சுமேரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கிடையிலான விரிவான கடல் வணிகத்தில் ஈடுபட்டிருந்த பண்டைத்தமிழர் வடமீன், ஒளிமிக்க கோள்களை வெள்ளி, வியாழன், செவ்வாய் ஆகியவற்றின் வானநிலையைக் கண்டே காலத்தையும் திசையையும் கணித்து மரக்கலம் ஓட்டினர்.

- சங்கமருவிய காலத்தெழுந்ததாகக் கருதப்படும் திருக்குறளிலும் ஏழுநாள் கால அளவாகிய வாரத்தைப் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. (குறள் - 1278)
- பல்லவர் காலத்தவரான திருஞானசம்பந்தர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் ஏழு கிழமைகளின் பெயர்களையும் ஒரு பதிகத்தில் வைத்துப் பாடியுள்ளார்.

(தேவாரம் 2.85.1)

- தமிழரின் ஆண்டானது கதிரவனின் செலவைக் கணக்கிட்டு அறுதியிடப்பட்டது. எனவே ஓராண்டில் பன்னிரண்டு திங்களே கணக்கிடப்பட்டது. பன்னிரண்டு திங்களின் பெயரமைப்பே தமிழரின் வானியலறிவை வியந்து கூற வைக்கின்றன. சூரியன் எந்த ராசியில் எத்தனை நாள் நிற்கிறதோ அத்தனை நாள் அந்த இராசி.

  (உ-ம்) சித்திரை நாண் மீனில் நிலவு முழுமையடையும் திங்களுக்கு சித்திரை என்று பெயர். விசாகத்தில் சந்திரன் முழுமதியாகும் மாதத்துக்கு வைகாசி என்று பெயர்.
- சோழர் காலத்தில் சோதிட விற்பன்னர்கள் அரச சபையை அலங்கரித்திருந்தனர். இராஜராஜ சோழன் தனது பிறந்த நாளை ஆண்டுதோறும் சோதிடங்களின் கணிப் பின்படி தனது ஜென்ம நட்சத்திரத்தில் கொண்டாடியதாக அறிகிறோம்.

- கி.பி. 17 ஆம் நூற்றாண்டளவில் சித்தர்களின் பெயரால் பல்வேறு சோதிட நூல்கள் இயற்றப்பட்டதாக அறிய முடிகிறது. குறிப்பாக சோதிட நூல்களில் நாடிகள் எனும் நூல்கள் பல காணக் கிடக்கின்றன.

  (உ-ம்) கௌசிக நாடி, கௌமார நாடி, சுக்கிர நாடி, காகபுசுண்டர் நாடி, துருவ நாடி, சப்தரிஷி நாடி, நந்தி நாடி, மார்க்கண்ட நாடி என்பன அவற்றுட் சில.

- ஒருவருடைய கைரேகைகளைக் கொண்டோ, அவருடைய சாதகக் குறிப்பைக் கொண்டோ அவரது வாழ்க்கையின் முக்கால நிகழ்ச்சிகளையும் நாடிகள் எடுத்துக் கூறுகின்றன. சாதகனின் பெயர், பெற்றோர் பெயர், பிறந்த ஊர், அவர் பெற்ற கல்வி, செய்யும் தொழில் ஆகியவை பற்றிய குறிப்புகளை இந்நாடி சோதிடம் சில சமயம் தெளிவாகவும் மறைபொருளாகவும் தெரிவிக்கின்றன.

**ஈழத்தில் சோதிடக் கலை:**

- ஈழத்தில் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் சோதிட நூல்கள் பல தோன்றியுள்ளமையை நாம் நோக்கலாம்.
- கி.பி. 1310 இல் தம்பதேனிய அரசன் மூன்றாம் பராக்கிரமபாகு அரசவையில் சரசோதிமாலை எனும் சோதிட நூல் அரங்கேற்றப்பட்டது.
  - இதன் ஆசிரியர் அரசவைப் புலவரான போசராச பண்டிதர் (தேனுவரைப் பெருமாள்).
  - இந்நூல் கால நியதி, அக்கினி, ஆதனம், நெல் விதைத்தல், ஆயுர் வேதம், குணதீதம் முதலிய செய்திகளைக் கூறுகிறது.
  - இந்நூலிலுள்ள மனை செய்யுள் படலம் வீடமைக்கும் முறை பற்றி விபரிக்கிறது.
  - வடமொழிச் சோதிட நூலின் மொழிபெயர்ப்பான இந்நூல், வைத்தியத் துறையுடன் நெருங்கிய தொடர்புடையது.
- செகராசசேகரமாலை எனும் நூல் கி.பி. 1380 ஆம் ஆண்டளவில் நல்லூர் செகராசசேகர மன்னன் ஆதரவுடன் சோமசன்மா என்பவரால் இயற்றப்பட்டது.
  - காசிபர், வசிட்டர், அத்திரிபைலர், கௌதமர், சிறுசீகர் முதலிய முனிவர்களால் சொல்லப்பட்ட வடமொழிச் சோதிட நூல்களின் பொருளை உடையதென இதன் பாயிரவியல் கூறுகிறது.

- கி.பி. 1713 இல் அதாவது ஒல்லாந்தராட்சிக் காலத்தில் அராலி இராமலிங்க முனிவரால் சந்தான தீபிகை எனும் நூல் இயற்றப்பட்டது.
  - இந்நூல் சந்தான விருத்திக்கான சோதிட விடயங்களை மட்டும் கூறுகிறது. (உ-ம்) பஞ்சாயுதம் தரிசித்தல், கர்ணவேதனம், அரைஞாண் தரித்தல்சௌச கருமம், வித்தியாரம்பம் போன்ற பல விடயங்களைக் கூறுகிறது.

- கி.பி. 1929 இல் அம்பலவாணபிள்ளை, இடைக்காடர் என்போரால், வானசேகர சோடச பாவனா சோதிடம் எனும் “இலகு சாதகம்” எனும் நூல் இயற்றப்பட்டது.
  - இந்நூலில் கிரக சாந்திக் கருமங்கள் உள்ளன.
  - திசைகளின் கால அளவை, திரிகோணம், கேந்திரம், விக்கிரகம், சட்ட வர்க்கம், அட்டவர்க்கம், விந்துபாவம் பற்றி விபரிக்கப்பட்டுளது.

- இருபதாம் நூற்றாண்டில் ‘சந்தானமணி’ எனும் சோதிட நூல் சபாபதி சோதிடரால் இயற்றப்பட்டது. சந்தான விருத்திக்கான நல்வழி முறைகளை இந்நூல் கூறுகிறது.
- ‘பரகிதம்’, விதான மாலை, சாதக பாஸ்கரன் ஆகிய பழைய சோதிட நூல்களும் இக்காலப் பகுதியில் மூலமும் உரையுமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

**ஈழத்தில் சோதிடக் கலை:பஞ்சாங்கம்:**

- வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்து முக்கிய உறுப்புக்களை உடையது பஞ்சாங்கம். (பஞ்ச + அங்கம்)
- முதல் பஞ்சாங்கம் குப்தப் பேரரசு காலத்தில், ஆரியப்பட்டரால் வான சாஸ்திர ஆய்வின்படி கோள்களின் நிலை கண்டறிந்து கணிக்கப்பட்டது என்பர்.
- இவருக்குப் பின் வராகமிகிரர் என்பவர் பஞ்சாங்க விடயங்களைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்து சோதிடக் கலைக்கு மிகுந்த பங்களிப்பை நல்கினார்.
- இந்தியாவில் இன்று மூன்று விதமான பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன என்பர்.
  1. வாக்கிய பஞ்சாங்கம் 2. சித்தாந்த பஞ்சாங்கம்
  3. திருக்கணித பஞ்சாங்கம் ஆகியவை.
- பஞ்சாங்கத்தில் தேதிகள் சூரியனுக்குரிய நாட்களை அன்றி திதிகளை அடிப்படையாகக் கொண்டே கணிக்கப்பட்டன.
- முப்பது திதிகள் சந்திர மாதமாகும். இது 29 1/2 சூரிய நாட்களாகும்.
- ஒவ்வொரு மாதமும் பதினைந்து திதிகளைக் கொண்ட இரு பட்சங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
  - அமாவாசையுடன் தொடங்கும் பட்சம் - சுக்கில பட்சம்
  - பௌர்ணமியுடன் தொடங்கும் பட்சம் - கிருஷ்ண பட்சம்
- ஆரம்பத்தில் வட இந்தியாவிலும் தக்கணத்திலும் மாதங்கள் பௌர்ணமியிலே தொடங்கின.
- ஆனால் தமிழ் நாட்டில் பொதுவாக அமாவாசையிலே மாதந் தொடங்கியது. இம் முறையிலான பஞ்சாங்கமே இந்து சமய நோக்கங்களுக்காக இந்தியா எங்கும் இன்றுவரையும் பயன்படுத்தப்படுகிறது.
- சூரியநாளின் எந்நேரத்திலும் திதி தொடங்கலாம். ஆனால் சூரியன் உதயமாகும் பொழுது எத்திதி உளதோ அத்திதியே அன்று முழுவதும் இருக்குமெனக் கொள்ளப்பட்டது.
- சந்திர மாதங்கள் சித்திரையிற் தொடங்கின. சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன அவையாகும்.
- இந்திய ஆண்டின் ஆறு பருவங்களாவன:
  1. வசந்தம் (இளவேனில் - மார்ச் - மே)
  2. கிரீட்மம் (முதுவேனில் - மே - யூலை)
  3. வருஷ (மழைக்காலம் - யூலை - செப்டம்பர்)
  4. சரத் (இலையுதிர்காலம் - செப்டம்பர் - நவம்பர்)
  5. ஹேமந்தம் (மாரி காலம் - நவம்பர் - சனவரி)
  6. சிசிரம் (கூதிர் காலம் - சனவரி - மார்ச்)
- பிரபவ முதல் அசஷய வரை வருஷங்கள் 60 ஆகும்.

- பன்னிரு சந்திர மாதங்களில் 354 நாட்களே உண்டு. இது சூரிய ஆண்டுக்கும் சந்திர ஆண்டுக்கும் உள்ள முரண்பாடு. அறுபத்தியிரண்டு சந்திர மாதங்கள் அறுபது சூரிய மாதங்களுக்குச் சமமென இம்முரண்பாட்டைத் தீர்த்தனர்.
- இந்துப் பஞ்சாங்கத்தின் தேதிகள் மாதம், பட்சம், திதி என்ற வரிசைக் கிரமத்தில் தரப்படும்.
- இந்துப் பஞ்சாங்கம் மிகத் திறமையாக யாக்கப்பட்டதென்பர். எனினும் ஓரளவு சிக்கலான தன்மையும் உள்ளது.
- குப்தர் காலம் முதலே, மேலை நாட்டு வானியலாளர் தந்த சூரிய பஞ்சாங்கத்தை மக்கள் அறிந்திருந்தபோதிலும், அண்மைக்காலம் வரை அவர்கள் பழைய சந்திர சூரிய பஞ்சாங்கத்தையே பயன்படுத்தினர்.

**பஞ்சாங்கங்களின் அங்கங்கள் பற்றிய விளக்கம்:**

| | | |
|---|---|---|
| கிழமை | - | 7 வாரம் -இரவி வாரம், சோம வாரம், மங்கள வாரம், புதன் வாரம்,பிருகஸ்பதி வாரம், சுக்கிர வாரம், சனி வாரம். |
| திதி | - | இது சூரியன் நிற்குமிடத்திலிருந்து சந்திரன் நிற்கும் தூரத்தைக்குறித்து நிற்கும்.பிரதமை முதல் பூரணை வரை-சுக்கிலபட்சம்பிரதமை முதல் அமாவாசை வரை கிருஷ்ணபட்சம் நட்சத்திரம் -அச்சுவினி முதல் ரேவதி ஈறாக 27 ஆகும். |
| யோகம் | - | இது நட்சத்திரங்களைக் கொண்டு கணிக்கப்படும். |
| கரணம் | - | 30 திதிகளுக்கும் 60 கரணங்களைக் குறிப்பிடுவர். 11 கரணங்களுண்டு. |
| அயனங்கள் | - | அயனங்கள் இரு வகைப்படும். அவையாவன:<br>1. உத்தராயனம் (தை முதல் ஆனி வரை)<br>2. தட்சிணாயனம் (ஆடி முதல் மார்கழி வரை) |

## 9.1.5 இந்துக்களின் மருத்துவம்

- இந்துக்களின் மருத்துவம் காலம் காலமாக கட்டியெழுப்பப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட துறையாகும்.
- நோயை அறிதலும், நோய் முதலை அறிதலும், நோயைத் தணித்தலும் நீக்கலும் தடுத்தலும் அது பற்றி ஆய்தலும் மருத்துவத்தின் பாற்படும்.

  இந்துக்களின் மருத்துவக்கலை அறிவு இருக்கு வேதத்தில் இருந்து ஆரம்பமாகின்றது.

  (உ-ம்) - இருக்கு வேதத்தில் உள்ள ‘ஓஷதி சூக்தம்’ - வாதம், பித்தம், கபம் ஆகிய மூன்றையும் ‘திரிதாது’ எனக் குறிப்பிடுகிறது.

  - கண், செவி சார்ந்த குறைபாடுகளை நீக்கும் தேவ மருத்துவர்களாக அஸ்வினி குமார்கள் போற்றப்பட்டனர்.
- சுக்கில யசுர் வேதத்தில் குஷ்டம், இதயநோய், காசநோய், சித்த சுவாதீனம் போன்ற பிணிகளுக்கான குணங்கள், அறிகுறிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இந்த நோய்களைத் தீர்க்கும் மருந்தாக மந்திர உச்சாடனங்களே பயன்படுத்தப்பட்டன.

- இந்து மருத்துவ வரலாற்றில் அதர்வண வேதம் குறிப்பிடத்தக்கது. இதில் வரும் பேஷ ஜானி சூக்தம், ஆயுஷ்யானி சூக்தம் பகுதிகளில் மருத்துவ சிந்தனைகள் அதிகமாக உள்ளன.
  - சூரியனின் அகஞ் சிவப்புக் கதிர்களுக்கு மஞ்சட் காமாலை நோயைக் குணப் படுத்தும் சக்தி (ஆற்றல்) உண்டென்பதை அதர்வண வேதம் அன்றே குறிப்பிட் டுள்ளது.

    (உ-ம்)'இவன் நோய் நீங்கி மஞ்சளாகாமலிருக்க... காமாலையும் நீங்குக' என்னும் வரிகள்.
  - கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய அதர்வண வேதத்தின் 2ஆம் காண்டம் - 66 ஆம், 67 ஆம் சூக்தங்களில், 'கிருமிநாசம்' என்ற பகுதியில் நோய்க் கிருமிகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
  - அதர்வண வேதத்தில், மனித உடற் கூற்றியல், குருதிச் சுற்றோட்டம் என்பன தொடர்பான துல்லியமான சில சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன. (உ-ம்)நாடிகளில் பாய்கின்ற சிவப்பு நிறமான குருதி, 'அருணா' எனவும், நாளங்கள் தாங்கி வரும் கரும் சிவப்புக் குருதியை 'லோஹினி எனவும் அழைத்தனர்.
  - அதர்வண வேதத்தில் பல்வகை ஔடதங்கள் பற்றிய கருத்துக்கள் உள்ளன. (உ-ம்) - குஷ்ட ரோகத்தை நிவர்த்தி செய்யும் இரஜனீ என்ற மருந்து.
  - கபால வியாதிகளைச் சீர்செய்யவல்ல கர்ண சூலம் என்ற மருந்து.
  - விஷ முறிவை ஏற்படுத்தும் அபஸ்கம்பம் என்னும் மூலிகையானது, வெண்குஷ்டத்தைப் போக்கும் சக்தி வாய்ந்தது.
- இந்துக்களின் மருத்துவ அறிவின் வளர்ச்சிப்போக்கு கி.மு. 1500-500 வரையில் மேலும் வளர்ச்சி பெற வலுச் சேர்ந்தவர்களில் ஆத்திரேயர், தன்வந்திரி, சரகர், சுஸ்ருதர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### (அ) ஆத்திரேயர்

- ஆத்திரேயர் ஆயுர்வேத நூலொன்றை இயற்றினார்.

### (ஆ) தன்வந்திரி

- இந்திய மருத்துவத்தின் தந்தை என இவர் போற்றப்படுகிறார்.
- இவர் ஆயுர் வேதத்தை வழங்கியவர். ஆயுர் வேதத்தை அஷ்டாங்கம் எனப்படும் எட்டுப் பிரிவுகளாக வகுத்தவரும் இவரே.

### (இ) சரகர்

- ஆத்திரேயரின் சீடர்களில் ஒருவரான அக்கினிவேசரின் நூலைத்தழுவி, இவர் தனது நூலை எழுதினார்.
- சரக சம்ஹிதை 8 பிரிவுகளையும் 120 அத்தியாயங்களையும் உடையது.

**(இ) சரகர்**

- ஆத்திரேயரின் சீடர்களில் ஒருவரான அக்கினிவேசரின் நூலைத்தழுவி, இவர் தனது நூலை எழுதினார்.
- சரக சம்ஹிதை 8 பிரிவுகளையும் 120 அத்தியாயங்களையும் உடையது.
  - இந்நூலில் இரத்தோட்டம், அதன் செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
  - இரத்தம் உடலில் சுற்றி வருதல், அது உடம்பின் ஒவ்வொரு உறுப்பிற்கும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லல், கழிவுப்பொருட்களை எடுத்துச் செல்லல், இதனை முறையாகச் செயற்படுத்துவதில் இதயத்தின் பங்களிப்பு முதலான பல்வேறு விடயங்கள் சரக சம்ஹிதையில் உண்டு.
- சரகர் எழுதிய மருத்துவநூல் சரகசம்ஹிதை ஆகும். இதில் பல்வேறு நோய்களின் விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.
- 149 வகை நோய்கள், அவை வருவதற்கான காரணங்கள், அதன் அறிகுறிகள், சிகிச்சை முறைகள் என்பனவும் அதில் கூறப்பட்டுள்ளன.
- முக்கியமான 13 இரத்தக்குழாய்கள், அதனைக் கட்டுப்படுத்தும் மையங்கள், இரத்த ஓட்டத்தில் தடை ஏற்பட்டால் உருவாகும் நோய்கள் என்பனவும் சரக சம்ஹிதையில் விளக்கப்பட்டுள்ளன.
- மேற்கூறிய விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சிகள், மேல்நாட்டில் 1628 இன் பின்னர் தான் ஆரம்பமானது. ஆனால் சரகர் இதனை முன்கூட்டியே கூறியமை வியப்பை அளிக்கின்றது.
- வைத்தியத்தொழில் பயிற்சி முடிந்த பின் நிகழ்த்தும் சமய விழாவின்போது, வைத்திய மாணவர்கள் பின்பற்ற வேண்டிய அறிவுரைகளை சரசர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

  ... நோயாளியின் வீட்டுக்குச் செல்லும்போது உன் பேச்சும், உள்ளமும்
  அறிவும் புலன்களும் வேறு எங்கும் செல்லாது, நோயாளியையும்
  அவருக்கு வேண்டிய வைத்திய முறையையும் நோக்கி நிற்றல் வேண்டும்...“

  இதில் வைத்திய மாணவர்களுக்கு வேண்டிய புலனடக்கம், உளவியல் நோக்கு என்பனவற்றை வற்புறுத்தியுள்ளார்.

**(ஈ) சுஸ்ருதர்**

- இவர் இந்திய அறுவைச் சிகிச்சையின் தந்தை எனப் போற்றப்படுபவர்.
- வேதங்களில் அதீத மந்திர சக்திகளுடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்ட அறுவை மருத்துவம் இவரது சுஸ்ருத சம்ஹிதையில் விஞ்ஞான ரீதியில் விளக்கப்பட்டுள்ளன.
- சுஸ்ருதரின் - சுஸ்ருத சம்ஹிதையில் அறுவை, மருத்துவம், மருந்துகள், காது, மூக்கு, தொண்டை, கண்நோய், விஷமுறிவு, மனநலம் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளன.

- இந்நூல் பூர்வதந்திரம், உத்தரதந்திரம் எனும் இரு பிரிவுகளை உடையது.
- பூர்வ தந்திரம் அறுவை மருத்துவம், நோய்க்காரணம், அறிகுறி, கரு வளர்ச்சி, உடற்கூறு, நாடிநரம்பு, மருத்துவம், விஷம் முறிக்கும் முறைகள் என்பன பற்றிக் கூறுகின்றது.
- உத்தர தந்திரம் அறுவையின்போது உருவாகும் ஜுரம், பேதி, இருமல், விக்கல், கிருமிகளின் பாதிப்பு என்பனவற்றை ஆராய்ந்து கூறுகின்றது.
- அறுவைச் சிகிச்சைக்கு உடற்கூறு பற்றிய நூலறிவை விட, நேரடியான செயல்பாடு தேவை என்றும் அதற்கு இறந்தவரின் உடலை அறுத்து ஒவ்வொரு உறுப்புகள் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும் என சுஸ்ருதர் கூறியிருப்பது, இன்றைய அறுவை நிபுணர்களின் குரு அவரே என்பதை உறுதிப் படுத்துகிறது.
- அறுவைச் சிகிச்சைக்கு உட்படுபவரின் உணர்வினை மறக்கச் செய்ய அவர் மதுவைப் பயன்படுத்துமாறும் குறிப்பிட்டிருந்தது, 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்து மருத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.
- போரிலிழந்த அல்லது காயப்பட்ட அல்லது சட்டமுறையால் வெட்டப்பட்ட மூக்கு, காது, உதடு என்பவற்றை மீண்டும் அமைத்துத் திருத்துவதில் பண்டைய இந்திய சத்திர சிகிச்சை வைத்தியர்கள் வல்லுனராக இருந்தனர்.

- இந்திய இந்து மருத்துவத் துறையில் இதிகாசங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. (உ-ம்)
  - இராமாயணத்தில் இராம லட்சுமணர்கள் இந்திரஜித்தின் பிரம்மாஸ்திரத்தால் மயங்கி இருந்தபோது அவர்களைக் காக்க, ஆஞ்சநேயர்சஞ்சீவி மலையை எடுத்து வந்தமை.
  - வான்மீகி இராமாயணத்தில் சஞ்சீவி மலையில் இருந்த மூலிகைகளின் வகைகள், அவை குணப்படுத்தும் நோய்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.
    1. ம்ருத் சஞ்சீவினி - இறந்தவரைப் பிழைக்க வைக்கும் தன்மை கொண்டது.
    2. விசல்ய கரணி - உடலில் தைத்த அம்புகளைப் பிடுங்கிவிட்டு, இந்த மூலிகையைப் பயன்படுத்தினால் காயத்தின் வடு கூடத் தெரியாமல் குணப்படுத்தும் தன்மை கொண்டது.
    3. ஸந்தான கரணி - எலும்பு முறிவு, கிழிந்து போன சதை என்பவற்றைக் குணப்படுத்தும்.
    4. ஸாவர்ணய கரணி - தீக்காயத்தினால் எரிந்துபோன தோலைக் குணப்படுத்தி, முன்பு இருந்தது போலச் செய்யும்.

## தமிழக வரலாற்றில் இந்து மருத்துவம்

- சங்க நூல்களில் பதிற்றுப்பத்து, பாலைக்கலி என்பவற்றுடன் நற்றங்கொற்றனார் பாடிய அகப் பாடலிலும் மருத்துவனின் இயல்பு, அறுவைச் சிகிச்சை முறை என்பன கூறப்பட்டுள்ளன.

  (உ-ம்) மீன்றோர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச் சிரல் பெயர் தன்ன...”

  (பதிற்றுப்பற்று 42:2-6)

- சங்க மருவிய கால நூல்களில் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் முதலானவை அரிய மருத்துவ சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.
  - திருக்குறளில் பொருட்பால் இரண்டாம் பகுதி 95 ஆம் அதிகாரம் ‘மருந்து’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. அதில் மருத்துவ விளக்கமும் தரப்பட்டுள்ளது.

    (உ-ம்) “ நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
    வாய்நாடி வாய்ப்பச் செயல்” (948)

  என்னும் திருக்குறள் நோயைக் கண்டறியும் முறையைக் குறிப்பிடுகிறது.
- கி.பி. 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா வந்த பாகியன், கடவுள் பற்றுடைய மக்கள் வழங்கிய நன்கொடையால் பேணப்பட்டு வந்த மருத்துவ நிலையங்களை சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.
- பல்லவர் கால இந்து மருத்துவ பாரம்பரியங்களை, அக்கால கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் என்பன எடுத்துக் கூறுகின்றன.
  - பல்லவ கால அரசர்கள் மருத்துவர்களுக்கு மானியமாக வழங்கிய நிலம் ‘மருத்துவப்பேறு’ என கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
  - மருத்துவ மூலிகை பயிரிடுவோர் அரச வரி செலுத்தினர் என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.
- பல்லவர் காலத்தில் வெப்புநோய் தீர்த்தமை, விஷமுறிவு செய்தமை என்பன அற்புதம், இறையருள் என்பவற்றுடன் இந்திய மருத்துவ முறைகளையும் வெளிக்கொணர்கிறது.
- சோழர் காலத்தில் மன்னர்கள், மருத்துவர்களைப் பேணியதுடன் மருத்துவமனைகளை அமைத்து மானியங்களும் வழங்கி நிர்வகித்தனர். இதனை செங்கல்பட்டு முக்கூடலில் உள்ள விஷ்ணு கோயில் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது.
- குந்தவைப் பிராட்டியார் தனது தந்தை சுந்தரசோழன் நினைவாக தஞ்சையில் ஒரு மருந்தகத்தை அமைத்தார். அவ்வாறே திருவரங்கத்தில் இருந்த மருத்துவமனை பற்றி அங்குள்ள கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிய முடிகிறது.
- சில கோயில்களை அடுத்து மருத்துவமனைகள் இருந்தன. அவற்றில் இருவகை மருத்துவர் இருந்தனர்.
  - ஒருவர் கைநாடி பார்த்து மருந்து கொடுப்பவர் (Physician)
  - மற்றொருவர் கட்டி முதலியவற்றை அறுத்து, புண்களை ஆறவைப்பவர். அவர் ‘சல்லியக் கிரியை பண்ணுவான் (Surgeon) எனப்பட்டார்.
  - ஒவ்வொரு மருத்துவமனையிலும் வேர்களையும் பச்சிலைகளையும் கொண்டு வருவோர், அவற்றை மருந்தாக்குவோர், நோயாளிகளைக் கவனிக்கும் தாதிமார் என்போர் இருந்தனர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- சோழர் காலப் பேரிலக்கியங்களான சிந்தாமணி, கம்பராமாயணம் முதலிய நூல்களிலும் மருந்துகளைப் பற்றியும் மருத்துவர்களைப் பற்றியும் சில விபரங்கள் காணப்படுகின்றன.

- வேர்களையும் பச்சிலைகளையும் பயன்படுத்தும் முறை தமிழர்களுக்கே உரிய சித்த மருத்துவ முறையாகும்.
- இதில் சித்தர்கள் கைதேர்ந்தவர்கள். இவர்கள் வெறுமனே வைத்தியம், மருந்துகள் பற்றி எழுதவில்லை. ஆராய்ந்து, அனுபவ மூலம் கண்டவற்றையே தந்தனர். அத்தோடு அவர்கள் மெய்ஞ்ஞானிகளாகவும் விளங்கினர்.
  - இதயத்துடிப்பை அறிய இன்றைய ஆங்கில வைத்தியர் பயன்படுத்தும் சாதனம் அன்று தேவைப்படவில்லை. நாடி பிடித்துப் பார்த்தே அதனை அவர்கள் அறிந்தனர்.'நாடிக்கவி' யின் முதற் செய்யுள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.
- சித்த மருத்துவத் துறையில் வந்த நோய்களைத் தீர்ப்பதுடன், நோயே வராது தடுக்கும் முறைகளும் நரை, திரை, மூப்பு, பிணி, பயம், சாக்காடு என்பவற்றை வென்று, உடலையும் உயிரையும் அழியாது நிலைநிறுத்தி, அட்டமா சித்திகளையும் பெறும் வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன.
- இந்திய மருத்துவத்தில் நாள், கோள் பார்த்து வைத்தியம் செய்வது முக்கியமானது.
- பிற்காலத்தில் நாவிதரும் அறுவை வேலையில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் மருத்துவர் எனப்பட்டனர். பிள்ளைப் பேற்றுத் துறையில் நாவிதர் மனைவிமார் ஈடுபட்டிருந்தனர். நாவிதன் மனைவி மருத்துவிச்சி எனப்பட்டாள்.
- விஜயநகர நாயக்கர் காலத்தில் இந்து மருத்துவப் பாரம்பரியம் தனித்துவமான வளர்ச்சியைப் பெற்றிருந்தது.

  (உ-ம்) ஸ்ரீரங்கம் கோயிலில் புகழ்பெற்ற மருத்துவமனை ஒன்று நிறுவப்பட் டிருந்தது.
- இக்காலத்தில் ஆதீனங்கள் ஊடாகவும் மருத்துவ சேவைகள் பரப்பப்பட்டன.
- 18 ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்தியக் கம்பனியின் சத்திர வைத்தியர் இந்தியாவிடமிருந்து, இந்திய சத்திர வைத்தியம் என்னும் சிறப்பான வைத்திய முறையை விரும்பிக் கற்றனர்.

## இந்து வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவச் சிந்தனைகள்

- பிள்ளையார் வழிபாட்டில் தோப்புரக்கரணம் போடுதல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல் என்பன மிக முக்கியமான வழிபாட்டு முறைகளாகும்.
- இவ்வழிபாட்டு முறைகளில் யோகாசன மருத்துவம் உள்ளடங்கியுள்ளது. அவ்வாறே நெற்றிப்பொட்டின் இருபக்கமும் குட்டிக் கும்பிடுவதால் அங்குள்ள நரம்பு மையங்கள் தூண்டப்பட்டு நினைவாற்றல் அதிகரிக்கும் என்ற முன்னோரின் சிந்தனைகள் இன்றைய அறவியலுடன் ஒத்துப் போவதையும் காணலாம்.
- அவ்வாறே தோப்புக்கரண, அட்டாங்க, பஞ்சாங்க வழிபாடுகளினாலும், தலயாத்திரை செய்வதனாலும், கிரிவலம் செல்வதாலும், தெய்வங்கள் வீற்றிருந்து அருள்புரியும் மலைகளுக்கு ஏறிச் செல்வதாலும் ஒருவரின் உடலிலுள்ள நாரி, இடுப்பு, முழங்கால் தசைகள் நன்கு பலமடைகின்றன. அதனால் இரத்தச் சுரப்பிகளில் உள்ள அடைப்புக் கள் நீக்கப்பட்டு, குருதிச் சுற்றோட்டம் ஒழுங்கமைக்கப்படுகிறது.

- மேலும் நீரிழிவு நோய், வாதநோய் முதலியன குணமாகும் வாய்ப்பும் உள்ளது. இந்து வழிபாட்டு முறையில் பயன்படும் பத்திரங்கள் யாவும் (அறுகு, துளசி, வில்வம் முதலானவை) மருத்துவக் குணங்கள் நிறைந்தனவாகும்.
- ஆங்கில மருத்துவத்தால் தீர்க்க முடியாத பலநோய்களை இந்து சமயம் கண்ட யோகாசன முறைகள், பிரணாயாமம், சூரிய நமஸ்காரம் முதலியன தீர்த்து வருகின்றன.
- இந்து விரத நியமங்கள் ஆன்மீக நோக்குடையவை மட்டுமன்றி, உடல் நலம் காக்கும் செயற்பாடுகளுமாகும். இதனை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
- சமயச் சின்னங்கள் அணிவதன் மூலம் உடல் வியாதிகளை அகற்றலாம் எனப்படுகிறது.
  - திருநீற்றின் மகத்துவம் முன்னரே அறியப்பட்டுள்ளது.
  - உடம்பில் நாடி, நரம்புகள் சந்திக்கும் நெற்றிப்பொட்டில் குங்குமம் அணிவதால் அதிலுள்ள மஞ்சளின் சக்தி உடம்பில் ஊடுருவி, உடம்பில் விஷ பாதிப்புகள் ஏற்பட்டிருப்பின் அதனை நீக்கி விடுகிறது.

## இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம்

- இந்து மருத்துவ முறைகள் எந்நாட்டவர்களுக்கும் ஏற்புடையது. சிறப்பாக இந்திய நாட்டு வெப்ப, தட்ப நிலை, உணவு வகை, தொழில் நிலை, உடல்வாகு என்பவற்றுக்கு ஏற்றதாக உள்ளது.
- இந்து மருத்துவத்தில் சேரும் மூலப்பொருள் யாவும் தாவரங்கள், உப்புகள், உபரசங்கள், உலோகங்கள் முதலானவற்றில் இருந்து உள்நாட்டிலே கிடைப்பதால் நம்பிக்கையுடன் பயன்படுத்த முடிகிறது.
- இவற்றில் எவ்வித பக்க விளைவுகளும் இல்லை. ஆனால் ஆங்கில மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன.
- மேல்நாட்டு மருத்துவ முறைகளுக்கு ஆதார சுருதியாக விளங்கி இருப்பவை இந்திய மருத்துவமாகும்.
- இந்து வழிபாட்டு முறைகளில் எல்லாம், முன்னோரின் அறிவியல் என்று தெரிந்தோ தெரியாமலோ, பல முறைகளை விரத வழிபாடு, யோக வழிபாடுகள் மூலம் அறிமுகம் செய்துள்ளனர்.
- இந்து மருத்துவத்தில் மருந்துகளுடன் யோகாசனம், தியானம், விரதங்கள் என்பனவும் நோய்கள் ஏற்படாது காக்கின்றன.
- விபூதி அணிதல் சமய நெறிமுறையாகும். அதேவேளை குளித்த பின் அதனை அணிவதால் உடலில் உள்ள ஈரத்தன்மை உலர்த்தப்படுகிறது.
- விபூதியை உடலின் 16 இடங்களில் தரிக்க வேண்டும் என சைவம் வலியுறுத்து கின்றது. இந்த 16 இடங்களும் இன்றுள்ள அக்குபங்சர் வைத்திய முறையில் உடலில் இனங்காணப்பட்ட இடங்களாகக் கூறப்படுவதும் இந்துக்களின் புராதன மருத்துவ அறிவிற்குத் தக்க சான்றாகும்.

**கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:**

**படி** I: இந்து அறிவியல் தொடர்பாக தாம் அறிந்த விடயங்களை மாணவர் கூறுவதற்கு இடமளியுங்கள்.

**படி** II: இந்து அறிவியலில் உள்ளடங்கும் விடயங்கள் ஒவ்வொன்றையும் பற்றி (பாடத்திட்டத்தில் உள்ளவை) கூறுவதற்கும், அவை தொடர்பான நூல்கள், ஏட்டுச் சுவடிகள், படங்கள் என்பவற்றைத் தேடிக் கொள்வதற்கும் வழி காட்டுங்கள்.

**படி** III: மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரித்து, பின்வரும் தலைப்புகளை வழங்குங்கள்.

குழு - 1 இந்து கணிதவியல்

குழு - 2 இந்து வானியல்

குழு - 3 இந்து சோதிடவியல்

குழு - 4 இந்துக்களின் மருத்துவம்

குழு - 5 நாட்டார் அறிவியல்

**படி** IV: ஒவ்வொரு குழுவும் தமது தலைப்புத் தொடர்பான தகவல்களையும், நூல்கள், ஏட்டுச் சுவடிகள், படங்கள், மூலிகைகள், ஏனைய சான்றுகள் முதலானவற்றைச் சேகரிக்க கால அவகாசம் வழங்குங்கள்.

**படி** V: குறிப்பிட்ட நாளில் 5 குழுக்களும் பொருட்காட்சியில் பங்கு பற்றி, தமது தலைப்புத் தொடர்பாகவும் தாம் சேகரித்தவை தொடர்பாகவும் பார்வையாளர்களுக்கு விளக்கமளிக்கச் செய்யுங்கள்.

## உசாத்துணைகள்: (தமிழ் நூல்கள்)

(1) சம்பத்குமார். வி. எஸ் - அறிவியலின் வரலாறு, மனோன்மணியம்சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி,1997.

(2) ஸ்ரீ நிவாஸ் சாது. சு - உபநிஷத்துக்களின் விஞ்ஞான ரகசியங்கள்,ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1994.

(3) கோபாலகிருஷ்ணஐயர். ப - இந்து அறிவியல் வளர்ச்சியில் வானியலும் சோதிடமும் சில சிந்தனைகள், இந்துநெறி, யாழ். பல்கலைக்கழக வெள்ளிவிழா சிறப்பு மலர், இந்துமன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 1999.

(4) பசாம். ஏ. எல் - வியத்தகு இந்தியா

(5) சிதம்பரனார். சாமி - சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை, 2001.

(6) சம்பங்கி, பி - சித்த மருத்துவமும் தெய்வவழிபாடும்,பாலாஜி பிரதர்ஸ் பதிப்பகம், கும்பகோணம்,2003.

(7) திருஞானம். க - திருக்கோயில் மரங்களின் மருத்துவப்பயன்கள்,செல்வி பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 1998.

(8) சித்தரியல் ஆய்வுமாலை, (தொகுதி - 1, 2) - சித்தரியல் ஆய்வு மாநாடு, பேரூராதீனம், கோவை, 2005.

(9) சுப்புரெட்டியார். ந - அறிவியல் நோக்கில் இலக்கியம், சமயம்,தத்துவம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை,2001.

(10) சந்திரா. எஸ் - அறிவியல் முன்னோடிகள், விசு பதிப்பகம்,சென்னை, 1990.

(11) சற்குணதாஸ். சாமி - புராதன இந்தியாவின் அறிவியல் மேதைகள்,தமிழ்க்கடல் பதிப்பகம், சென்னை, 1988.

(12) சுப்பிரமணியம். மே. சீ - சித்தர்களின் இரசவாதக்கலை, தாமரை நூலகம்,சென்னை, 1985

(13) ஞானப்பிரகாசம். வி. மி - தமிழில் அறிவியல் கருத்துக்கள், பாரி நிலையம்,

(14) முகுந்தன். ச - இந்துக் கணித வானியல் மரபு (2011 குருஷேத்திரா வெளியீடு, மட்டக்களப்பு.

(24) சிவசண்முகராசா. சே - இந்து விரதங்களும் உடல்நலமும், சித்தமருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம், 2007.

(25) சிவசண்முகராசா. சே - மருத்துவமும் சோதிடமும் (தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம்), சித்த மருத்துவ வளர்ச்சிக்கழகம், யாழ்ப்பாணம், 2006.

(26) கணேசன். பி. சி - தெய்வ சக்தியும் மனித முயற்சியும், வானதிபதிப்பகம், சென்னை, 1999.

(27) யோகம் பயிற்சிக் கையேடு - விவேகானந்த கேந்திர வெளியீடு, சென்னை, 2000.

(28) டாக்டர் சு. சக்திவேல் - நாட்டுப்புற இயல்ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 1983.

(29) பவுன்துரை, இராசு - தமிழகக் கோயிற் கட்டடக்கலை மரபு மயன் அறிவியல் தொழில்நுட்பம், மெய்யப்பன்பதிப்பகம், சிதம்பரம், 2004.

(30) மகாலட்சுமி. தி - சோதிடவியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை, 1996.

(31) இராமசாமி. எம். பி.எம் - (பதிப்) சிற்பரத்நாகரம், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1998.

(32) சிவசண்முகராஜா. சே - மருத்துவ நோக்கில் மரணக்கிரியைகள் (தமிழர் வாழ்வில் சித்த மருத்துவம்) சித்த மருத்துவ வளர்ச்சிக் கழகம், யாழ்ப்பாணம், 2009.

(33) சௌரிராஜன். மு - நாடிவாகடம், தஞ்சை சரசுவதிமகால் நூலகம்,2000.

**(ஆங்கில நூல்கள்)**

(1) Chattopadhyaya. C.(ed) - Studies the history or Science of India (Vol. I), Editoriac enter prises New Delhi, 1982.

(2) Jaggi. O. P - History of Science, Technology and Medicine in India (Vol. II. Science in ancient India), Atma Ram & Sons,Delhi, 1986.

(3) Jaggi. O. P - History of Science, Technology and Medicine in India(Vol.1.Indian astronomy and Mathematics) Atma &Ram Sons, Delhi, 1987.

(4) Sela. B. N - Positive Science of the ancient Hindus, London, 1915.

**தேர்ச்சி 10.0:** இலங்கையில் இந்துசமய வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்களிப்பினை ஆராய்ந்து வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 10.1 :** இலங்கையில் இந்துசமய வளர்ச்சியில் ஊடகங்களின் பணியினை அறிந்து எடுத்துரைப்பார்.

**பாடவேளைகள் :** 10

**கற்றற் பேறுகள் :**

- ஊடகம் என்பதற்கான விளக்கத்தையும் உதாரணங்களையும் கூறுவார்.
- ஊடக வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் அவை இந்து சமய

  வளர்ச்சியில் செய்துள்ள பங்களிப்புகளையும் வெளிப்படுத்துவார்.
- சமகாலத் தொடர்பாடல்கள் இந்து சமயத்தில் பெற்றுள்ள இடத்தை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைப்பார்.
- இலங்கையில் இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்புகளை கால அடிப்படையில் ஒழுங்குபடுத்திக் கூறுவார்.

**விடய உள்ளடக்க வழிகாட்டி : ஊடகம் - அறிமுகம்**

- இரு தசாப்தங்களுக்கு முன்பிருந்த உலகமல்ல இன்றைய உலகம். மிக மிக மாறுதல் பெற்று விட்ட யுகம் ஒன்றினுள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.
- உலகம் இன்று சுருங்கிவிட்டது. இவ்வாறு உலகம் முழுவதையும் ஒரு கிராமமாக மாற்றிய தனித்துவத்தன்மை தகவற் புரட்சிக்கே உரியது.
- அதற்கு நாம் ஈடுகொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இந்த தகவல் யுகத்துள் எமது பாரம்பரிய மத உணர்வுகள், இறை வழிபாட்டு முறைமைகள், தலங்கள், சமய தாற்பரியங்கள் முதலானவை உள்வாங்கப்பட வேண்டும்.
- கல்வெட்டுக்களிலும், நூல்களிலும், அகழ்வாய்வுச் சின்னங்களிலும் வெளிப்படும் இந்து சமயத்தின் தொன்மை எல்லோர் கரங்களுக்கும் செல்ல வேண்டும்.
- இந்து மதக் கோட்பாடுகள் சரியான வடிவில், சரியான வழியில் மக்களைச் சென்றடைய வேண்டும்.
- இதனை எடுத்துச் செல்லும் தகவல் தொடர்புச் சாதனங்கள் அல்லது ஊடகம் பற்றிய அறிவும், விளக்கமும் அவசியம்.
- அதனை அறிந்து இந்து சமயத்தை வளர்த்துச் செல்லும் முயற்சியில் ஈடுபடுதல் அவசியம்.

### 10.1.1 ஊடகம் அல்லது தகவல் தொடர்பு என்பதன் விளக்கம்

- ஊடகம் என்பது மக்களுக்குத் தகவல்கள், செய்திகள் போன்றவற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்களைக் குறிக்கும்.
  உ-ம்: நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி, இணையம்
- மனிதன் கிணற்றுத் தவளையாக வாழ நினைக்காது பரந்த அறிவு பெற்றவனாக உலகத்துடன் ஒத்தியங்கக்கூடியவனாக வாழவேண்டும். ஆதலால் தகவல் துறை அல்லது ஊடகத்துறை மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக உள்ளது.

## 10.1.2 ஊடக வகையும் அவற்றின் தொழிற்பாடுகளும்

### ஊடக வகைகள்

**(அ) மரபு வழிச்சாதனங்கள்**

- ஓலைச் சுவடிகள், அழைப்பு ஓலைகள்
- நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற நம்பிக்கைகள், கதைப்பாடல்கள்
- பக்திப் பாடல்கள், தேவாரப் பாடல்கள்
- முரசறைதல் மூலம் (பிரசித்தம்) அறிவித்தல்

**(ஆ) சொல்வழித் தொடர்பு**

(i) பொதுக்கூட்டம்
(ii) பொது விவாதம்
(iii) பிரசங்கம்
(iv) மகாநாடுகள்

**(இ) வெளிப்புறச் சாதனங்கள்**

(i) விளம்பரப் பலகை
(ii) அறிவிப்புப் பலகை
(iii) சித்திரங்கள், சிற்பங்கள்

(ஈ) அச்சுக் கலை (அச்சியந்திரப் பயன்பாடு)

(உ) தொலைபேசி

(ஊ) திரைப்படம்

(எ) வானொலி

(ஏ) தொலைக்காட்சி

**(ஐ) தகவல் தொழில் நுட்பம்**

(i) இணையம் (Inter net)
(ii) இறுவெட்டு (CD)
(iii) ஒலிநாடா (Audio)
(iv) ஒளிநாடா (Vedio)
(v) இலத்திரனியல் அஞ்சல் (E.mail)

(உ-ம்) ஊடக வகையுள் அச்சுக்கலையும் அதன் தொழிற்பாடுகளும்

(i) பத்திரிகைகள்
1. தினசரி- காலை, மாலை
2. பருவ இதழ்கள் -வாரம், மாதம், மாதம் இருமுறை, காலாண்டு, ஆண்டு

(ii) துண்டுப்பிரசுரங்கள் : விஞ்ஞாபனம்
(iii) நாட்காட்டி
(iv) சஞ்சிகைகள்
(v) பஞ்சாங்கங்கள் (சோதிடக்கலை)
(vi) ஆராய்ச்சி வெளியீடுகள்

- ஊடகங்களில் அல்லது தகவல் தொலைத்தொடர்புச் சாதனங்களில் பொருள் மரபாக அமையும் இந்து சமயக் கருத்துகள் : இந்து சமய நெறிமுறைகள், வழிபாட்டு மரபுகள், தத்துவ சிந்தனைகள்

  உ-ம்: (i) புராணக் கதைகள்
  (ii) இதிகாசக் கதைகள்
  (iii) சமய சம்பந்தமான கதைப்பாடல்கள்
  (iv) சமய இலக்கிய வடிவங்கள் - பிரபந்தங்கள்
  (v) விழாக்கள், விரதங்கள்
  (vi) பண்டிகைகள், சடங்குகள்
  (vii) நாட்டார் கதைகள், நாட்டார் இலக்கியங்கள்
  (viii) நாயன்மார், அடியார் வரலாறுகள்
  (ix) கோயில் வரலாறு, சிற்ப நாட்டியங்கள், ஓவியங்கள்,கட்டடங்கள்
  (x) இசைப்பாடல்கள் - பண், துதி

  முதலானவை சமுதாயத்தில் செல்வாக்கு பெறவும் வாய்ப்பு உண்டாகும். இவற்றோடு சமய அறிஞர்களின் பேட்டிகள், சமய அறிஞர் பேச்சுக்கள் என்பனவும் சமயக்கல்வி தொடர்பான விடயங்களாக அமைகின்றன.

## சமகாலத் தொடர்பாடல்களும் இந்துசமயமும்

- ஒவ்வொரு காலப் பகுதிகளிலும் வெவ்வேறு ஊடகங்களினால் இந்துப் பண்பாடு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.
- மரபுவழி ஊடகங்களினாலும் அறிவைப் பயன்படுத்தப்படும் சிந்தனை வளர்ச்சியாலும், கருத்துப் பரிமாற்றங்களாலும் இம்முறைகள் முதன்மை பெற்று வருகின்றன.
- பதிகம் பாடல், கதை கூறல், வாதங்கள், பிரசாரம், பிரசங்கம் என்பன ஆன்றோர் கருத்துக்களை ஜனநாயக ரீதியாக வளர்ப்பதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.
  உ-ம்: ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பிரசங்கங்கள்
- பக்தி ததும்பும் பாடல்களை இறுவெட்டுக்கள், ஒலி ஒளிநாடாக்கள் என்பவற்றின் மூலம் இந்து இல்லங்கள் தோறும் ஒலிக்கவிடுவதன் ஊடாக ஒருவரின் பண்பாட்டை மற்றொருவர் அறியக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.
- பஞ்சாங்கங்கள் இந்து மக்கள் நாள், கோள், சுபநேரங்களை அறிந்து செயற்பட வழிகாட்டுகின்றன.
  உ-ம்: கிரகண காலங்கள், விரதகாலச் செயற்பாடுகள்
- ஆலய பரிபாலனம், ஆலய சேவைகள், சமூக சேவைகள் என்பன தொடர்பான வலையமைப்புகள் பண்பாட்டு வளர்ச்சிக்கு மேலும் உதவுகின்றன.
- தொழில்நுட்ப ஊடகங்களினால் மத ஈடுபாடு அதிகரிக்கும். சமய அபிமானம் ஒவ்வொருவரிடமும் விருத்தியடையும்.
- இளைஞர்கள் சமய, தத்துவக் கதைகளை நாடகங்கள் மூலம் அறிவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதனால் தமது மதத்தில் நம்பிக்கை வளர வாய்ப்பு ஏற்படும்.
- வாராந்த பத்திரிகைகளில் சமய சம்பந்தமான பல விடயங்கள் வெளியிடப்படுகின்றன.

  உ-ம் : கும்பாபிஷேகம், திருவிழா

- அயல் நாடுகளின் இந்துப் பண்பாட்டு வரலாற்று அம்சங்களை அறிய ஊடக தொடர்புகள் பெரிதும் உதவும்.
  உ-ம்: மலேசியாவில் நிகழும் தைப்பூசம். அது தொடர்பான படங்கள்.
- ஆலய திருவிழாக்களில் இடம்பெறும் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், வில்லிசை, விவாதங்கள், புராணபடனமுறை, நாடகங்கள் என்பன மின் ஊடகங்களினூடாக சேமிக்கப்பட்டு பொதுமக்களிடையே பரப்பப்படுகின்றன.
- ஆலய திருவிழாக்களின்போது ஒலிபரப்பும், ஒளிபரப்பும் புராண இதிகாசம் தழுவிய நாடகங்கள் ஆலய விழாக்களை நேரடியாகத் தரிசிக்காதவர்களுக்கு ஊடகங்கள் அவற்றைப் பதிவுசெய்து விருந்தாக அளிக்கின்றன.
- தொலைக்காட்சி ஊடகங்கள் புராண, இதிகாசக் கதைகளை நாடகங்களாகத் தயாரித்து, ஒளிபரப்பும்போது அவை சாதாரண மக்களிடையே சமய உணர்வினை ஏற்படுத்த வழி பிறக்கின்றது.

### ஊடகங்களின் தன்மை

- இந்து சமய வளர்ச்சியில் பெரும் பங்களிப்பைச் செய்கின்ற நவீன தொடர்பாடல் ஊடகங்கள் வெளியிடும் கருத்துக்கள் ஆதாரபூர்வமானவையாக இருத்தல் வேண்டும்.
- மூலாதாரங்களில் இருந்து தகவல்கள் பெறும்போது, அவை உண்மைத் தன்மையும் நம்பகத் தன்மையும் உடையனவாக இருத்தல் வேண்டும்.
- ஊகம், கற்பனை முதலானவற்றைத் தவிர்த்து, நம்பகத் தன்மை உடையவற்றை மட்டும் மக்கள் முன் கொண்டு செல்ல வேண்டும்.
- தார்மீகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்:

படி I : • ஊடகங்கள் என்னும் தலைப்பில் ஒரு பகுதியைத் தெரிவுசெய்து, எடுத்துக்காட்டுகள், படங்கள், உண்மைக்கருவிகள் என்பவற்றைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு விருப்பை ஏற்படுத்தும் விதத்தில் முன்வையுங்கள்.

படி II : • இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்களின்பங்களிப்பு - என்னும் தலைப்பின் கீழ் தகவல்களைச் சேகரிக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். இணையத்தளத்தினூடாகவும் தகவல்களைச் சேகரிக்க இடமளியுங்கள்.

படி III : • இரு குழுக்களாக்கி, ஐந்து பேர் வீதம் தெரிவு செய்து, மேற்படி தலைப்பில் கருத்துக்களை முன்வைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

படி IV : • முன்வைத்த கருத்துக்களைத் தொகுத்து ஆக்கமாகத் தயாரித்து, காட்சிப்படுத்துமாறு கூறுங்கள்.

### மேலதிக வாசிப்புக்குரியவை :

இரண்டாவது உலக இந்து மகாநாட்டுச் சிறப்பு மலர் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, 2003

பத்திரிகை இயல் - கலாநிதி. தங்கமாணிக்கம்

## • பாடசாலை மட்டக் கணிப்பீடு - அறிமுகம்

கற்றல், கற்பித்தல், மதிப்பீடு ஆகியன கல்விச் செயன்முறைகளின் முக்கிய மூன்று கூறுகளாகும் என்பதையும், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தை அறிய கணிப்பீட்டையும் மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என்பதையும் எல்லா ஆசிரியர்களும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவை ஒன்றன் மீது ஒன்று செல்வாக்குச் செலுத்தும் அதேவேளை ஒவ்வொன்றும் மற்றையவற்றின் முன்னேற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது ஆசிரியர்கள் யாவரும் அறிந்த உண்மையாகும். தொடர் (நிதமும் நிகழும்) கணிப்பீட்டு கோட்பாடுகளுக்கிணங்க கற்றல் நடைபெறும்போதே கணிப்பீடும் இடம்பெற வேண்டும். இது கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் ஆரம்பப்பகுதி, இடைப்பகுதி, இறுதிப்பகுதி ஆகிய எந்த ஒரு சமயத்திலும் இடம்பெறலாம் என்பதை ஆசிரியர்கள் விளங்கிக் கொள்வது அவசியமாகும். தமது மாணவரை மதிப்பிட எதிர்பார்க்கும் ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு ஆகியன தொடர்பான ஒழுங்கான திட்டமொன்றைப் பயன்படுத்தல் அவசியம்.

பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டமானது ஒரு பரீட்சை முறையோ சோதனை நடத்துவதோ அல்ல. அது மாணவர்களது கற்றலையும், ஆசிரியர் களது கற்பித்தலையும் மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முறைமையாகும். ஆதலால் மாணவர்களுக்கு அருகில் இருந்து அவர்களுடைய பலங்களையும் பலவீனங் களையும் இனங்கண்டு அவற்றிற்குப் பரிகாரம் கண்டவாறு மாணவர்களை அவர்களது உச்ச வளர்ச்சி மட்டத்தை அடையச் செய்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத் திட்டமுமாகும்.

கற்றல் - கற்பித்தற் செயன் மூலம், தேடல் செயன்முறையின்பால் மாணவர்கள் வழிப்படுத்தப் படுகின்றனர். பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும்போது மாணவர்களிடையே ஆசிரியர் சென்று அவர்கள் செய்யும் வேலை களை அவதானித்து வழிகாட்டலை வழங்கிச் செயற்படல் வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இங்கு மாணவர்கள் தொடர்ச்சியாகக் கணிப்பீட்டுக்கு உள்ளாக்கப்படுவதோடு மாணவரது ஆற்றல், அபிவிருத்தி என்பன எதிர்பார்த்தவாறு நடைபெறுகின்றதா என்பதை ஆசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மாணவருக்குத் தக்க அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து, அவற்றை அவர்கள் சரியாகப் பெற்றுக் கொண்டார்களா என உறுதிப்படுத்தல் கற்றல் - கற்பித்தல் ஊடாக நிகழ வேண்டும். அத்தோடு அதற்குத் தக்க வழிகாட்டல் வழங்கப்பட வேண்டும். கணிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு இரண்டு வகையான வழிகாட்டல்களை வழங்க முடியும். அவை பின்னூட்டல், முன்னூட்டல் என்பனவாகும்.

மாணவர்களின் பலவீனங்களையும் இயலாமைகளையும் கண்டறிந்தபோது அவர்களது கற்றல் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காகப் பின்னூட்டலையும் மாணவர்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் இனம் காணும்போது அவற்றை மேன்படுத்த முன்னூட்டலையும் வழங்குவதும் ஆசிரியரின் கடமையாகும்.

கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெற்றிக்காக பாடநெறியின் நோக்கங்களுள் எந்த நோக்கத்தை எந்த மட்டத்தில் நிறைவேற்ற முடிந்தது என்பதை இனங்காணல், மாணவர்களுக்கு அவசியமாகின்றது. கணிப்பீடுகள் மூலம் மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானித்தல் ஆசிரியரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள், ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட வேறு பிரிவினர்களுக்கு மாணவர்களின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை அறிவிப்பதற்கு ஆசிரியர் முனைய வேண்டும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை, தொடர்ச்சியாக மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்த வாய்ப்பளிக்கும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையாகும்.

மேற்படி நோக்கத்துடன் செயற்படும் ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையையும் மாணவர்களின் கற்றல் செயன்முறையையும் மேலும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கு வினைத்திறன் மிக்க கற்றல் - கற்பித்தல், மதிப்பிடல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படுத்தத்தக்க அணுகுமுறை வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக ஆசிரியர்களுக்கு தேசிய கல்வி நிறுவனத்தினாலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் விளக்கமளிக்கப்பட்ட முறைகளாகும். எனவே, அவை தொடர்பாக பாடசாலைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் போதிய அறிவூட்டம் பெற்றிருப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அணுகுமுறை வகைகள் வருமாறு:

1. ஒப்படைகள்
2. செயற்றிட்டங்கள்
3. அளவாய்வுகள்
4. தேடியாய்வுகள்
5. அவதானிப்புக்கள்
6. கண்காட்சி / முன்வைத்தல்கள்
7. களச் சுற்றுலாக்கள்
8. குறுகிய எழுத்துப் பரீட்சைகள்
9. அமைப்புக் கட்டுரைகள்
10. திறந்த நூல் சோதனைகள்
11. ஆக்கச் செயற்பாடுகள்
12. செவிமடுத்தல் சோதனைகள்
13. செய்முறைச் செயற்பாடு
14. பேச்சுக்கள்
15. சுய ஆக்கங்கள்
16. குழுச் செயற்பாடுகள்
17. எண்ணக்கருப் படங்கள்
18. இரட்டைப் பதிவு - ஜேர்னல்
19. சுவர்ப் பத்திரிகைகள்
20. வினா - விடை நிகழ்ச்சிகள்
21. வினா - விடைப் புத்தகங்கள்
22. விவாதங்கள்
23. குழுக் கலந்துரையாடல்கள்
24. கருத்தரங்குகள்
25. உடனடிச் சொற்பொழிவு
26. பாத்திரமேற்று நடித்தல்

அறிமுகம் செய்யப்பட்டுள்ள மேற்படி கற்றல் - கற்பித்தல், மதிப்பீட்டு முறைகள் அனைத்தையும், எல்லா பாடங்களினதும் எல்லா அலகுகளுக்காகவும் பயன்படுத்த முடியும் என எதிர் பார்க்கப்படவில்லை. தமது பாடத்திற்கும் குறித்த பாட அலகிற்கும் பொருத்தமான வகைகளைத் தெரிவு செய்து கொள்வதற்கு அறிவூட்டம் பெற வேண்டும். அதற்கமைய அவற்றைத் தெரிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தமது மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை கணிப்பிடப் பயன்படுத்தக்கூடிய கற்றல் - கற்பித்தல் மற்றும் கணிப்பீட்டு வகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் தமது மாணவர்களின் முன்னேற்றத் திற்காக அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தல் வேண்டும். இவற்றைப் பயன்படுத்தாது தவிர்த்தல் மாணவர் தமது அறிவாற்றல் மற்றும் உள எழுச்சி, உள இயக்கத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கும் அவற்றை வெளிப்படுத்துவதற்கும் தடையாக அமையும்.